# அச்சாணி

## பரிசளிப்பு விழா சிறப்பு மலர்

## 2005 - 2007



## தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்

## திருகோணமலை

## 1880 - 2008

128

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாணி

## பரிசளிப்பு விழா
## சிறப்பு மலர்
## 2005 - 2007

தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்

திருக்கோணமலை.

1880 - 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

போற்றுவோம் போற்றுவோம் புனிதகல்வியை
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் எங்கள் பள்ளியை
சாற்றுவோம் ஆற்றுவோம் பெரும் பணிகளை
ஏற்றுவோம் ஏற்றுவோம் கல்விநிலையினை
(போற்றுவோம்)

மெதடிஸ்த மிஷனரிந்த கூடமெங்கள் கலையகம்
மதங்கடந்து மொழிகடந்து நிலையுயரந்த நிற்குதே
கவின்கலை மொழிவளம் தொழில்முறை உயர்த்தியே
கணிதத்தோடு ஆங்கிலம் மனையியலும் பயிலுவோம்
(போற்றுவோம்)

படிந்துரை நாரைகள் பறந்திடும் வயல்களும்
தெங்குடன் பனைகளும் தொழில்வளம் பெருக்கிடும்
கடல்தரு பொருட்களும் மலிந்ததெங்கள் சல்லியில்
சாரலில் அமைந்த சாம்பல்தீவு எங்கள் பிறப்பிடம்
(போற்றுவோம்)

பாரிடை பேரிடை புகழுடையூரிலே
சீருடை வீருடை ஏருடை வீட்டிலே
தாயிடை பேரிடை போயிடை தீர்க்கவே
கால்நடை களிநடை பயின்று வந்து கற்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி / சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்

## MOTTO
## மகுட வாசகம்

**EDUCATION DISCIPLINE DEVOTION**

" கல்வி ஒழுக்கம் உழைப்பு "

## VISION
## நோக்கக் கூற்று

**FRIENDLY AND PEACEFUL SOCIETY**

" நட்புறவோடு கூடிய அமைதியான சமூகம் "

## MISSION
## பணிக்கூற்று

**ENABLING THE SOCIETY TO MEET THE CHALLENGES OF THE MODERN WORLD**

" நவீன உலகில் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

சிவ பூமி என்று திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட இலங்கையின் தக்ஷணகைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருகோணமலையில் சாம்பல்தீவு எனும் எழில்மிகு கிராமத்தில் இருக்கும் தி/சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலம் நீண்ட காலமாக அந்த ஊரில் வசிக்கும் மக்களுக்கு கல்வி புகட்டி அவர்கள் பல்கலைகழகத்திற்கு சென்று படிப்பதற்கு ஓர் அத்திவாரமாக இயங்கி வருகிறது. இந்தப் பாடசாலையின் வளர்ச்சியும் அதில் கல்வி கற்றவர்களின் தகைமையும் பாராட்டத்தக்க ஓர் விடயம் என கூறலாம்.

இப் பாடசாலையில் கடந்த சில காலமாக கல்வி துறையிலும் சரி, விளையாட்டு துறையிலும் சரி, கலைத் துறையிலும் சரி, முதன்மை அடைந்த மாணவ, மாணவிகளுக்கு ஊக்குவிக்குமுகமாக எதுவித விழாக்களும் நடைபெறாமல் இருந்ததை நிவர்த்தி செய்து தற்போதைய அதிபரும் அவரைச் சூழ்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து இவ்வாண்டு நடாத்தப்பட இருக்கும் பரிசளிப்பு விழா சிறப்பாக நடந்தேற வேண்டும். என எல்லாம் வல்ல பத்திரகாளி அம்பாளை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

**பிரம்மஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக்குருக்கள்**
**திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்தேவஸ்தான**
**ஆலய பிரதம குரு ஆதீனக்கர்த்தா வேதாகமாமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

மிகவும் நீண்ட கால (128 வருடங்கள்) கல்விப்பாரம்பரியத்தைக் கொண்ட தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலய பரிசளிப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தின் கிழக்கே அமைந்துள்ள சாம்பல்தீவுப் பிரதேசமானது இயற்கை வனப்பிற்கும். மண்வளத்திற்கும் கடின உழைப்பிற்கும் பெயர்பெற்ற பிரதேசமாகும். அத்தகைய மக்கள் மத்தியில் கல்விக் கண்ணைத் திறக்கும் வண்ணம் மெதடிஸ்த மிஷனரிமார்களினால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை. இன்று வரைக்கும் இப்பிரதேச மாணவர்களின் கல்விப் பசியினைத் தீர்ப்பதில் முன்னிலைப் பாடசாலையாகத் திகழ்வது கண்டு மனமகிழ்வு கொள்கின்றேன்.

நீண்ட இடைவெளியின் பின்னர் நடைபெறும் இப்பரிசளிப்பு நிகழ்வு மாணவர்களின் வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்நாட்களில் மாணவர்கள் அடைந்து வருகின்ற பல்தேர்ச்சி மட்டமானது மேலும் உயர்ச்சி அடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன். இவ்விழாவில் பரிசு பெறும் அனைத்து மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

கல்விதான் நிலையான நீடித்த, அழகு. இதனையே நாலடியார் பின்வருமாறு கூறுகின்றார்.

குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுநிலைமையால்
கல்வியழகே அழகு.

அத்தகைய காலத்தால் அழியாத, சிதைவுறாத கல்வியினை வழங்கும் பாடசாலை அதிபர், ஆசிரியப் பெருமக்களை வாழ்த்துகின்றேன். அவர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவை இப்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வளம் சேர்க்க வேண்டுமென ஆசிக்கின்றேன்.

**எல்லாம் வல்ல இறைவன் உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பாராக!**

**அதிவண. ஜோ. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை,**
**திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

நீண்ட காலத்திற்கு பிறகு சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நடைபெறுவதை அறிந்து பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் நீண்ட காலமாக சாம்பல்தீவு கிராமத்திலும் அண்டை பகுதிகளிலும் வாழும் தமிழ் மாணவ, மாணவிகளுக்குத் கல்வித்துறையில் அளப்பெரிய சேவையை ஆற்றி வந்திருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பாடசாலையில், இதற்கு முன் கடமை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்களை நினைவு கூர்வது மிகப்பொருத்தமானது என்று நினைக்கின்றேன்.

கிராமங்களில் அமைந்திருக்கும் பாடசாலைகள், அந்தந்தக் கிராமங்களின் முன்னேற்றத்தில் பெரும் பங்களிப்பைச் செய்ய வேண்டிய கடப்பாடு உடையவைகள்.

சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் தொடர்ந்தும் கல்வித்துறையில் அரிய சேவை புரியுமென நாம் எல்லோரும் எதிர்பார்ப்பதுடன், சாம்பல்தீவு கிராமத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை செய்ய வேண்டுமென நாம் எல்லோரும் விரும்புகின்றோம்.

சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் கல்வித்துறையில் தொடர்ந்தும் அரிய பணி ஆற்ற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இரா.சம்பந்தன்**
பாராளுமன்ற உறுப்பினர்
திருகோணமலை மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலை மாவட்த்தில் விரல்விட்டு எண்ணத்தக்க பழைமை வாய்ந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் தி/ சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம் நூற்றாண்டு கடந்து கல்விப்பணிமூலமாக சமூக இணைப்பு நிலைக்களமாக அமைந்திருப்பது போற்றுதற்குரியது. இந்த நிலையில் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் பரிசளிப்பு விழாவினை ஒழுங்கு செய்து, அதனோடு தொடர்பு கொண்டதாக கல்விச் சமூகத்தினரின் ஆக்கங்கள் நிறைந்த மலரை வெளியிட்டு வைப்பது சிறப்பிற்குரியதாகும்.

ஒரு சமூகத்தின் அறிவு மேம்பாடு கலை, இலக்கியச் செழுமை, சிந்தனைக் கோலம் போன்றவற்றில் காத்திரமான பங்களிப்பு செய்யும் பாரியபொறுப்பு பாடசாலையைச் சார்ந்ததாகும். திருக்கோணமலை நகரத்தின் புறநகர்ப் பகுதியில் இப்பாடசாலை அமைந்திருந்த போதும் அண்மைக்காலங்களில் கற்றல், கற்பித்தல், நடவடிக்கைகளில் சிறந்த வகிபாகத்தைக் கொண்டுள்ளமை நோக்கத்தக்கதாகும். இன்னும் இப்பாடசாலையானது கல்வி மாற்றங்களுக்கு தன்னை முழுமையாக ஈடுபடுத்தி சாதனை புரிய வேண்டும். அதற்காக அனைவரும் அர்ப்பண சிந்தையோடு தொழிற்படல் வேண்டும். இத்தகைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெறவேண்டும்.

இப்பரிசளிப்பு விழா வினை ஒழுங்குபடுத்திய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு இவ்விழாசிறப்புற உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சி. தண்டாயுதபாணி**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர்**

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**கிழக்கு மாகாணம்**
**திருகோணமலை**
2008.08.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் 128 வருடகால பழைமை வாய்ந்தது. இப்பாடசாலைச் சமூகத்தையும் பாடசாலை பாரம்பரியங்களையும் நன்கு அறிவேன். இங்கு கல்வி பயிலும் மாணவச் செல்வங்கள் கல்வி நடவடிக்கைகளிலும் ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனை புரிந்துவருவது சிறப்பம்சமாகும்

மெதடிஸ்த மிஷனரிமார்களால் 1880 இல் சிறு ஓலைக் கொட்டிலில் ஆரம்பமான இவ்வித்தியாலயம் ஏராளமான கல்வி மான்களையும் நற்பண்பாளர்களையும் உருவாக்கி தந்துள்ளது. இப்பிரதேசப்பாடசாலைகளின் தாயாகவும் நடுநிலையமாகவும் இது விளங்கி வருகின்றது. 15வருட காலத்தின் பின்னர் மாணவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் பெருநோக்கோடு பரிசளிப்பு விழா அனைத்துத்தரப்பினரதும் பெருமுயற்சியோடு ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். அத்தோடு பரிசளிப்புவிழாவையொட்டி சிறப்பு மலர் வெளியீடு செய்யப்படுவது சாலப்பொருத்தமாகும். அந்த வகையில் விழா சிறப்படையவும் இம்மலர் சிறப்படையவும் வாழ்த்துவதோடு இப்பாடசாலை மென்மேலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல இறைவனின் இறையருளை வேண்டிநிற்கிறேன்.

**திரு.கு.திலகரெட்ணம்**
**சிரேஷ்ட உதவிச் செயலாளர்**

**மாகாணக்கல்வி அமைச்சு,**
**கிழக்கு மாகாணம்**
**திருகோணமலை**
**2008.9.18**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message From The Rector Trincomalee Campus East

It Gives Great Pleasure In Sending This Message To The Magazine Published BY The T/Sampalthivu Maha Vidyalayam Trincomalee . This School Was Founded In 1880 By The American Missionary And Still Going Strong.

This School Had 50 Students At Beginning And Was Housed In A Cadjun Hut,

This School Had Its Bad Days During The Presence Of The Indian Peace Keeping Force In The Northern And Eastern Provinces In The Late 1980s For The LPKF Put One Of Camps In This School Is Being Development Gradually Now a Computer Center.

Three Students From This School Have Been Selected To The Universities. It Is Actively Involved In Extracurricular Activities And Has Won Many Prizes In The Literary Competition.

I, Being The Rector Of The Campus Pf EUSL as an Academic Wish This School Should And Will Pave Way To Produce More Graduates And Good Citizen.

I Whole Heartedly Congratulate The Principal And The Staffs Who Are Striving To Develop This School.

I am Sure This Magazine Will Be a Pleasant Reading as It Is informative And Interesting.

**N. Nagendrakumar.**
**Trincomalee Campus**
**Eastern University - Sri lanka**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் 128வது ஆண்டில் தடம்பதித்துள்ள இவ்வேளையில் 15 வருடங்களுக்குப் பின்னர் பரிசளிப்பு விழாவினை ஒழுங்குபடுத்தி அதனோடு தொடர்புபட்டதாக "அச்சாணி" என்னும் சிறப்பு மலரை வெளியிடுவது பாராட்டத்தக்கதாகும்.

இவ் வித்தியாலயம் 1880 தொடக்கம் இன்று வரை மாணவர்களுக்கு சிறந்த கல்விப் பாசறையாக விளங்கி வருவதை நன்கு அவதானிக்க முடிகிறது. கல்வி உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப பாடசாலைகள் தம்மை புடம் போட்டுக்கொள்ள வேண்டும். அர்ப்பணிப்பும் ஆற்றலும் முழுமையாகப் பயன்படுத்தப்படும் போது கல்வி நிலை உயரும் என்பது நிதர்ஷனமாகும்.

அந்த வகையில் இவ் விழாவினை ஒழுங்குபடுத்திய அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பெற்றோர்கள், பழையமாணவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மென்மேலும் இப் பாடசாலை மேன்மை பெற்று சிறந்து விளங்க வலயக்கல்வி அலுவலகம் சார்பாகவும் எனது சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.G.F லூயிஸ்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**

**வலயக்கல்வி அலுவலகம்,**
**திருகோணமலை.**
2008.09.18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தி/ சாம்பல்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த 15 வருடங்களின் பின்னர் மீண்டும் நடை பெறவுள்ளதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். பரிசளிப்பு விழாவுக்கான மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் பெருமகிழ்வடைகின்றேன். நீடூழி வாழ வாழ்த்துவது தமிழ் மரபு. அந்த வகையில் இப்பாடசாலையின் செயற்பாடுகளையிட்டு வாழ்த்த வேண்டிய பொறுப்பு அனைத்து கல்விச் சமூகத்திற்கும் உரியதாகும்.

இப்பாடசாலை கி.பி. 1880 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆரம்பத்தில் இது ஒரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையாகவும் காணப்பட்டதாக சம்பவத்திரட்டுப்புத்தக வாயிலாக அறிய முடிகின்றது. இப்பாடசாலை ஒரு பழம் பெரும்பாடசாலை. சல்லி, சாம்பல்தீவு, ஆத்தி மோட்டை ஆகிய பிரதேசமக்களின் கல்வி வளர்ச்சியில் இப்பாடசாலையின் பங்களிப்பு மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.

நீண்டகாலத்தின் பின்னர் (13 வருடம்) திரு.க. யோகானந்தன் பதவியேற்று கல்விச் செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்தியமையாலும், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகளின் அயராத முயற்சிகளினாலும் பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது. இதனைவிட தேசிய கல்வியியல் கல்லூரி, விபுலானந்தா இசை நடனக் கல்லூரி ஆகிய வற்றிலும் அனுமதி பெற்றுள்ளமையும் இப்பாடசாலையின் வளர்ச்சிப் படியை உறுதிப்படுத்தும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றிலும் மாணவர்கள் சிறந்த அடைவு மட்டங்களை எட்டியுள்ளமையும் பாராட்டுதற்குரியது.

இப்பாடசாலை மேலும் வளரவேண்டும். கல்விச் செயற்பாடுகள் மேலும் உரம் பெறவேண்டும் இவ்வாறான மாணவர் ஊக்குவிப்பு பெற்றோர் விழிப்புணர்வு விழாக்கள் இடம் பெறவேண்டும். எனக்கும் வாழ்த்த சந்தர்ப்பம் வழங்கிய பாடசாலை நிர்வாகத்திற்கு நன்றி கூறுவதுடன் மேலும் இப்பாடசாலை வளர எனது வாழ்த்துக்கள்.

**க. அரியநாயகம்,**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**திருக்கோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

எழில் கொஞ்சும் திருகோணமலையில் அமைந்திருக்கும் கிராமமான சாம்பல்தீவில் இந்துப் பண்பாட்டின் கலைக்கூடமாய் விளங்கிநிற்கும் தி/சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம் தனது நூற்று இருபத்தெட்டாவது வயதில் பரிசளிப்பு விழாவினை இனிதே நடாத்துவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீண்ட வருடங்களாக தூங்கி கிடந்த வித்தியாலயச் செயற்பாடுகள் தற்போது துளிர்ப்புப் பெற்றுள்ளதும் எல்லாத்துறைகளிலும் எம்பிள்ளைகள் சாதனை ஈட்டிவருவதும் எம் உள்ளங்களை குளிரவைக்கிறது. இதற்கெல்லாம் காரணமாக விளங்கும் மகா வித்தியாலயத்தின் அதிபர் திரு.க. யோகானந்தன் அவர்களை பாராட்டுவதுடன் அவரோடு தோளோடு தோள் நிற்கும் ஆசிரியர்களையும் மாணவச் செல்வங்களையும் நாம் யாவரும் உளமாறப் பாராட்டுகிறோம்.

மேலும் இக்கலைக்கூடம் எமது சமுதாயத்தின் பெருவளர்ச்சிக்கான விருட்சங்களை உருவாக்குவதில் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றுவதோடு ஒழுக்க விழுமியங்களில் உன்னத நிலை பெற்று விளங்குகிறது. இந்நிலை மேலும் செழிப்புற்று திருகோணமலையில் சிறந்த ஓர் பாடசாலை என்ற ஸ்தானத்தை அடைய எதிர்காலத்தில் சிறந்த நலன்களைப் பெற மனமார வாழ்த்துகிறேன்.

**திரு. சு. கிஷ்ணமூர்த்தி**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்தி சங்கம்
தி/ சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயக் கருத்து

கோணைநாதர் கோயில் கொண்ட கோணமாமலை நகரத்தின் வடக்கே தன் ஊரின் பெயரைச் சிறப்பாகக் கொண்ட தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் தனது 128வது ஆண்டிலே பல வெற்றிச் சாதனைகளைப் படைத்து வீறு நடை போடுகிறது. சாதனையாளர்களுக்கு விழா எடுக்கும் இப்பரிசளிப்பு விழாதனிலே இம்மலர் 1993ம் ஆண்டின் பின் இரண்டாவது மலராக மலர்கின்றது.

படைப்பாளிகளின் எண்ணங்களில் சிறகடித்த கருத்துக்களை சுமந்து வரும் மலராக "அச்சாணி" உருண்டோடும் தேரின் சக்கரத்தின் உயிர்நாடியாகும். இது பாடசாலையின் வளர்ச்சி ஓட்டத்தைப் பாதுகாக்கும். "அச்சாணி இல்லாததோர் முச்சானும் நகராது" என்பது கருத்து. வளர்ந்துவரும் காலங்களுக்கு இம்மலர் ஓர் கலங்கரை விளக்காகவும், கிளைகள் விட்டு விருட்சிகமாகவும், பாடசாலையின் வளர்ச்சிக்கு இம்மலர் பக்க பலமாக அமையும். அந்த வகையில் பெரியோர்களின் ஆசியும், வாழ்த்தும் மேலோங்க மாணவ, ஆசிரியர்களின் ஆக்கங்கள் துணைபுரிய இம்மலர் மலர்ந்து பெருமை பெறுகின்றது.

"புத்தகம் என்பது எத்தனை வித்தகம் – நீ
பயனுற மற்றோர் செய்த தவமல்லவா – புத்தகம்
அட்டையிட்ட அமுதமல்லவா – புத்தகம்
உனக்குள் ஒரு சூரியனல்லவா – புத்தகம்
கலங்கரை விளக்கமல்லவா – புத்தகம்
காலத்தின் கருத்தல்லவா – புத்தகம்"

எனும் கூற்றுக்கு அமைய பல்வேறு ஆக்கங்களையும் தாங்கி இம்மலர் மலர்ந்துள்ளது.

இவ் அரிய பெரிய முயற்சிக்கு பக்கபலமாக இருந்து உழைத்திட்ட அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி**

**இதழாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவினர் - 2008

திரு. க. யோகானந்தன்

திருமதி. ச. சௌந்தரராஜன்

திரு.த. விஜேயராஜேந்திரன்

திரு. ந. தயாளசிங்கம்

திரு.க. சிவகாளிதாஸ்

திரு. தி. பார்த்தீபன்

திரு.ச. வின்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் கிழக்கிலங்கையில் உள்ள திருகோணமலையில் புறநகர்ப்பகுதியில் அமைந்துள்ளது. கோணேசர் கல்வெட்டினோடு தொடர்பு கொண்ட மா, பாலா வாழை என்கின்ற முக்கனிகள் நிறைந்த எழில்மிகு கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள இப் பாடசாலையின் வரலாற்றில் இன்றைய நாள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாளாகும். 1880களில் மெதடிஸ்த மிஷனெறிமார்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு திருகோணமலை மாவட்டத்தில் விரல் விட்டு எண்ணத்தக்க பழமை வாய்ந்த பாடசாலைகளில் ஒன்றாக கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இவ்வித்தியாலய வரலாற்று ஏடுகளில், பலர் அதிபர்களாய் இருந்து பெரும்பணியாற்றியுள்ளனர். சிலருடைய பெயர்கள் எமக்கு கிடைக்கப்பெற்ற போதும் பலருடைய பெயர்கள் காலவெள்ளத்தால் அள்ளுண்டு போயுள்ளது. ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி இப்பாடசாலை வளர்ந்துள்ள நிலையில் அத்தகைய பெருந்தகைகளின் தன்னலமற்ற கல்விச்சேவையையும் அர்ப்பண சிந்தனைகளையும் ஒருகணம் நினைத்துப்பார்ப்பது சாலப்பொருத்தமானதாகும்.

இப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியரான நான் திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியிலிருந்து வந்து 2004 ஜனவரியில் பாடசாலையின் அதிபராகப்பொறுப்பேற்றிருந்தேன். கிராமம் ஒன்றிலிருந்து உருவாக்கப்பட்ட எனக்கு இக்கிராமம் பெரும் விருந்தாக அமைந்திருந்தது. பலருடைய ஒத்துழைப்போடு பிரச்சினைகளும் இடர்பாடுகளும் இனங்காணப்பட்டன. பெற்றோர்கள் தோள் கொடுத்தார்கள், பழைய மாணவர்கள் ஒத்துழைத்தார்கள், ஆசிரியர்கள் அர்பணித்தார்கள் பாடசாலை சகல துறைகளிலும் பெரு வளர்ச்சி கண்டது.

## வகுப்புக்களும், பரீட்சை நிலையமும்

தரம்-01 தொடக்கம் தரம்-13 வரையிலான வகுப்புக்களைக் கொண்ட இப்பாடசாலையில் பரீட்சை நிலையம் இல்லாமை பெரும் குறையாகக் கருதப்பட்டு வந்தது. க.பொ.த சாதாரண தரம் மற்றும் தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்காக எமது மாணவர்கள் நகரத்திற்குச் சென்று பரீட்சைகளுக்குத் தோற்றும் நிலை இனங்காணப்பட்டு 2004 ஆம் ஆண்டு தரம்-05, தரம்-11 வகுப்புகளுக்கு பரீட்சை நிலையம் அமைத்துக்கொடுக்கப்பட்டது. இந்த வகையில் வலயக்கல்வி அலுவலகத்தின் பணி போற்றுதற்குரியதாகும். இதில் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. கு.திலகரெட்ணம் நன்றிக்குரியவர்.

### இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

வருடாந்த இல்ல மெய்வல்லுனர்ப்போட்டிகள் நடாத்தப்பட்டு வந்த நிலையில் மாணவர்களை வலயமட்ட, மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு தாயார்படுத்தி அனுப்பி வைத்து வெற்றி பெற வைத்ததோடு உடற்கல்விக்கென ஆசிரியர்கள் இல்லாத நிலையிலும் மாகாணமட்டப் போட்டிகளுக்கும் மாணவர்கள் நன்கு தயார்படுத்தப்பட்டனர். இவற்றோடு முத்தமிழ்மன்றம்,அமைக்கப்பட்டு இலக்கிய ஆற்றலை வளர்த்தெடுக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுவந்தனால் தமிழ்த்தினப்போட்டிகளில் வலயமட்டம் மாவட்டமட்டம் மாகாணமட்டம் என மாணவர்களின் சாதனை விரிவுபடுத்தப்பட்டு வந்தது. பாடசாலை நிலையில் "தமிழ்த்தின விழா" ஒழுங்குபடுத்தப்பட்டு சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த விழாவினை பெற்றோர்கள் கண்டுகளிக்கும் வண்ணம் ஒழுங்குபடுத்தியமை விஷேடமாக குறிப்பிடத்தக்கதாகும்.

### நடனக்கலை அறிமுகமும் - பெறுபேறுகளும்

2004 வரை நடனபாடத்தை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யாத நிலை காணப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச்சங்க நிதியின் மூலம் நடனப்பாடத்திற்கென ஆசிரியை ஒழுங்குபடுத்தப்பட்டார். பின்னர் நிரந்தர நடன ஆசிரியரின் நியமனத்தோடு கா.பொ.த உயர்தர வகுப்புக்கென நடனப்பாடம் எமது பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதில் இணைந்து கல்வி கற்ற செல்வி.ஜெனிபர் ஒக்கஸ் என்பவர் சிறந்த பெறுபேறு பெற்று 2006 இல் மட்டக்களப்பு கல்வியல் கல்லூரியில் நடன மாணியை கற்று வருவது பாடசாலை பெற்றுக்கொண்ட பெருவெற்றியாகும். காலத்திற்கு காலம் நடன ஆசிரியைகள் நகரத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற போதும், பல்வேறுபட்ட முயற்சியின் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி.உதயசாந்தி என்ற ஆசிரியை இப் பாடசாலைக்கு நியமனம் செய்யப்பட்டு நடனக்கலை சிறப்பாக வளர்ச்சி நிலை அடைந்து வருகின்றது.

2004 இல் இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் காணரமாக இப் பாடசாலை நலன்புரி நிலையமாக செயற்பட்டதனால் பல்வேறுபட்ட பாதிப்புக்களைப் பெற்றிருந்தது. மலசலகூட வசதிகள் மாணவர்களுக்கு இல்லாத நிலையில் சுனாமியின் பின்னர் இடம்பெற்ற புனருத்தாரன நடவடிக்கைகள் மூலம் போதியளவு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன. இவை மாணவர்களுடைய கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவின அத்தோடு வகுப்பறைகள் திருத்தியமைக்கப்பட்டன. தளபாட பற்றாக்குறைகள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டு மாணவர்களுடைய கற்றல் மகிழ்ச்சிக்குரியதாக மாற்றப்பட்டது. இதற்கு People in need நிறுவனம் உதவி புரிந்துள்ளது.

## கற்றல் கற்பித்தல் சூழல்

கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் அகச்சூழல், புறச்சூழல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. மாணவர்களும் ஆசிரியர்களும் விரும்பும் சூழல் பாடசாலை வளவில் மட்டுமன்றி வகுப்பறை மட்டத்திற்கும் எடுத்துச்செல்லப்பட்டது. 567 மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் 29 நிரந்தர ஆசிரியர்களும் 01 தற்காலிக இடம்மாற்றம் பெற்ற ஆசிரியரும் அர்ப்பண சிந்தனையோடு கடமைபுரிந்து வருகின்றார்கள். போர் அனர்த்தம் காரணமாகவும் பெற்றோரை இழந்து இடம்பெயர்ந்துள்ள நிலையில் அன்னை சாரதா இல்லம், கல்விகரிசனை நிலையம் ஆகியவற்றில் உள்ள மாணவர்கள் இங்கு கல்வி பயின்று வருகின்றார்கள். கல்விச் செயற்பாட்டு வளர்ச்சி காரணமாக நகரை நோக்கி மாணவர்கள் கற்கச் செல்வது கணிசமானளவில் குறைவடைந்துள்ளது.

## கணினிக்கற்கை நிலையமும் - பல்லூடக நிலையமும்

நவீன உலகின் சவால்களை வெற்றிகொள்ளும் பெரு நோக்கோடு SEMP-2 செயற்றிட்டத்தின் மூலம் கணனி கற்கை நிலையம் அமைத்துத் தரப்பட்டுள்ளது. இதற்கான கணனிகள் வந்து சேராத நிலையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் கணினி இயந்திரங்கள் பெறப்பட்டு செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. HOPE FOR CHILDREN நிறுவனத்தின் உதவித்திட்ட மூலம் திருகோணமலை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 03 பாடசாலைகளில் எமது பாடசாலையும் தெரிவுசெய்யப்பட்டதனால் பல்லூடக இயந்திரம், அலுவலக உபகரணங்கள் பெறப்பட்டன. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.துரைரெட்ணசிங்கம் அவர்களால் ப்ஃக்ஸ் இயந்திரம் பெற்றுத் தரப்பட்டது.

## பாடசாலை நூலகம்

வகுப்பறைக் கட்டடத்தில் உள்ள நூலகம் H.N.B இன் 100 பாடசாலை நூலக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டு நூல்களும் பெற்றுத்தரப்பட்டன. இதற்கென கணினி இயந்திரமும் பெற்றுகொள்ளப்பட்டது. இது தவிர மாகாணக்கல்வித் திணைக்களத்தின் மூலமாகவும் புத்தகங்கள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டன. CHA நிறுவனம் YMCA போன்ற நிறுவனங்கள் மூலமாகவும் நூலகத்திற்கு பல உதவிகள் பெறப்பட்டுள்ளன. இதன் மூலமாக மாணவர்களின் வாசிப்பு பழக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளும் சீர்பெற்றுள்ளன.

## சேமிப்பு பழக்கத்தை மேம்படுத்தல்

மாணவர்களின் சேமிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் முகமாக ஹற்றன் நஷனல் வங்கியின் பாடசாலைக்கிளை திறந்து வைக்கப்பட்டு சேமிப்பு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதேச, பிராந்திய முகாமையாளர்களின் ஒத்துழைப்போடு பாடசாலை நிறைவான பயன்பாடுகளைப் பெற்றுவருகின்றது. குறிப்பாக விழாக்களின் போது வங்கி பூரணமான நிதியுதவியினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலை சுவர்களை அலங்கரித்தல்.

பாடசாலை மதில் முன்பிருந்த நிலையை விட உயர்த்தப்பட்டது. இதன் பின்னர் சுவர்களை அலங்கரிக்க நினைத்திருந்த வேளையில் திருகோணமலை எகெட் ஹரித்தாஸ் நிறுவப்பணிப்பாளரின் உதவி பெறப்பட்டு பாடசாலை வெளிப்புறச் சுவர்கள் வர்ணங்களிலான ஓவியங்கள் வரையப்பட்டன. இதில் நகரில் உள்ள பிரபல பாடசாலைகளும் இணைக்கப்பட்டதோடு எமது பாடசாலை மாணவர்களும் சித்திரபாட ஆசிரியர்கள் இல்லாத நிலையில் சிறப்பாக பங்கு பற்றி ஓவியங்கள் வரைந்துள்ளார்கள்.

### பாண்ட் வாத்தியக் குழு

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி மூலமாக 2005 இல் பாண்ட் வாத்தியக்கருவிகள் பெற்றுத்தரப்பட்டன. இவ் வருடம் வரை பல நிறுவனங்களை அணுகிய போதும் சீருடைகளை தயார்படுத்தும் முயற்சி கை கூடாத நிலையில் மாணவர்களிடமிருந்து பணம் பெறப்பட்டு அழகிய சீருடைகள் தைக்கப்பட்டன. அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பல்கலைக்கழக வளாக திறப்பு விழாவில் எமது பாண்ட் வாத்தியக் குழு பங்கு கொண்டு பலருடைய பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### விஞ்ஞான ஆய்வுகூட முயற்சிகள்

விஞ்ஞான ஆய்வுகூடம் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் பேருதவியினால் திருத்தியமைக்கப்பட்டது. இதன் விளைவாக விஞ்ஞான பாடத்தில் ஏராளமான மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார்கள். 2006இல் இடம்பெற்ற வலயமட்ட விஞ்ஞானப் போட்டியில் தரம்-07யைச் சேர்ந்த செல்வி.சஜித்தா சிவராஜா என்பவர் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். JICA செயற்றிட்டத்தில் உள்வாங்கப்பட்ட எமது பாடசாலை விஞ்ஞான-கணிதபாடங்களில் சிறப்பான இடங்களை பெற்றமை சிறப்பிற்குரியதாகும். கணித-விஞ்ஞான மன்றம் ஆரம்பிக்கப்பட்டு செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

### சமூகக் கற்கை நிலையம்

திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் தேர்தெடுக்கப்பட்டு கற்கை நிலையம் அமைக்கப்பட்ட மூன்று பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாகும். பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட மாணவிகளுக்கு மாலைநேரத் தையல்ப்பயிற்சி, போதனாசிரியரால் நடாத்தப்படுகின்றது. இதில் 25 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். அத்தோடு நிலையத்தின் மூலமாக பல செயற்பாடுகளும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. நெக்டெப் நிறுவனம் இதற்கான கட்டடத்தை அமைத்துத் தந்துள்ளது.

### சமூக உறவும் - வெளியார் தொடர்பும்

இப் பிரதேச சமூகத்திற்காக பாடசாலை முழுமையாகத் திறக்கப்பட்டுள்ளது. சமூக உறவு நிலை சீராக அமைந்து செல்வதால் பாடசாலையும் சமூகமும் அடிக்கடி கைகோர்த்துச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. பெற்றோர்களை பாடசாலை உள்வாங்கும் நோக்கோடு கலை நிகழ்ச்சிகளும்,ஒன்று கூடலும் அடிக்கடி நடைபெற்று வருவதைக் குறிப்பிடலாம். வெளிநாடுகளிலுள்ள மற்றும் உள்ளூரிலுள்ள பழைய மாணவர்களும் கணிசமான பங்களிப்பை வழங்கிவருவது சிறப்பானதாகும். நேசக்கரம் நீட்டிவருவோர் நேசமாக வரவேற்கப்படுகின்றார்கள். அண்மையில் கிடைத்த புது உறவாக திருகோணமலை வளாக முதல்வரதும் ஏனைய விரிவுரையாளர்களினதும் உறவுகளைக் குறிப்பிடலாம். போட்டிகளையும், ஆற்றுகை வெளிப்பாடுகளையும் மாணவர்களிடத்தே வெளிக்கொணர வளாகத்தின் உதவி பெறப்படுகின்றது. அயற்பாடசாலைகளோடு உறவு நிலையை மேம்படுத்தி இப்பாடசாலை சிறந்த வளர்ச்சிப்போக்கை வெளிக்காட்டிவருகின்றது.

### பாடசாலைத் தோட்டமும் - விவசாய நடவடிக்கைகளும்

எமது பாடசாலைச் சூழல் விவசாயச் சூழலாக அமைந்திருப்பதனால் ஏராளமான மாணவர்கள் விவசாயப்பாடத்தில் நாட்டம் கொண்டு காணப்படுகின்றார்கள். இத்தகைய ஆர்வம் பாடசாலைத் தோட்டமாக பிரவாகம் பெற்றுள்ளது. இத் தோட்டத்திலிருந்து வாழை.பலா போன்றவற்றோடு காய்கறிகளும் சிறப்பான விளைச்சலைத் தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**<u>சரஸ்வதி ஆலயம்</u>**

சரஸ்வதி ஆலயம் இருந்த இடம் மாற்றப்பட்டு புதிய ஆலயம் அமரர் ஸ்ரீமத் தந்திரதேவா மஹராஜ் அவர்களின் நிதியுதவியோடு 2006.02.03 திறந்து வைக்கப்பட்டது. அத்தோடு "கீதோபதேசம்" சுவரில் வரைந்து காட்சிப்படுத்துவதற்கும் மஹாராஜ் அவர்கள் நிதியுதவி வழங்கியமை நினைவு கூரத்தக்கதாகும்.

**<u>ஒன்றுகூடல் மண்டபம்</u>**

நீண்ட காலமாக இருந்து வந்த குறைபாடான ஒன்றுகூடல் மண்டபத்தினை நிக்கொட் நிறுவனத்தினர் நிர்மாணித்து வழங்கியுள்ளனர். இதற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்கள் உறுதுணையாக செயற்பட்டுள்ளார். இதனை பாடசாலை நன்றியோடு நினைவு கூருகின்றது.

**<u>பாடசாலைச் சின்னமும் கழுத்துப்பட்டியும்</u>**

கல்வியுலகில் ஏற்பட்டு வரும் பாரிய மாற்றங்களுக்கு எம்மையும் தயார்படுத்தும் நோக்கோடு இந்துக்கல்லாரி ஆசிரியர் திரு.அருள்பாஸ்கரன் என்பவரின் உதவியோடு பாடசாலைச் சின்னம் வடிவமைக்கப்பட்டது. ஆத்தோடு எமது பாடசாலையின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் முகமாக மாணவர்களுக்கென புதிய கழுத்துப்பட்டி கொள்வனவு செய்வதற்குப் பாடசாலை அபிவிருத்தி சங்கமும் பெற்றோர்களும் பேருதவி புரிந்துள்ளனர்.

**<u>ஜெய்க்காச் செயற்பாடும் மாற்றங்களும்</u>**

2007ம் ஆண்டு எமது பாடசாலை ஜெய்க்கா செயற்றிட்டத்தில் 2ம் கட்டப் பாடசாலைகளை சேர்த்துக் கொள்ளல் நிகழ்ச்சித்திட்டத்தின் படி உள்வாங்கப்பட்டது. இதன் காரணமாக தரவட்டங்கள் அமைக்கப்பட்டு பாடசாலை அழகுபடுத்தப்பட்டது. இத்தோடு பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் மாணவர்களிடையே கணித விஞ்ஞான அறிவு பாரிய அளவில் விருத்திசெய்யப்பட்டது. ஆரம்ப காலத்தை விட இச்செயற்றிட்டத்தால் பெற்றோர்கள் பாடசாலை செயற்பாடுகளில் அதிகமாக ஈடுபாடு காட்டத்தலைப்பட்டனர்.

**<u>பழைய மாணவர் அமைப்பு</u>**

நீண்ட காலமாக இல்லாதிருந்த பழைய மாணவர் சங்கம் 2004ம் ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட்டது. இதனை வளர்த்துச் செல்லும் நோக்கோடு நீண்டகால இடைவெளியின் பின் "இசை நிகழ்ச்சி" ஒழுங்குபடுத்தபட்டு நிதி சேகரிப்பு இடம்பெற்றது. இது மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்கள் பாடசாலையோடு தொடர்பு கொண்டு அன்பளிப்புப் பொருட்களையும் நிதியுதவிகளையும் வழங்கியுள்ளார்கள்.

**மாலைநேர வகுப்புக்கள்**

திருகோணமலை மாவட்ட சிறுவர் அமைப்பு **(TCF)** கனடா நிறுவனத்தின் உதவியோடு தரம் -05, தரம் -10, தரம் -11 ஆகிய வகுப்புக்களுக்கு மாலை நேர வகுப்புக்கள் கடந்த 2005 தொடக்கம் இன்று வரை சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன. இதற்கான ஆசிரியர் கொடுப்பனவை அந் நிறுவனமே பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு திருகோணமலை எகெட் கரித்றாஸ் நிறுவனத்தின் கல்விப் பிரிவு தரம் -11 மாணவர்களுக்கு கருத்தரங்கும் தரம்-08, தரம்-09 மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் போன்ற பாடங்களையும் தமது நிதி மூலம் செயற்படுத்தி வருவது சிறப்பானதாகும். இந்த இரு நிறுவனங்களுக்கும் பாடசாலை பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் நலனோம்பல் செயற்பாடு

மாணவர்களின் நலனோம்பலை விருத்திசெய்யும் முகமாக பாடசாலையில் புதிய "சிற்றுண்டிச்சாலை" அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக ஏராளமான மாணவர்கள் பயன்பெற்று வருகின்றார்கள்.

## செயற்றிட்டங்கள்

எமது வித்தியாலத்தில் 5 ஆண்டுத்திட்டம், இடைநிலைக்கல்வி நவீனமயச்செயற்றிட்டம் (SEMP-2) ESDFP செயற்றிட்டம் போன்றவை நடைமுறைப்படுத்தப்படுவதோடு, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான செயற்றிட்டங்களும் நடைமுறையில் உள்ளதைக் குறிப்பிடலாம்.

## பழைய மாணவர் உதவிகள்

2004 இல் பாடசாலையைப் பொறுப்பேற்றக் காலத்தில் ஒலிபெருக்கிச் சாதனங்கள் இல்லாமை பெருங்குறையாக இருந்து வந்தது. இதனை நிவர்த்தி செய்ய எமது பாடசாலையின் பழைய மாணவரான திரு.செல்வசுந்தரம் (லண்டன்) அவர்கள் ரூபா50.000 செலவில் இச் சாதனங்களைப் பெற்றுத்தந்தார். அவருக்கு விஷேடமாக நன்றி கூறுகிறேன். பாடசாலையின் வாயிலுக்குரிய கதவினை ஈஸ்லிங் உரிமையாளர் திரு.வே.தயாபரன் அவர்கள் அன்பளிப்புச் செய்துதவியுள்ளார். அத்தோடு 128 அகவையில் எமது வித்தியாலயம் தடம்பதித்துச் செல்வதற்கு ஏராளமான பழைய மாணவர்கள் நிதியுதவிகளையும் பொருள் உதவிகளையும் வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றி கூறுகிறேன்.

## திணைக்களம்

வேண்டும் பொழுதெல்லாம் பல்வேறுபட்ட உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிவருகின்ற வலயக்கல்வி அலுவலகம் மாகாணக்கல்வித் திணைக்களம் மற்றும் கிழக்குமாகாணக்கல்வி அமைச்சுக்கு நன்றி கூறுகின்றேன். மேலும் இருக்கின்ற வளங்களை பெரும் பயன் நல்கும் வகையில் பயன்படுத்தி கல்வி அபிவிருத்திக்கு பெரும் சாதனையை நிலைநாட்ட உங்கள் அனைவரது ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் நாடி நிற்பதோடு இந்நிகழ்விலே அனைத்து துறைகளிலும் சாதனை நிலைநாட்டி பரிசுபெறும் மாணவர் அனைவருக்கும் வாழ்த்துக்கூறி விருந்தினர்களாக வந்து சிறப்பித்தவர்களுக்கும், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**நன்றி**

**திரு.க.யோகானந்தன்**

அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our School Principal



**Poet**

**Mr.K.Yogananthan.**

**B.A,Dip. in Edu. SLTS 1**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our School Deputy Principal



Mrs.S.Soundararajan.B.A

## Our School Vice Principal



Mr.T.Vijayarajendran.Traind

## School Management Committee -2008



Left to Right (Seated) MR.S.Vincent, MR.T.Vijayarajendran, Mr.K.Yoganathan(Principal), Mrs.S.Soundararajan.
Left to Right (Standing) Mrs.S.Sivarasa, Mrs.N.Thiruchchiloganantha, Miss.A.J.O.Joy, Mrs.C.Prabaharan, Mrs.V.Uthayakumar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School Staff-2008



**Left to Right (Seated)** Miss.A.J.O.Joy, Miss.R.Cherine Chandrakumary,Mrs.T.T.Benjamine, Mrs.S.Soundararajan (D.Principal), Mr.K.Yogananthan (Principal), Mr.T.Vijayarajendran(V.Principal), Mrs.C.Prabaharan, Mrs.R.Lavakumar, Mrs.V.Uthayakumar.

**Left to Right (Standing)** Miss.R.Yogasathiyammah, Mrs.V.Selvarasa, Mrs.R.Thiruchchelvam, Miss.M.Thirumahal, Mrs.P.Maithily, Miss.J.S.Nilusha Antonina, Miss.K.Thavachchelvi, Mrs.M.Sivaharan, Mrs.S.Sivarasa, Mrs.C.Theivendran, Mrs.S.Kalaimahal, Miss.R.Uthayashanthi, Mrs.N.Thiruchchiloganantha, Mr.N.Kirubananthan, Mr.M.Kurukulasingam, Mr.K.Sivakalithas, Mr.R.Jeyakanth, Mr.T.Partheepan, Mr.S.Vincent, Mr.N.Thayalasingam, Miss.K.Vigneswary(Absent), Mrs.K.Subasharan.(Absent).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. Our Former Principals
2. அதிபர்களின் காலங்கள்
3. நேரமுகாமைத்துவமும் பயன்பாடும்
4. History the school
5. சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் தமிழ்மொழித்தின போட்டிகளின் சாதனை
6. சுவாமி விபுலானந்தரும் ஈழத்துத்தமிழும்
7. வளரும் திருமலை வளாகமும், அது அமைந்துள்ள பிரதேசத்தில் இதன் தாக்கமும்
8. இலங்கையில் பணவீக்கம்; காரணங்களும் தாக்கங்களும்
9. சிறுவர்நாடகத் தேடலுக்கு சிறு அறிதல்
10. பொது அங்குசம் செய்வோம்
11. My Village Mother Theresa
12. பாடசாலைகளில் தொலைநோக்கும் பணிக்கூற்றும்
13. School Staff
14. வாழ்த்துகிறேன்
15. நேரமுகாமைத்துவம்
16. செயல்மிக்க சின்னவர்கள்
17. சமநிலைக்கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.
18. கலைந்தமேகம்
19. English Language
20. முக்கிய தினங்கள்
21. பாடசாலைக் கல்வியில் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பங்களிப்பும் அவசியமும்
22. இரண்டாவது மொழியை கற்றுக் கொள்வதற்கான சில உதவிக்குறிப்புகள்
23. திருந்திய உள்ளம் வேண்டும்
24. பொது அறிவு
25. பொன் மொழிகள்
26. பாடசாலை மட்ட மாணவர் அடைவுகள்
27. பாடசாலை மன்றங்கள்
28. அன்னை
29. Garbage Disposal
30. எனது ஒளிதீபம்
31. ஆங்கிலக் கல்வியின் அவசியம்
32. E-Waste இலத்திரனியல் கழிவுகள்
33. Environmental Pollution
34. The Computer
35. பரத நாட்டியத்தின் அரங்க நிகழ்வு
36. The Beneficial Library
37. மாணவர் அடைவுகளும் மெய்வல்லுனர் பெறுபேறுகளும்.
38. நன்றி நவில்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# OUR FORMER PRINCIPALS

| | | |
|---|---|---|
| 1. | MR.S.KANABATHIPILLAI | |
| 2. | MR.S.SINNATHAMBI | (1910 - 1930) |
| 3. | MR.N.KASINATHAR | (1934 - 1935) |
| 4. | MR.T. V. KANDAVANAM | (1935 - 1936) |
| 5. | MR.K. JAYARATNAM | (1936 - 1940) |
| 6. | MR.J.JOHN MUTHTHAUH | (1941 - 1948) |
| 7. | MR.S.K.SELVANAGInAAR | (1949 - 1955) |
| 8. | MR.S. KANDIAH | (1956 - 1959) |
| 9. | MR. T.V.KANDAVANAM | (1960 - 1963) |
| 10. | MRS.KASINATHER | (1964 - 1965) |
| 11. | MR.V. KUMARASAWMY | (1966- 1968) |
| 12. | MR.P. PONAIAH | (1969 - 1970) |
| 13. | MR.S. THAMBIPILLAI | (1970 - 1971) |
| 14. | MR.K. VELUPILLAI | (1972 - 1976) |
| 15. | MR.S. SELLATHURI | (1977 - 1989) |
| 16. | MR.S. SIVAPARAGASAM | (1990 - 1996) |
| 17. | MR.T. SITHAMBARAPILLAI | (1997 - 2003) |
| 18. | MR.K. YOGANANTHAN | (2004 - Todate) |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# "அதிபர்களின் காலங்கள்"



MR.D. V. KANDAVANAM
(1935 - 1936)




MR. P. PONNAIAH
(1969 - 1970)



MR.S. THAMBIPILLAI
(1970 - 1971)



MR. V. KUMARASWAMY
(1966 - 1968)




MR. K. VELUPILLAI
(1972 - 1976)




MR. S. SELLATHURAI
(1977 - 1989)



MR. S. SIVAPRAGASAM
(1990 - 1996)



MR. T. SITHAMBARAMPILLAI
(1997 - 2003)




MR. K. YOGANANTHAN
(2004 - Todate)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர முகாமைத்துவமும், பயன்பாடும்

இன்றைய காலகட்டத்தில் நேர முகாமைத்துவம் என்பது முக்கியமானதொரு விடயமாக எல்லோராலும் கருதப்படுகிறது. ஏனெனில் பண்டைய காலத்தில் மனிதனுடைய செயற்பாடுகளும் தேவைகளும் வரையறுக்கப்பட்டிருந்தமையால் அன்றைய மனிதன் தன்னுடைய செயற்பாடுகளை தனக்குக் கிடைத்த நேரத்தில் முடிக்கக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்றைய காலகட்டமானது மனிதனானவன் தனது அன்றாட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குப் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் அதிகரித்து செல்கின்ற அவனது தேவைகளை குறுகிய நேரத்தினுள் நிறைவு செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான்.

இன்று " நேரமில்லை " என்ற சொற்றொடர் அனைவராலும் தினமும் பாவிக்கப்படுவதைக் கேட்கிறோம். எனவே அது அப்படியிருக்க உண்மையிலே நமக்குக் கிடைக்கின்ற நேரத்தை நாம் எவ்வாறு விரயம் செய்கிறோம் என்பதை நம்மில் யாராவது சிந்திக்கின்றோமா? இல்லை என்றே கூறவேண்டும்.

இன்று நாம் இந்த நேர முகாமைத்துவத்தை பற்றி நன்கு சிந்திக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கின்றோம். உண்மையில் இந்த நேர முகாமைத்துவம் என்பது உயர் பதவிகளை வகிப்பவர்களுக்கு மட்டும் தேவைப்படும் ஒன்றல்ல மாறாக இது சிறுவர் முதல் வயது வந்தவர்கள் வரை என ஒவ்வொரு வயதினராலும் கடைப்பிடிக்கப்படவேண்டும்.

நமது நேரத்தினை நமது பல்வேறு தேவைகளுக்கும் வினைத்திறனுக்கும் ஏற்ப ஒதுக்குவதே நேர முகாமைத்துவம் ஆகும். இந்த நேர முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நமக்கு தேவைப்படுவது நேரத்தை தவிர வேறு எந்த முதலீடுகளும் அல்ல. இதற்கென நாங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் எங்களது நாளாந்த செயற்பாடுகளை தீர்மானித்து எதிர்வுகூர்ந்து அவற்றுகென தேவைப்படுகின்ற நேரத்தையும் நன்கு தீர்மானித்து செயற்பாடுகளை செயல் வினைத்திறன் தேவைப்படும் நேரம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு ஒதுக்கப்பட்டகால எல்லையுள் காரியங்களை ஆற்றுவதுதான் நேர முகாமைத்துவம். ஒரு கால அட்டவணையைத் தயாரித்து அதற்கமையச் செயற்படுவது நேர முகாமைத்துவத்தின் பண்பாகும்.

சிலவேளைகளில் ஒரு காரியத்தை நாம் திட்டமிட்டவாறு செயற்படுத்த முடியாது போகலாம். அதாவது ஒரே நேரத்தில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படலாம். அவ்வாறான நிலைமையின் போது செயற்பாடுகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு செயற்பாடுகளை முற்/பிற் போடுவதற்கான மாற்றுவழிகளை ஆராயலாம். அன்றேல் சில செயற்பாடுகளை இரத்துச் செய்யவேண்டியும் ஏற்படலாம். அல்லது நமது பிரதிநிதியிடமோ அல்லது நம்பிக்கைக்கு உரியவரிடமோ செயற்படும் பொறுப்பினை அளித்து பகுதி பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ கருமங்களைப் பூர்த்தி செய்யலாம்.

மனிதர்களை ஏனைய விலங்குகளிடம் இருந்து வேறுபடுத்துவது சிந்தனையாற்றல் ஒன்றேயாகும். எனவே நாம் எவ்வளவு தூரம் நேரத்தை எவ்வாறு வீண்விரயம் செய்கிறோம் என்று சிந்தித்துச் செயற்படத்தொடங்கினாலே நேர முகாமைத்துவம் குறித்து நாம் விவேகம் கொண்டவராவோம். அவ்வறிவைச் சிறந்த முறையில் பயன்படுத்தி நாம் எமது நேரத்தினை எந்த வழிகளிலே பயனற்று வீண்விரையம் செய்கின்றோம் என்பதனை உணர்ந்து கொண்டாலே எங்களது விவேகம் வேலை செய்யத் தொடங்கி விட்டது என்று கருதலாம்.

இவ்வாறு எமக்குரிய நாளாந்த நேரமுகாமைத்துவத்தைப் பேணுகின்ற போது நாளடைவில் நாம் ஒரு வாரத்திற்கோ அல்லது ஒரு மாதத்திற்கோ உரிய செயற்பாடுகளையும் அதற்குரிய நேரத்தினையும் நன்கு திட்டமிடமுடியும்.
இப்படிப் படிப்படியாக ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு அமைவாக செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது நாளடைவில் நாம் அனைவரும் நேர முகாமைத்துவத்தின் உச்சப் பயனைப் பெறலாம் என்பதை நேர முகாமைத்துவத்தை கடைபிடிப்பவர்களின் அனுபவத்தின் மூலம் உறுதி செய்யலாம்.

" இளமையில் சிந்திப்பவர் முதுமையில் சிறக்கின்றார் "

**திரு. பாஸ்கர்,**
விரிவுரையாளர்,
வணிக முகாமைத்துவ கற்கை பிரிவு,
திருகோணமலை வளாகம்,
கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்,
கோணேசபுரி, நிலாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# History of the school

| | | |
|---|---|---|
| Name | :- | T/ Sampalthivu Tamil Maha Vidyalayam |
| Founded | :- | 1880 |
| School No | :- | 29160 |
| School I.D. No | :- | 1701002 |
| Census No | :- | 16052 |
| Present Grade | :- | 1 C |
| Maha Vidyalayam Status | :- | 01.02.1977 |
| Commencing of O/L | :- | 1969 |
| Commencing of A/L | :- | 04.05.1992 |
| Category | :- | Provincial School |
| School Colours | :- | Bule & Yellow |

## சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் சாதனை

தமிழ்மொழித்தினப் போட்டிகளில் திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிலை நாட்டியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வலய மட்டத்தில் நாடகம், வில்லுப்பாட்டு நிகழ்வுகளில் முதலாம் இடத்தையும் கோலாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. மாவட்ட மட்டப் போட்டியில்' வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் முதலாம் இடத்தையும், நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றது. மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்ற மாகாண தமிழ்மொழித்தினப் போட்டிகளில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் 3வது இடத்தைப் பெற்றுள்ளது. கிராமப் பாடசாலையான சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் நகரப் பாடசாலைகளுடன் போட்டியிட்டு சிறந்த நிலைகளைப் பெற்று சாதனைப் புரிந்துள்ளதாக அதிபர் க. யோகானந்தன் தெரிவித்தார். இச்சாதனைக்கு உறுதுணையாக செயற்பட்ட ஆசிரியர்கள் என்.தயாளசிங்கம், செல்விகள் ரி.எஸ். நிலுசா, கே.உதயசாந்தி ஆகியோர் பாடசாலை நிர்வாகத்தினால் பாராட்டப்பட்டுள்ளனர்.

இதேபோன்று உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி திருகோணமலைப் பட்டினமும் சூழலும் பிரதேச சபையினால் பிரதேச பாடசாலைகளுக்கு இடையே நடாத்தப்பட்ட விவாதப் போட்டியில் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்றது. திருகோணமலை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினால் திருமலை நகரசபை மண்டபத்தினால் ஏழு பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட விவாதப் போட்டியிலும் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது. சிவஞானசுந்தரம் சுதாகரன், மூர்த்தி காயத்ரி, பவானநந்தமுருகன் தனு ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்று விவாத அணியில் இடம்பெற்றிருந்தனர். சித்திரப் போட்டியிலும் முதலாம் இடத்தை இவ்வித்தியாலய மாணவி அமிர்தலிங்கம் நளினி பெற்றார். இவற்றை நெறிப்படுத்தியவர் வித்தியாலய உபஅதிபர் தம்பிராஜா விஜயராஜேந்திரன்.

"தினக்குரல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலானந்தரும் ஈழத்துத் தமிழும்

## முன்னுரை

ஈழத்தமிழ்ப் பெரியார்களுள் நாம் பெருமையுடனும் நன்றியுணர்வுடனும் நினைவு கூர வேண்டியவர் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் ஆவர். விஞ்ஞான பொறியியற் பட்டதாரியாகத் தன் கல்வி வாழ்வைத் தொடங்கிய அடிகளார் அக்கல்வி அடிப்படையிலேயே ஆய்வுகளையும் மேற்கொண்டார். பழந்தமிழ் இசையினை அடிப்படை அறிவியற் கோட்பாடுகளுக்கமைய ஆராய்ந்தார். இத்தகைய ஆய்வின் விளைவே அடிகளாருடைய யாழ் நூல் ஆகும். தமிழ் மொழியினையும் இவ்வறிவியல் அடிப்படையிலேயே நோக்கினார். தமிழ் இலக்கியம், கலைகள் ஆகியவவற்றை அறிவியல் அடிப்படையிலும், அழகியல் அடிப்படையிலும், ஆன்மீக அடிப்படையிலும் அடிகளார் அணுகியுள்ளமையை அவருடைய ஆக்கங்களிலிருந்து உணரலாம். பழந்தமிழ் இலக்கியங்களின் சுவையினைத் தன் மாணவர்க்கு ஊட்டினார். அதேவேளை புதுமைக் கவிஞன் பாரதியினுடைய பாடல்கள் பாராட்டப்படாத காலத்திலே, அவை சிறந்த கவிதைகளென இனங்கண்டு பாராட்டி அவற்றை அம்மாணவர்க்கும் அறிமுகஞ்செய்து வைத்தார். தமிழ் இலக்கியங்களை மட்டும் அறிமுகஞ் செய்யாது மேலைத்தேய இலக்கியங்களுட் சிறந்தனவற்றை தமிழ் மக்களுக்கு மொழி பெயர்ப்புகள் மூலமாகவும் திறனாய்வுக் கட்டுரைகள் மூலமாகவும் அறிமுகப்படுத்தினார். அவரே ஆக்க இலக்கியகாராகவும் திகழ்ந்தார். சிறந்த கவிதைகள், நாடகங்கள் எழுதியுள்ளார். அடிகளாருடைய பணிகள் பன்முகப்பட்டன, அப்பணிகளுள் ஒன்று அவர் மொழி தொடர்பாக மேற்கொண்ட ஆய்வு. தமிழ் மொழி தொடர்பான அவருடைய எண்ணங்கள் நவீன மொழியியலாளருடைய கருத்துக்களை அடியொற்றிச் செல்கின்றன. இக்கட்டுரை அடிகளாருடைய அவ்வெண்ணங்களை ஓரளவு இனங்கண்டு விவரணஞ் செய்கின்றது.

## பேச்சுத் தமிழே உயிர்ப்புடையது

அடிகளார் கல்கத்தாவிலிருந்து வெளியாகிய " மொடன் ரிவியு (Moern Review) என்னும் ஆங்கிலத் திங்களிதழிலே தமிழ் மொழி ஒலியியல் " ( The Phonetics of Tamil) என்னுங் கட்டுரையினை எழுதி வெளியிட்டார். இக்கட்டுரையிலே தான் எதனை வெளியிட விரும்பினார் என்பதனை அடிகளாரே பின்வருமாறு கூறுகின்றார். (சோழ மண்டலத் தமிழும் ஈழ மண்டலத் தமிழும் கலைமகள் 1941 தை)

> " குறித்த வியாசத்திலே, தமிழ் நாட்டு மக்கள் இக்காலத்திலே திண்ணையிலும் தெருவிலும் கடை வீதியிலும் தொழிற்சாலையிலும் வழங்கும் தமிழ் மொழியின் சிறப்பியல்புகள் சிலவற்றை எடுத்துக்காட்டினேன். அஃதன்றியும் ஸ்ரீமான் டி.கே, சிதம்பரநாத முதலியாரை உள்ளிட்ட தமிழன்பர்கள் தமிழ் மக்களது வழக்கு மொழியாகிய உயிர்த் தமிழினது அழகினையும் ஆற்றலினையும் தீர விசாரித்து ஆவன செய்தல் வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டேன். "

அடிகளார் இக்கட்டுரை வாயிலாக முன்வைத்துள்ள கருத்து நவீன மொழியியற் கோட்பாடுகளுள் முதன்மை வாய்ந்த தொன்றாகும்.

நவீன மொழியியலின் முதன்மையான கோட்பாடுகளுள் ஒன்று பேச்சு மொழியை முதன்மைப்படுத்துவதாகும். பொதுவாக எல்லா மொழிகளிலும் மரபுவழி வந்த இலக்கணங்கள்யாவும் எழுத்து மொழிக்கே முதன்மை கொடுத்து வந்துள்ளன. அது மாத்திரமன்றி பேச்சுமொழி எழுத்துமொழியினின்று குறைவான நிலையையுடைய தென்றும், அது எழுத்து மொழியிலே தங்கியுள்ள தென்றும் கூறியுள்ளன. ஆனால் நவீன மொழியியல், எழுத்து மொழியைவிடப் பேச்சு மொழியே முதன்மை பெற்றுள்ளதெனக் கூறும் பொழுது, பேச்சு பழமைவாய்ந்த தென்பதையும், எழுத்தைவிடக் கூடிய பரப்புத்தன்மையுடைய தென்பதையும் அடிப்படைகளாகக் கொள்ளுகின்றது. உலகிலுள்ள எந்த வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமுறைக்கும் ஆறு அல்லது ஏழு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், பேசும் ஆற்றலில்லாத எந்த மக்கட் கூட்டமோ இனமோ இருந்ததாகவோ இருப்பதாகவோ சான்றுகள் எவையேனும் இல்லை. அத்துடன் எழுத்துமுறை இல்லாத எத்தனையோ மொழிகள் சென்ற நூற்றாண்டில் மிஷனரிமார்களாலும் மொழியாய்வாளராலும் வரிவடிவ முறைக்குட்படுத்தப்பட்ட வரலாற்றினையும் நாம் அறிவோம். ஆகவே, பேச்சு, மனித சமூகத்துடன் பண்டைக்காலந்தொட்டே தொடர்புற்றதெனக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகும்.

நாம் குழந்தைகளாயிருந்த காலத்தில் நல்லாசான் ஒருவனிடத்து எழுதவும், படிக்கவும் கற்பதற்கு முன்னரேயே பேசப்பழகிக் கொண்டதை இவ்விடத்தே மனங்கொள்ள வேண்டும். இதனால், மனித வாழ்வில் பேச்சுமொழி எழுத்து மொழியை விட வரலாற்று முதன்மையுடையது என்பது பெறப்படுகின்றது. தமிழ்மொழியை பொறுத்தமட்டில் எல்லாத் தமிழர்களும் எழுதுவதில்லை. அவர்களெல்லோரும் எழுத்து வழக்குக்கு அல்லது இலக்கிய வழக்குக்குப் பயன்படும் மொழியினை அறிந்தவர்களென்று கூறுதற்கில்லை. ஆனால், எல்லாத் தமிழர்களும் தமிழ் மொழியைப் பேசுகிறார்கள். இவ்வாறு பேசப்படும் தமிழ்மொழி தொடர்பாகக் கற்றோர் மற்றோர் என்னும் வேறுபாடில்லை. இதனால், பேச்சுமொழி ' மக்கள் தமிழ் ' எனக் கொள்ளப்பட்டது.

இத்தகைய ' தமிழ் மக்களது வழக்கு மொழியாகிய உயிர்த் தமிழினது அழகினையும் ஆற்றலினையும் ' நன்கு உணர்ந்த அடிகளார், அத்தமிழ் பற்றிய விபரங்களை விளக்கியது மட்டுமன்றி அத்தமிழிலே அமைந்த இலக்கியங்களிலும் ஈடுபாடு கொண்டார். மக்கள் தமிழைப் பாரதி ஓரளவு தன் கவிதைகளிலே கையாண்டான். ' போச்சுது போச்சுது பாரதநாடு ' என்றோ, 'பாலத்துச் சோசியனும் கிரகம் படுத்துமென்று விட்டான். ' என்றோ பாடும்போது பாரதிக்கு மக்கள் தமிழ் துணைநிகின்றது. அது அவன் கவிதைக்கு உயிர்ப்பைக் கொடுக்கின்றது. விபுலாநந்த அடிகளார் பாரதியினுடைய கவிதைகளிலே ஈடுபாடு கொண்டமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். தான் படித்துச் சுவைத்தது மட்டுமன்றி, எதிர்காலச் சந்ததியினரும் மக்கள் தமிழ்க் கவிதைகளைப் படிக்க வேண்டுமென்று பாரதியின் கவிதைகளைத் தன் மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்து வைத்துள்ளார்.

தமிழ் நாட்டிலே பாரதி கவிதையே மக்கள் தமிழை உபயோகித்தது போல ஈழத்திலே பேராசிரியர் கணபதிப்பிள்ளை மக்கள் தமிழுக்கு இலக்கிய இருப்புக் கொடுத்தார். அவர் எழுதிய 'உடையார் மிடுக்கு ' , 'முருகன் திருத்தாளம்', 'கண்ணன்கூத்து', 'நாட்டவன் நகர வாழ்க்கை' என்னும் நான்கு நாடகங்களின் தொகுதியாக நானாடகம் வெளிவந்தது. யாழ்ப்பாணத்து சமூகச் சிக்கல்களைப் பொருளாகக் கொண்டு யாழ்ப்பாணத்து மக்கள் தமிழிலே இந்நாடகங்களை எழுதிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை நானாடகம் நூலின் முன்னுரையிலே குறிப்பிடப்பட்டுள்ளவை மனங்கொள்ளத்தக்கன. அதிலிருந்து சில பகுதிகள்

"நாடகம் என்பது உலக இயல்பை உள்ளது உள்ளபடி காட்டுவது. ஆகவே வீட்டிலும், வீதியிலும் பேசுவது போலவே அரங்கிலும் பேசல் வேண்டும். கொடுந் தமிழ்மொழி அவ்வந்நாட்டிற்கே உரிய மொழியாம். ஆகவே சேரி மண்டலத்துத் தமிழர் ஈழ மண்டலத்துத் தமிழை அறிதற்கு வழியாது? அன்றியும் உயிருள்ள மொழியெல்லாம் இடைவிடாது மாறிக்கொண்டே வரும். ஒருவனை ஐந்து வயதிற் பிடித்த படமும் ஐம்பது வயதற் பிடித்த படமும் ஒரே தன்மையானவையாய் இருக்குமோ? ஆண்பாலாருக்கும் பெண்பாலாருக்கும் பருவம் ஏழு என வகுத்தார் ஆன்றோர். அப்படியாயின் ஒவ்வொரு பருவத்திலும் படம் பிடித்தல் விரும்பத்தக்கது. அதுபோலவே அவ்வக்காலத்துக் கொடுந்தமிழையும் தீட்டிவைத்தல் வேண்டும். இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணத்திற் பேசிய தமிழே இன்று நாம் பேசும் தமிழ்? இங்ஙனம் யாம் கூறுவது சொல்லை மட்டும் எண்ணியன்று சொல்லின வடிவம் மாற மாற இலக்கணமும் மாறும், பொருளும் மாறும். ஆகவே அவ்வக் காலத்துச் சொல்லின் வடிவமும் பொருளும் இலக்கணமும் தீட்டி வைத்தல் இன்றியமையாதது. இதன் உண்மை ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழி வல்லுநர் அறிவர். நம் தமிழ்மொழி வல்லுனரும் இவ்வுண்மையை அறிவாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நான்கு நாடகத்திலும் வழங்கிய பாடை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குப் பொதுவாயும் பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாயும் உள்ளது. "

விபுலானந்த அடிகளார் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களைப் படித்து மகிழ்ந்தவர். பாரதி பாடல்களை அந்நாட்களிலே முதன்மைப்படுத்திப் பேசியது போல, இந்நாடகங்களின் மக்கள் தமிழ்ப்பற்றித் தான் எழுதிய கட்டுரைகளிலே முதன்மைப்படுத்திக் கூறினார்.

தமிழ் மொழியினுடைய ஒலியியல் பற்றியும், தமிழ்மொழி வழக்குகள் பற்றிச் சிந்தித்தும், ஆய்வுநெறியில் கட்டுரைகள் எழுதியும், நவீன மொழியியலாளருடைய கருத்துக்களை நன்குணர்ந்து அவற்றின் ஒளியிலே தமிழ்மொழியை நோக்கியும் பணிபுரிந்த அடிகளார் ஈழத்து மொழியியல் அறிஞர்களுக்கு முன்னோடியாவர்.

### சோழ மண்டலத்துத் தமிழும் ஈழ மண்டலத்துத் தமிழும்

தமிழ்மொழி இலக்கியத்தமிழ் வழக்கு, பேச்சுத்தமிழ் வழக்கு என்னும் இரு வழக்குப் பண்புகளையுடையது. இலக்கியத் தமிழ் வழக்கினை எழுத்துத்தமிழ் வழக்கு என்றும் புத்தகத்தமிழ் வழக்கு என்றும் கூறுவர். இவ்வழக்குகளைப் பற்றி அடிகளார் நன்கு தெரிந்து கொண்டவர். அவைபற்றி அவர் எண்ணியதன் விளைவே அவருடைய ' சோழ மண்டலத்துத் தமிழும், ஈழ மண்டலத்துத் தமிழும் ' என்னும் கட்டுரையாகும். இக்கட்டுரை 1941இல் தைத்திங்களில் வெளியாகிய கலைமகள் இதழிலே இடம்பெற்றது. இக்கட்டுரையிலே. "ஈழநாட்டில் பிறந்தேனாயினும் ஈழத்து வழக்குத் தமிழிலே எனக்கு அதிக பழக்கமில்லை. கற்றது புத்தகத் தமிழ் கலந்து பழகி ஒரு சிறிது பயின்று கொண்டது சோழ நாட்டுத் தமிழ் இலங்கையிலே நான் நண்பரோடு உரையாடும்போது, என் உரையைக் கேட்டோர், 'சாமி பேசுவது வடக்கத்திய தமிழ் ' என்று சொல்ல நான் பலமுறை கேட்டதுண்டு," என்று குறிப்பிட்டுள்ளார். புத்தகத் தமிழுக்கும் வழக்குத் தமிழுக்கும் வேறுபாடு உண்டு என்பதை உணரும் அதேவேளை, வழக்குத் தமிழிலும் ' ஈழத்து வழக்குத் தமிழ் ', ' வடக்கத்திய தமிழ் ' என்னும் வேறுபாடுகளும் உண்டு என்பதையும் உணர்ந்த அடிகளார் அவ்வேறுபாடுகளை அக்கட்டுரையிலே சிறிது விளக்கியுமுள்ளார். கல்கத்தா மொடர்ன்ரிவியுவிலே வெளிவந்த ' தமிழ்மொழி ஒலியியல் ' என்னும் ஆங்கிலக் கட்டுரையிலே உயிர்த் தமிழாகிய பேச்சுத் தமிழிலே ' ஈழத்து வழக்கு ' க்கும் 'வடக்கத்திய தமிழ் ' வழக்குக்குமிடையே காணப்படும் வேறுபாடுகளைக் கூறினார்.

இன்று தமிழ் நாட்டிலே வழங்கும் பேச்சு மொழிக்கும் ஈழத்துப் பேச்சு வழக்குக்குமிடையேயுள்ள பல வேறுபாடுகளை மொழியியலாளர் நுணுக்கமாக ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். ஆனால் ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இவ்வேறுபாடுகளைக் கண்டு, அவைபற்றிச் சிந்தித்துக் கருத்துக்களை வெளியிட்ட முதல்தமிழ் அறிஞர் அடிகளாரேயாவர்.

### மட்டக்களப்புத் தமிழ்

யாழ்ப்பாணத் தமிழ் இலக்கியத்தன்மை கொண்டது என்ற கருத்து அறிஞர்கள் சிலராலே முன்வைக்கப் பட்டுள்ளது. பி.எஸ்.சுப்பிரமணியசாஸ்திரி (1934) யாழ்ப்பாணத் தமிழிற், பல வழிகளில், சொற்கள் எழுதுவது போலவே உச்சரிக்கப்படுகின்றன. என்று கூறியுள்ளார். குயிப்பர் (F.B.Kuiper) என்னும் திராவிட மொழியியல் வல்லுநர் 1962 இல் எழுதிய கட்டுரையிலே பல ஆண்டுகளுக்கு மன்னே ஹோனல் (Honel) என்னும் ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தமிழ் பற்றிக் கூறியவற்றை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். ஹோனல் ஆங்கில மொழியிலே எழுதியதைத் தமிழிலே பின்வருமாறு கூறலாம்.

" இலங்கையின் வடகோடியிலே நெடுங்காலமாகப் பிரிந்து தனியாக வாழும் யாழ்ப்பாணத் தமிழர்,

அவர்களுடைய துணைக்கண்ட உறவினர் மறந்துவிட்ட பல தமிழ் மரபுகளைப் பேணிக் காத்துள்ளனர் எனக் குறிப்பிடுகின்றனர். அத்துடன் அவர்களுடைய சாதாரண பேச்சு வழக்கு இலக்கியத்தமிழ் போன்ற ஒரு வடிவத்தை அடைவதாகவும் குறிப்பிடப்படுகிறது. "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழைப் பல வெளிநாட்டு அறிஞர் அறிய ஏற்பட்டது போல் மட்டக்களப்புப் பேச்சுத்தமிழை அவர்கள் அறிய வாய்ப்பு ஏற்படவில்லை. இந்நிலையை விபுலாநந்த அடிகளார் உணர்ந்திருந்தார். யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழைத் தன் நாடகங்களிலே படம் பிடித்துக் காட்டிய பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு அடிகளார் எழுதிய ஒரு கடிதத்தில்,

" பேரன்பு வாய்ந்த திருவாளர் க.கணபதிப்பிள்ளை அவர்களுக்கு,

' நானாடக' மும், 'காதலியாற்றுப்படை'யும் கிடைத்தன. முற்றும் படித்து மகிழ்வுற்றேன். ' பொருளோ பொருள் ' எனப் பெயரிய மற்றுமொரு நாடகம் அண்டையில் அரங்கேறியதாக ஈழகேசரியிற் படித்தேன். மட்டக்களப்பு வழக்கு மொழியினையும் ஓரிரண்டு நாடகங்களிலே படம்பிடித்து வைப்பது நன்று. விஜயதசமி வாழ்த்துரை கூறி முடிக்கின்றேன்.

அன்புள்ள.

விபுலாநந்தா"

என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு நாம் நெஞ்சிற் பதிக்க வேண்டியதொன்றாகும். மட்டக்களப்பு வழக்கு மொழி யாழ்ப்பாணத்து வழக்கு மொழியினின்றும் வேறுபட்டது என்ற உண்மையை உணர்ந்த அடிகளார், அது ஏதோ வகையில் பேணப்படுவது நன்றென எண்ணியது வியப்பில்லை இவ் வேறுபாட்டு உண்மையை முதன் முதல் உலகுக்கு எடுத்துக் கூறியவர் அடிகளாரேயாவர். முன் குறிப்பிட்ட அவருடைய ' சோழ மண்டலத்துத் தமிழும் ஈழ மண்டலத்துத் தமிழும் ' என்னும் கட்டுரையில்,

" மட்டக்களப்பு நான் பிறந்த நாடு ஈழத்தின் கிழக்குப் பாகத்திலுள்ளது. அந்நாட்டு வழக்கு மொழி யழ்ப்பாணத்து வழக்கு மொழியினின்றும் வேறுபட்டது "

என்று குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பு திராவிட மொழியில் வல்லுனரும் தமிழியல் அறிஞருமான பேராசிரியர் கமில் சுவலெபில் என்பவரை மட்டக்களப்புப் பேச்சு வழக்கை ஆராய ஊக்கப்படுத்தியது. இவ்வறிஞர் ' இலங்கைத் தமிழ்' என்னுந் தலைப்பில் தன்னுடைய ஆய்வுக் கண்டு பிடிப்புகளைக் கட்டுரைகளாக எழுதினார். தன்னுயை முதலாவது கட்டுரையிலே சுவெலெபில், விபுலாநந்த அடிகளார் ' மட்டக்களப்பு நான் பிறந்த நாடு ........ ' என்று கூறிய பத்தியினை ஆங்கலத்திலே மொழி பெயர்த்துத் தலைப்புத் தொடராக அமைத்துக் கொண்டார். நெடுங்காலமாக, வெளிநாட்டார் யாழ்ப்பாணத் தமிழே இலக்கியத் தன்மை வாய்ந்தது எனக் கூறிவர, கமில் சுவெலெபிலோ மட்டக்களப்புத் தமிழே இலக்கியத்தன்மை வாய்ந்தது எனக் கூறினார். அவர் கூறியதாவது.

"தமிழின் எல்லாப் பேச்சு வழக்குகளுள்ளும் மட்டக்களப்புப் பேச்சு வடிவமே அதிக இலக்கியத் தன்மை வாய்ந்தது. மொழிக்கு அண்மையான எல்லைப் புறுப்பேச்சு வழக்காக இது அமைந்ததுடன் மிகப் பழைய பண்புகளைப்பேணிக் காத்தும், ஏனைய தமிழ்ப் பேச்சு வழக்குகளைவிட உண்மையான இலக்கியத் தன்மையைக் கொண்டு, அதேவேளையில் சில புதிய மாற்றங்களை வளர்த்தும் வந்துள்ளது. "

**ஈழகேசரித் தமிழ்**

1930.06.26 தொடக்கம் 28 வருடங்களாக ஒரு தரமான பத்திரிகை ஈழத்திலே வெளிவந்து கொண்டிருந்தது.

"நமது நாடு அடிமைப் படுகுழியிலாழ்ந்து, அன்னியர் வயப்பட்டு அறிவிழந்து மொழிவளங்குன்றி, சமயமிழந்து, சாதிப்பேய்க்குட்பட்டுச் சன்மார்க்க நெறியிழந்து உன்மத்தராய், மாக்களாய், உண்டுறங்கி வாழ்தலே கண்ட காட்சியெனக் கொண்டாடுமிக்காலத்தில் எத்தனை பத்திரிகைகள் தோன்றினும் மிகையாகாது."

என்று முதலாவது இதழிலே அப்பத்திரிகையின் தோற்றத்துக்குரிய காலப்பின்னணி அடக்கமான முறையிலே கூறப்பட்டது. இவ்வாறு தொடங்கிய பத்திரிகை ' ஈழகேசரி ' இதனைத் தோற்றுவித்தவர் புகழ்பெற்ற திரு.நா.பொன்னையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களாகும். திரு. பொன்னையாவுக்குத் தனலக்குமி புத்தகசாலையும், திருமகள் அழுத்தகமும் இரண்டு கண்கள் என கனக. செந்திநாதன் குறிப்பிடுவர். (ஈழம் தந்த கேசரி, பக்.33) ' ஈழகேசரி ' யாலே தமிழ் மொழிக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் ஆற்றிய அளப்பரிய தொண்டின் காரணமாகக் குரும்பசிட்டி நாகமுத்தர் பொன்னையா, "ஈழகேசரி நா. பொன்னையா" எனத் தமிழுலகம் நினைவுகூரும் பெரியார் ஆனார். அவருக்கு மூன்றாங்கண் "ஈழகேசரி" எனக் கனக. செந்திநாதன் கொள்வர். இந்த மூன்றாங் கண்ணுக்குரியவர் ஒவ்வொரு ஆண்டும் கும்பசிட்டி சன்மார்க்க சபையினராலே நினைவு கூரப்படுகிறார். கனகசெந்தில்நாதன், இராசரத்தினம், கந்தவனம் எனப்பலர் இருந்த இடத்தில் இப்பொழுது கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை தனியாக நின்று பொறுமையாகப் பணிபுரிகிறார். இவ்வாண்டும் "ஈழகேசரி " நா.பொன்னையா நினைவுகூரப்படவுள்ளார். அடியேன் அப்பணிக்கு அழைக்கப்பட்டுள்ளேன். அவருடைய மூன்றாங் கண்ணாகிய ' ஈழகேசரி ' யின் தமிழ்மொழிப் பயன்பாடு பற்றிய இச்சிறிய ஆய்வினை அப்பெரு மகனாருக்கு நினைவாரமாகச் சூட்டிகிறேன்.

' ஈழகேசரி'யின் இருபத்தெட்டு ஆண்டு வரலாற்றைக் காண்க. செந்திநாதன் (ஈழம் தந்த கேசரி, பக் 75) நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறார். அவையாவன:

1. 1930 தொடக்கம் 1938 வரையுள்ள 8 ஆண்டுகள்.
2. 1939 தொடக்கம் 1942 வரையுள்ள 4 ஆண்டுகள்.
3. 1942 தொடக்கம் 1951 வரையுள்ள 9 ஆண்டுகள்.
4. 1951 தொடக்கம் 1958 வரையுள்ள 7 ஆண்டுகள்.

இந்நான்கு பிரிவுகளுள் மூன்றாவது காலகட்ட இதழ்கள் சிலவே இக்கட்டுரைக்குத் தரவுகளாக அமைகின்றன. இக்கால கட்டத்தை விவரிக்குமிடத்து கனக. செந்திநாதன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

" 1942ஆம் ஆண்டு தொடங்கி 1957ஆம் ஆண்டு வரையுமுள்ள காலத்தின் முற்பகுதி (1951 வரை) யில் திரு. பொன்னையா அவர்கள் வாழ்ந்து மேற்பார்வை செய்தார்கள். இக்காலம் முழுவதும் திரு. இராஜ அரியரத்தினம் ஆசிரிய பீடத்தில் இருந்தாரெனினும் 1942-1944 வரை அவர் தமிழ் நாட்டிற் சுற்றுப் பிரயாணத்தில் இருந்ததால், திரு.அ.செ.முருகானந்தன் அவர்களே பத்திரிகையை நடாத்தினார்."

மறுமலர்ச்சிச் சங்கத்தோடு அ.செ.மு. தொடர்பு கொண்டிருந்தபடியால் அவ்வட்டார எழுத்தாளர் இடையீடின்றி எழுதிக் குறித்தார்கள். அ.செ.மு., அ.ந.கந்தசாமி, திச.வரதராசன், 'மகாகவி ', கவிஞர் சரவணமுத்து (சாரதா) பஞ்சாட்சரசர்மா, நாவற்குழியூர் நடராஜன், பண்டிதர் வ.நடராஜன், சு.வே. கனக செந்திநாதன் என்போர் இக்காலத்தில் எழுதியோரில் முக்கியஸ்தராவர். யுத்தகால நெருக்கடியிற் பக்கங்கள் குறைவாயிருந்தாலும், சிறுகதையும், கட்டுரைகளும், கவிதைகளும் அபரிமிதமாக வெளிவந்தன. ஈழத்தின் 'மண் வாசனை ' கூடுதலாகப் பிரதிபலித்த காலம் இது"

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
யாழ்ப்பாணம்

**பாயி**

இரவுகளில் மட்டுமே
என்னுடன்
கூட்டாளி!
சூரியன் உதித்தால்
சுருண்டிடுவான்
பாட்டாளி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளரும் திருமலை வளாகமும், அது அமைந்துள்ள பிரதேசத்தில் அதன் தாக்கமும்

1993ம் ஆண்டு இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக உதயமான இக்கல்வி நிறுவனம் கடந்த 14 வருட காலத்தில் வளர்ந்து ஒரு பல்கலைக்கழக வளாகமாக பரிணமித்து நிற்கின்றது. பல்கலைக்கழக அனுமதியைப்பெறத்தவறிய ஆனால் க/பொ.த (உயர்தர) மாணவர்களின் நலன் கருதி மறைந்த ஜனாதிபதி திரு.ஆர்.பிரேமதாச அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளில் ஒன்றான திருகோணமலை இணைந்த பல்கலைக்கழகக்கல்லூரி கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் அரவணைப்பில் கலாநிதி (செல்வி) சிரோன்மணி இராஜரெட்ணத்தின் வழிகாட்டலில் ஒரு சிறந்த கல்வி நிறுவனமாகத் திகழ்ந்து இன்று வளாகமாகப் பரிணமித்திருக்கின்றது. 2001 யூன் மாதம் அரசாங்க வர்த்தமானி மூலம் இப்பல்கலைக் கழகக்கல்லூரி கிழக்கிழங்கைப் பல்கலைகழகத்தின் வளாகமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. திருகோணமலை வளாகத்திற்கான நிரந்தரமான கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான காணியைக் கோணேசபுரியில் பெறுவதற்கு செல்வி. இராஜரத்தினம் அவர்கள் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.தங்கத்துரை அவர்களின் அனுசரணையுடன் வெற்றி கண்டார். அதனைத் தொடர்ந்து முதலாவது முதல்வராகப் பதவியேற்ற கலாநிதி T.ஜெயசிங்கம் அவர்களும் தொடர்ந்து முதல்வரான வணக்கத்துக்குரிய (கலாநிதி) C.P.இராஜேந்திரம் ஆகியோரும் துணைவேந்தர்களான பேராசிரியர் மூக்கையா திரு.ரவீந்திரநாத் ஆகியோர்களின் வழிகாட்டலுடன் நிரந்தர கட்டிடம் அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய முதல்வரான திரு.நா.நாகேந்திரகுமார் பல சவால்களுக்கு மத்தியில் திருமலை நகரத்தில் தற்காலிகமாக வாடகைக்கட்டிடங்களில் இயங்கிக்கொண்டிருந்த இவ்வளாகத்தை எமது நிரந்தர இடமான கோணேசபுரிக்கு கொண்டுவந்து சேர்த்தமையானது எமது வளாக வரலாற்றில் ஓர் மைல்கல்லாகும். இதற்காக அவருடன் தோளோடு தோள் நின்று உழைத்த கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் திருமலை வளாக வரலாற்றில் இடம்பெறுவர். அத்துடன் முதல்வர் இவ்விடத்தில் புதிய கட்டிடத் தொகுதியை அமைப்பதற்கும், இப்புதிய கட்டிடத் தொகுதியில் கல்வி நடவடிக்கைகளை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கதும் பாராட்டுக்கு உரியதுமாகும். வளர்ச்சியின் தொடர்ச்சியாக கடந்த ஜீலை 26ம் திகதி இவ் வளாகம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின் 18.08.2008ம் திகதி இவ்வருட புதிய மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் மற்றும் அடிப்படை பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆரம்பத்தில் "டிப்ளோமாதாரிகளை" மட்டுமே உருவாக்கி வந்த இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி முதன் முதலாக 1998ம் ஆண்டில் ஆங்கிலமொழி மூலமான மொழி, தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவ பயிற்சி நெறிகளில் முதல் தொகுதிப் பட்டதாரிகளை உருவாக்கியது. இம் மாணவர்கள் பல்வேறு துறைகளில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிப்பது திருகோணமலை வளாகத்தின் கற்கை நெறிகள் மிகவும் பயனுள்ளதும் பெறுமதி மிக்கதுமானதும் என்பதற்கு சான்றாக உள்ளது.

தற்சமயம் இரண்டு பீடங்களுடன் ஐந்து கற்கைப் பிரிவுகளான முகாமைத்துவம், மொழி தொடர்பாடல், கணினி, மற்றும் சித்தவைத்தியப் பிரிவுகளைக் கொண்டு விளங்கும் வளாகம் விரைவில் ஒரு முழுமையான பல்கலைகழகமாக உருவாக வேண்டுமென்பது கல்விச் சமூகத்தினதும் சமுதாய நலனிலும் அபிவிருத்தியிலும் அக்கறை கொண்ட அனைவரதும் பிரார்த்தனையாகும்.

இவ்வளாகம் கோணேசபுரியில் நிரந்தரமாக இயங்கத் தொடங்கியதன் காரணமாக, கோணேசபுரிக்குக் கிடைத்த அங்கீகாரமும் அதனைத் தொடர்ந்து இடம் பெறவிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் இப்பிரதேசத்தை ஒரு முன்னணி நகரமாக மாற்றுவதற்கான முக்கிய காரணிகளாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே உலகப்பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தளமான நிலாவெளிக் கடற்கரைக்கு அண்மித்து அமைக்கப்பட்ட திருகோணமலை வளாகம் நிலாவெளிப்பிரதேசம் எனும் மகுடத்தில் பதிக்கப்பட்ட விலை மதிக்க முடியாத மாணிக்கமாகும்.

ஒரு உயர்கல்வி நிறுவனத்தின் நீண்ட காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பரந்த நிலப்பரப்பைத் திருகோணமலை வளாகம் கொண்டுள்ளது. இவ்வளாகத்தினால் நடாத்தப்படும் சமகாலத்துக்குத் தேவையான கற்கை நெறிகள் காலத்தின் தேவையுணர்ந்து தெரிவு செய்யப்படுவதனால் கல்வித்தாகம் கொண்ட அனைவரது தாகத்தையும் தீர்க்கும் தடாகமாக மட்டுமல்லாது மொழி, கலை, இலக்கியம், விஞ்ஞானம், மற்றும் முகாமைத்துவம் வளர்த்து சிறந்த குடிமக்களை (நற்பிரஜைகளை) உருவாக்கும் கூடமாகவும் இருக்கும் என்பதில் யாருக்கும் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

பண்டைத் தமிழகத்தின் நிலப்பிரிவுகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, போன்ற ஐவகை நிலங்களில் பாலை தவிர்ந்த நான்கைத் தன்னகத்தே கொண்ட இக்கோணேசபுரியைத் தளமாகக் கொண்டியங்குவதையிட்டுத் திருகோணமலை வளாகம் பெருமைப்படுகின்றது.

கடந்த முப்பது வருட கால கொடிய யுத்தத்தினால் காயப்பட்டு, சேதப்பட்டு, கைவிடப்பட்டு, முகவரியிழந்து காணப்பட்ட இப்பிரதேசத்திற்கு இன்று திருமலை வளாகம் புதியதொரு முகவரியைத் தந்து இப்பிரரேசத்தின் வளர்ச்சிக்கு வழி சமைத்துள்ளது. குகையாக மாறியிருந்த குடியிருப்புப்பிரதேசம் வளாகத்தின் வருகையால் இன்று கல்விக் கோயிலாக மாறியுள்ளது. கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் சட்டவிரோத நடவடிக்கைகள் சமூக விரோத செயற்பாடுகள் பெருகிக் காணப்பட்ட போதும் வளாகத்தின் வருகையானது இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு வழிவகுப்பதால் குற்றச் செயலில் ஈடுபடுபவர்களின் மனநிலையில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்துவதோடு அவர்களின் வாழ்க்கைப் போக்கினையும் சரியான திசைக்குத்திருப்பும் பணியை நேராகவும் மறைமுகமாகவும் இவ்வளாகம் மேற்கொள்ளும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**மேலும் முக்கியமாக :**

"கல்வி சூழல் சார்ந்தது " என்பர் கற்றோர். திருகோணமலை வளாகத்தின் வருகையும், இருப்பும் இப்பிரதேச மாணவ சமுதாயத்தின் மனப்பாங்கில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும், வளாக மாணவ சமுதாயம், ஆசிரியர்குழாம் ஆகியவர்களுடனான தொடர்பாடல் இப்பிரதேச மாணவர்கள் கல்வித்துறையில் உன்னத வளர்ச்சி அடைய உந்து சக்தியாக அமையும் என்பது திண்ணம்.

இவ் உந்து சக்தி இப்பிரதேசப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களை ஊக்குவித்து எதிர்காலத்தில் அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாவதற்கு நிச்சயமாக வழிவகுக்கும்.

**"வளாகத்தை வளர்ப்போம்**
**மக்கள் வாழ்வை வளப்படுத்துவோம்."**

**கு.பிரபாகர்**
**ஆங்கில விரிவுரையாளர்,**
**திருகோணமலை வளாகம்,**
**கிழக்கு இலங்கைப்பல்கலைக்கழகம்,**
**கோணேசபுரி நிலாவெளி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பணவீக்கம் : காரணங்களும் தாக்கங்களும்
# Inflation in Sri Lanka: Causes and Consequences

பணவீக்கம் என்பது நீண்ட காலப்பகுதியில் ஒரு நாட்டின் சராசரி பொதுவிலை மட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியானதும் உறுதியானதுமான ஒரு அதிகரிப்பாகும். மறுவார்த்தையில் கூறின் பணத்தின் பெறுமதி அல்லது கொள்வனவுச் சக்தி வீழ்ச்சியடைதலும் பணவீக்கமாகவே கருதப்படுகின்றது. மிகச்சிற்றளவு பணவீக்கமானது உறுதியான, முகாமை செய்யப்பட்ட பொருளாதார சுபீட்சத்தின் துரதிஸ்டவசமான உப உற்பத்தியாகக் காணப்படுவதால் அது சகித்துக் கொள்ளப்படக்கூடியதாகும். ஆனால் அதிகூடிய பணவீக்கமானது எந்த நாட்டிலும் சமூகம், பொருளாதாரம், மற்றும் அரசியல் என பரந்தளவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. ஏனெனில் பணவீக்கத்தில் ஏற்படும் அதிகூடிய அதிகரிப்பானது நடைமுறையிலுள்ள விலைகளுக்கும் சந்தைச் சக்திகளால் நிர்ணயம் செய்யப்படும் விலைகளுக்கும் இடையில் இடைவெளியை உருவாக்குவதன் ஊடாக முழுப் பொருளாதார முறைமையையுமே செயற்றிற்றதாக ஆக்கிவிடும்.

பணவீக்கமானது நுகர்வு சேமிப்பு மற்றும் முதலீடு என்பவற்றைப் பாதிப்பதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் வர்த்தகத்துறையில் நிச்சயமற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் தாமதப்படுத்துகின்றது. அரசாங்கத்தின் மீதும் உயர் பணவீக்கத்தை உருவாக்கும் அதன் பொருளாதாரக் கொள்கைகள் மீதும் ஏற்படும் பொதுமக்களின் அதிருப்தியானது எந்த நாட்டினையும் பொருளாதாரக் கொள்கையினைக் கடைப்பிடிப்பதிலிருந்து தடுக்கின்றது. உரிய முறையில் கையாளப்படாவிட்டால் பணவீக்கமானது சமூக, பொருளாதார, அரசியல் உறுதிப்பாட்டினைக் குலைக்கக்கூடிய மாபெரும் பிரச்சினையாக உருவாகக்கூடும்.


ஜேர்மன் மற்றும் ஹங்கேரி போன்ற நாடுகள் அனுபவித்த பணவீக்கமே வரலாற்றில் உலகம் கண்ட மிக மோசமான பணவீக்கமாகக் காணப்படுகின்றது 1922 ஜனவரி மற்றும் 1923 நவம்பர் மாதங்களுக்கிடையில் ஜேர்மனியில் விலைச்சுட்டெண்ணானது 1இலிருந்து 10,000,000,000 ஆக அதிகரித்து. 1928 இல் தொடங்கிய உலகப் பெருமந்தத்தினால் முழு உலகமுமே பணவீக்கத்தின் தாக்கத்தை உணர்ந்த போதும் இரண்டம் உலக யுத்தம் முடிவடைந்த காலப்பகுதியில் (1945-1946) ஹங்கேரி அனுபவித்த பணவீக்கமே இதுவரை உலகம் அதிகூடிய பணவீக்மாகும். அங்கு 1946 இல் மாதாந்த சராசரி பணவீக்கம் 20,000 வீதமாகக் காணப்பட்டதுடன் வருடத்தின் கடைசி மாதத்தில் பணவீக்கமானது 42 குவாட்றில்லியன் வீதமாகக் காணப்பட்டது. ஜில்லியன், ட்றில்லியன், மற்றும் குவாட்றில்லியன் என்பன மனிதனின் மனக் கணக்கிற்கு அப்பாற்பட்ட கணக்கலகுகளாகும். (இங்கிலாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் குவாட்றில்லியன் என்பது 1 இற்குப் பின்னர் 24 பூச்சியங்களைக் கொண்ட இலக்கமாகக் கருதப்படுகின்றது) இக்காலப்பகுதியில் ஹங்கேரி மக்கள் கூடைநிறைய பணம் கொண்டு சென்று சட்டைப்பையின் பொருட்கள் வாங்கி வந்தனர். கோப்பி குடிப்பதற்கு கடைக்குள் சென்றபோது கோப்பியின் விலை 4,000 பொறின்றி (Forint) ஆகவும் வெளியே வந்தபோது அதன் விலை 8,000 பொறின்ற் ஆகவும் அதிகரித்திருந்தது. 1927 இற்கும் 1946 இடையில் ஹங்கேரி நாணயத்தின் பெயர் பலமுறை மாற்றப்பட்டது (ஹங்கேரி நாணயத்தின் பெயர் 1927-1946 காலப்பகுதியில் Pengo எனவும், 1946 ஆண்டில் Adopengo எனவும் அழைக்கப்பட்டதுடன் 1946 தொடக்கம் தற்போது வரை Forint எனவும் அழைக்கப்படுகின்றது). அக்காலத்தில் கோப்பியினைக் கடையில் வாங்கிக் குடிப்பதை விட பணத்தாள்களை எரித்து கோப்பி தயாரிப்பது மலிவானதாகக் காணப்பட்டது. இது வரலாறு எனினும். 1990 ஆம் ஆண்டு ஆர்ஜென்டினாவின் பணவீக்கம் 2314 வீதமாகவும் பிறேசிலின் பணவீக்கம் 2938 வீதமாகவும் பெருவின் பணவீக்கம் 7481வீதமாகவும் காணப்பட்டமை பலருக்கும் பழைய வரலாற்றினை ஞாபகமூட்டியது. ஆனால் தற்போது சிம்பாப்வேயின் பணவீக்கம் 100,000 வீதத்தினையும் தாண்டிவிட்டமையானது அதிகூடிய பணவீக்கமானது வரலாறு மட்டுமல்ல அது நிகழ்கால நிகழ்வும் என்பதையே நினைவூட்டுகின்றது. சிம்பாப்வேயில் ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி ஒரு மில்லியன் சிம்பாப்பே டொலர்களாகக் காணப்படுகின்றது. நாட்டில் அனைவரிடமும் பெருமளவு பணம் காணப்படுவதால் அனைவருமே இலட்சாதிபதிகளாகக் காணப்படுகின்ற போதும் 600 மில்லியன் சிம்பாப்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொலர்களாகக் காணப்படுகின்றது. நாட்டில் அனைவரிடமும் பெருமளவு பணம் காணப்படுவதால் அனைவருமே இலட்சாதிபதிகளாகக் காணப்படுகின்ற போதும் 600 மில்லியன் சிம்பாப்வே டொலர் கொடுத்து ஒரு துண்டு பாண் வாங்குவதற்கு கடைகளில் பாண் துண்டுகள் கிடைப்பது கடினமாக உள்ளது. இதன் மூலம் பொருளியல் கோட்பாடு வரைவிலக்கணப்படுத்துவது போல் சிறு தொகைப் பொருளை பெருமளவு பணம் துரத்துவதே பணவீக்கம் என்னும் விளக்கம் இங்கு நிதர்சனமாகத் தெரிகின்றது. ஆகவே உலகின் பல்வேறு நாடுகளும் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வீதங்களில் பணவீக்கத்தினை அனுபவித்தமையினையையுமஅனுபவித்துக் கொண்டிருக்கின்ற மையினையையும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. முக்கியமாக நாடுகள் அனுபவிக்கும் பணவீக்கத்தின் அளவினைத் தீர்மானிப்பது குறிப்பிட்ட நாடுகளின் பொருளாதார உறுதிநிலை, வர்த்தகத்தில் தங்கியிருக்கும் வீதம், உறுதிப்படுத்தல் கொள்கைகள் போன்றனவாகும். பொருளாதார உறுதிநிலையற்ற இறக்குமதிகளில் கூடுதலாகத் தங்கியிருக்கும் நாடுகள் அதி கூடிய பணவீக்கத்தினை அனுபவிக்கப்போவது தவிர்க்க முடியாததாகும்.

**உரு: 1 கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின்படி இலங்கையில் பணவீக்கத்தின் போக்கு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி (பல்வேறு ஆண்டறிக்கைகள்)

சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் பணவீக்கத்தின் போக்கினை நாம் மூன்று காலப்பகுதிகளாகப் பிரித்து நோக்கலாம். பணவீக்கத்தின் போக்கினை ஆராயும் நோக்கில் 1953-2007 இடைப்பட்ட காலப்பகுதியை மூன்று காலகட்டங்களாகப் பிரிப்பதற்கு 1967-1968 மற்றும் 1977-1978 ஆகிய ஆண்டுகள் பயன்படுத்தப்படுகின்றமையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் இவ்வாண்டுகளில் தான் பொருளாதாரத்தைத் தாராளமயப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பணவீக்கத்தில் கூடிய தாக்கம் செலுத்தக்கூடிய நாணய மதிப்பிறக்கமும் (1967இல் 20 வீதம் மற்றும்1977 இல் 46 வீதம் ) மேற்கொள்ளப்பட்டது.

**குறைந்த பணவீக்கத்தினைக் கொண்ட சகாப்தம் (1953-1967)**

1953-1967 இடைப்பட்ட காலப்பகுதியானது குறைந்த பணவீக்கத்தினைக் கொண்ட காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் வருடாந்த சராசரி பணவீக்கம் 0.9 வீதமாக மட்டுமே காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் நிலவிய குறைந்த பணவீக்கத்திற்கு பல காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. இக்காலப்பகுதியில் இலங்கையும் உலகின் ஏனைய நாடுகளும் நிலையான நாணய மாற்று வீதத்தைப் பின்பற்றியமை அவற்றுள் முதன்மையானதாகும். அத்துடன் இலங்கை இறக்குமதி செய்யும் பொருட்களின் விலையதிகரிப்பு குறைவாக இருந்தமையினால் இறக்குமதியில் கூடுதலாகத் தங்கியிருந்த போதிலும் குறைவான பணவீக்கத்தையே நாடு அனுபவித்தது. பண நிரம்பலின் குறைவான வளர்ச்சி வீதமும் அத்தியாவசியப் பொருட்களுக்கு உள்நாட்டில் ஏற்பட்ட பற்றாக்குறையானது இறக்குமதி மூலம் நிரம்பல் செய்யப்பட்டமையும் பணவீக்க அதிகரிப்புக்கு வழிவகுக்கவில்லை. மேலும் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட விலையதிகரிப்புக்கள் உணவுப் பொருட்கள் மற்றும் ஆடைகள் என்பவற்றின் மீதான விலைக்கட்டுப்பாடுகள், பங்கீட்டு விநியோகம் மற்றும் மானியம் என்பனவற்றின் மூலம் குறைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியிலும் விநியோகத்திலும் அரசாங்கம் முக்கிய பங்கு வகித்தமையானது இக்காலப்பகுதியில் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதில் பாரிய பங்களிப்பினைச் செய்தது.

**மிதமான பணவீக்கத்தினைக் கொண்ட சகாப்தம் (1968-1977)**

இக்காலப்பகுதியானது முன்னைய காலத்துடன் ஒப்பிடும் போது இரட்டை இலக்கத்துடன் கூடிய மிதமான ஆனால் ஓரளவு அதிகரித்த பணவீக்கத்தினை அனுபவித்த காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. 1968-1977 காலப்பகுதியில் வருடாந்த சராசரி பணவீக்கம் 6.0 வீதமாகக் காணப்பட்டது 1967ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நாணய மதிப்பிறக்கமும் முதலாவது பெற்றோலிய அதிர்ச்சியுமே பணவீக்கமானது இக்காலப்பகுதியில் அதிகரிப்பதற்குப் பிரதானமாகப் பங்களித்த காரணிகளாகும். 1971 ஆம் ஆண்டிலேற்பட்ட ஜே.வி.பி கிளர்ச்சியானது நாட்டின் உற்பத்தி இயலளவைப் பெருமளவில் பாதித்ததுடன் அரசாங்கமானது பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு பெருமளவு பணத்தினைச் செலவிடவேண்டி நேரிட்டது. இந்நடவடிக்கையானது பணவீக்க அழுத்தத்திற்கு வழிகோலுவதாக அமைந்தது. மேலும் 1973-1974 காலப்பகுதியில் உள்நாட்டிலும் இலங்கைக்கு உணவுப் பொருட்களை வழங்கும் நாடுகளிலும் ஏற்பட்ட பாரிய வரட்சியின் காரணமாக உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைவடைந்து அவற்றின் விலைகளில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. உணவுப் பொருட்களுக்கான உலகசந்தை விலைகளில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பானது உள்நாட்டு விலை மட்டத்திலும் உறுதியாக அதிகரிப்பை ஏற்படுத்தியது. இலங்கை பெற்றோலிய தேவைகளுக்காக வெளிநாடுகளிலேயே முழுவதுமாகத் தங்கியுள்ள நிலையில் 1973 இல் ஏற்பட்ட முதலாவது பெற்றோலிய அதிர்ச்சியானது பொருளாதாரத்தினை மிக மோசமாகப் பாதித்தது. பெற்றோலிய விலைகளிலேற்பட்ட கடும் விலையதிகரிப்பானது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்களின் விலைகளையும் அதிகரித்ததோடு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளையும் அதிகரித்தது. இவையே முன்னைய காலங்களுடன் ஒப்பிடும் போது இக்காலப்பகுதியில் நாடு சார்பளவில் உயர் பணவீக்கத்தை அனுபவிப்பதற்கு வழிகோலிய காரணிகளாகும்.

**அதிகூடிய பணவீக்கத்தினைக் கொண்ட சகாப்தம் (1978-2007)**

இக் காலப்பகுதியானது இரட்டை இலக்கத்துடன் கூடிய நீண்ட காலம் நீடித்த உயர் பணவிக்கக் காலமாகப் பொருளியலாளர்களால் பார்க்கப்படுகின்றது. 1978-2007இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பணவீக்கமானது சராசரியாக 11.7 வீதமாகக் காணப்படுகின்றது. 1980 ஆம் ஆண்டானது இலங்கை வரலாற்றிலேயே அதிகூடிய பணவீக்கம் நிலவிய ஆண்டாகும். இவ்வாண்டில் பணவீக்கமானது 26.1வீதமாகக்காணப்பட்டது. பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர் முகாமை செய்யப்பட்ட நாணய மாற்று வீதம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இலங்கை நாணயமானது அமெரிக்க டொலருக்கு எதிராக 46 வீதத்தினால் நாணய மதிப்பிறக்கத்தின் பின்னர் ஒரு அமெரிக்க டொலரின் இலங்கை ரூபாப் பெறுமதி 8.60 இலிருந்து 16.00 ஆக அதிகரித்தது. 1995 இன் பின் நெகிழ்ச்சியுடைய நாணய மாற்று வீத முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின் இலங்கை ரூபாவின் பெறுமதியானது படிப்படியாகத் தேய்வடையத் தொடங்கியது. அன்னியச் செலாவணியின் உள்வருகையானது அதன் வெளியேற்றத்தை விடக் குறைவாகக் காணப்பட்டமையே இதற்கான காரணமாகும். நாணயப் பெறுமதி இறக்கமும் ரூபாவின் பெறமதித் தேய்வும் பணவீக்கத்தின் மீது அதிக தாக்கத்தினைச் செலுத்தின. 1977 இன் பின்னர் விரிவான உணவு மானியம் நீக்கப்பட்டு வருமானம் குறைந்த மக்களுக்காக உணவு முத்திரைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் நீண்ட காலம் அமுலில் இருந்த விலைக்கட்டுப்பாடுகளும் அனுமதிப்பங்கு முறைகளும் (Quota) நீக்கப்பட்டன. அத்துடன் கோதுமை மா, மண்ணெண்ணெய் என்பவற்றின் விலைகளிலும் பொதுப்போக்குவரத்துக் கட்டணங்களிலும் அதிகரிப்பு செய்யப்பட்டது. இவையாவும் தொடர்தேர்ச்சியான விலையதிகரிப்புக்கு வழிகோலின.

தொடர்ந்து ஏற்பட்ட ரூபாவின் பெறுமதி தேய்வு, அதிகரித்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கடன்கள் மூலம் ஈடு செய்யப்பட்டமை மற்றும் ஏற்றுமதியில் ஏற்பட்ட விரிவாக்கம் என்பன பண நிரம்பலில் ஒரு கணிசமான அதிகரிப்பு ஏற்பட வழிவகுத்தன நாட்டில் நிலவிய உயர் வட்டி வீதமானது அதிக வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சலை ஊக்குவித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இறக்குமதிகளின் உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது இலங்கையில் பணவீக்கத்தின் மீது குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்தியது. இவ்வனைத்தினதும் கூட்டு விளைவானது விலைமட்டத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தியது.


1980 களின் ஆரம்பத்தில் அரசாங்கம் பல பாரிய அபிவிருத்தித்திட்டங்களில் முதலீடு செய்தமையானது (உம்) மகாவலி அபிவிருத்தித் திட்டம்) நாட்டில் பண நிரம்பலை அதிகரித்த அதேவேளை மோசமான காலநிலையும் நாட்டின் வட கிழக்குப் பிரதேசத்திலும் தென்பகுதியிலும் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைமைகளும் உள்நாட்டில் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் வீழ்ச்சிக்கு காரணமாகின. இவற்றின் ஒட்டுமொத்த விளைவாக பணவீக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகியது.

1980 களின் இறுதிப்பகுதியிலும் 1990 களின் ஆரம்பத்திலும் நாட்டில் உயர் பணவீக்கம் நிலவியது 1988 இன் பின்னர் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு உதவும் நோக்குடன் அரசாங்கமானது பிரபல்யமான ஜனசக்தி எனப்படும் வறுமை யொழிப்புத் திட்டத்தினை அமுல்படுத்தியது. எனினும் 1988 இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15 வீதமாகக் காணப்பட்டதுடன் இரண்டாவது தாராளமயமாக்கல் காலப்பகுதி என அழைக்கப்படும் 1988-1994 காலப்பகுதியில் தனியார் மயமாக்கலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் சென்மதி நிலுவையின் மூலதனக் கணக்கிலும் சில தாராளமயமாக்கங்கள் இடம் பெற்றன. இவற்றின் காரணமாக இக்காலப்பகுதியில் பணவீக்கமானது சார்பளவில் உயர்வாகவே காணப்பட்டது.

குறிப்பாக 2005 ஆண்டிலிருந்து பணவீக்கமானது தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது. அதிகரித்துச் செல்லும் பாதுகாப்புச் செலவு, நாட்டின் வடக்குக் கிழக்குப்பகுதிகளில் விவசாய உற்பத்தி, மீன்பிடி மற்றும் பாலுற்பத்தி என்பன மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளமை, இறக்குமதிப் பொருட்களின் விலைகள் குறிப்பாக பெற்றோலியம், கோதுமை மா மற்றும் பால் மா என்பவற்றின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றமை, மற்றும் பண நிரம்பலின் தொடர்ச்சியான அதிகரிப்பு என்பனவே தற்போது வேகமாக அதிகரித்துச் செல்லும் பணவீக்கத்திற்குரிய பிரதான காரணங்களாகும். இங்கு முக்கியமான விடயம் யாதெனில் வட்டிவீதத்தை அதிகரித்து சேமிப்பினைத் தூண்டி சுற்றோட்டதிலுள்ள பணத்தின் அளவைக் குறைத்து பணவீக்கத்தைக் குறைக்க முடியும் என்ற நோக்கில் தற்போது மத்திய வங்கியினால் பணக்கொள்கை செயற்படுத்தப்படுகின்றது. இதனால் வட்டி வீதம் மீண்டும் மீண்டும் அதிகரிக்கப்படுகின்றது. இந்நடைமுறை எதிர்ப்பார்ப்பதற்கு மாறான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும் அதாவது வட்டிவீத அதிகரிப்பானது முதலீட்டைக் குறைத்து மொத்த உற்பத்தி வீழ்ச்சியடையுமானால் கேள்வித்தூண்டல் பணவீக்கம் ஏற்பட்டு விலைகள் மேலும் மேலும் அதிகரிக்கக்கூடும்.

**உரு: 2 கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின்படி தெரிவு செய்யப்பட்ட காலப்பகுதிகளில் வருடாந்த சராசரி பணவீக்க வீதம்**

மூலம்: இலங்கை மத்திய வங்கி (பல்வேறு ஆண்டறிக்கைகள்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையில் இலங்கையில் பணவீக்கத்தின் போக்கு**

அண்மையில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ விலைச்சுட்டெண் அறிவித்தலுக்கிணங்க புதிய கொழும்பு நுகர்வோர் விலைசுட்டெண் மூலம் கணிக்கப்படும் பணவீக்கமே இனிவரும் காலங்களில் இலங்கையின் உத்தியோகபூர்வ பணவீக்கமாகக் கொள்ளப்படும். இச்சுட்டெண்ணானது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் காலத்தின் தேவை என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு கணிக்கப்படுகின்றது. இப்புதிய விலைச்சுட்டெண்ணானது தற்போதைய கொள்வனவுக் கோலங்களைப் பிரதிபலிப்பதுடன் விலை பற்றிய தகவல்கள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணைப் போல் கொழும்பு மாநகரசபைப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள ஏழு சந்தைகளில் பெறப்படுவதாக அல்லாமல் கொழும்பு மாவட்டத்தில் உள்ள 12 இடங்களில் சேகரிக்கப்படுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிப்பீட்டின் போது 125 வகையான பொருள் தொகுதிகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. ஆனால் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிப்பீட்டின் போது 300 வகையான பொருள் தொகுதிகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பொருள் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அவற்றுக்கு வழங்கப்படும் நிறையளிப்பும் குறைவடையும். புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட் டெண்ணானது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் உள்ளடக்கப்படாத சில பொருள் தொகுதிகளை உள்ளடக் குவதால் இரு சுட்டெண்களாலும் கணிப்பிடப்படும் பணவீக்க வீதங்கள் வேறுபடுகின்றன. உதாரணமாக எரிபொருளுக்கும் வெளிச்சத்திற்கும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மண்ணெண்ணெய் மட்டும் கருத்திற் கொள்வதோடு கூடிய நிறையையும் வழங்குகின்றது. மின்சாரமும் எரிவாயுவும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. ஆனால் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மின்சாரம் மற்றும் எரிவாயு என்பனவற்றை கவனத்திற் கொள்கின்றது. புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் பொருள் தொகுதியில் 10 (Groups) குழுக்களையும் 83 உப வகுப்புக்களையும் (Sub-Classes) உள்ளடக்கியுள்ளது. ஆனால் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 10 குழுக்களையும் 38 உப வகுப்புக்களையும் மட்டுமே உள்ளடக்கியுள்ளது. புதிய சுட்டெண்ணில் உணவுப் பொருட்களுக்கான நிறையளிப்பு வீதம் 68.3 வீதத்திலிருந்து 46.7 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ள அதேவேளை உணவு அல்லாத பொருட்களுக்கான நிறையளிப்பு வீதம் 31.7 வீதத்திலிருந்து 53.3 வீதமாகக் அதிகரிக்கப்பட்டுள்ளது. உயர் நிறையளிப்பு வீதங்கள் நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (18.29%), போக்குவரத்து (9.47%), தொடர்பாடல் (4.42%), சுகாதாரம் (4.18%) என்பவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளமை புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் விசேட சிறப்பசமாகும். இச்சுட்டெண்ணின் படி குறிப்பாக 2006 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் காணப்படும் அதிதீவிர பணவீக்க நிலைமைக்குப் பெற்றோலியப் பொருட்களினதும் உணவுப் பொருட்களினதும் விலைகளில் ஏற்பட்ட அதிதீவிர அதிகரிப்புக்களே பெருமளவுக்குப் பங்களித்துள்ளன. இதனை உரு 3 நன்கு வெளிப்படுத்துகின்றது.

**உரு: 3 புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் படி பணவீக்கம்**

மூலம்: இலங்கை மத்திய வங்கி (பல்வேறு ஆண்டறிக்கைகள்)

குறிப்பு: 2008 ஆண்டுக்கான தரவு 2008, மே மாதத்திற்குரியதாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மையப்பணவீக்கம் (Core Inflation) என்பது பற்றி தற்போது பரவலாகப் பேசபடுகின்றது. 2008 மே மாதத்தில் மையப்பணவீக்கம் 9.6 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின்படி பணவீக்கமானது இதே காலப்பகுதியில் 26.2 வீதமாகக் காணப்படுகின்றது. மையப் பணவீக்கம் என்பதன் கருத்து யாதெனில் விலைச்சுட்டெண் கணிப்பின் போது உள்ளடக்கப்படும் பொருள் தொகுதியிலிருந்து அதிக விலைத்தளம்பல்களுக்கு உள்ளாகும் பொருட்களை நீக்கிவிட்டு பணவீக்கத்தினைக் கணிப்பதாகும். இலங்கையில்தற்போது உணவு மற்றும் பெற்றோலியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதால் அவ்விரு பொருட்களும் மையப்பணவீக்கக் கணிப்பீட்டின் போது நீக்கப்பட்டுள்ளன. ஆனால் பொருளியலாளர்களின் கருத்துப்படி சூழலியல் காரணிகளால் உணவுப் பயிர்கள் அழிவடையும் போது உணவுப் பொருட்களுக்கான விலைகள் தற்காலிகமாக அதிகரித்தாலும் பின்னர் உணவு உற்பத்தி வழமைக்குத் திரும்பியவுடன் அவற்றின் விலையும் உறுதி நிலையை அடைந்து விடும். அதே போல் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில்திடீர் யுத்தம் ஏற்பட்டு அவற்றின் பெற்றோலிய ஏற்றுமதி பாதிக்கப்பட்டு பொற்றோலிய விலைகள் உயர்வடைந்தாலும் பின்னர் யுத்தம் ஓய்ந்து வழமை நிலை திரும்பியவுடன் பெற்றோலிய விலைகளும் உறுதி நிலையை அடைந்து விடும். இவ்வாறான சூழ்நிலைகளில் தற்காலிக விலைத்தளம்பல்களுக்கு உள்ளாகும் உணவு மற்றும் பெற்றோலியப் பொருட்களை நீக்கிவிட்டு மையப்பணவீக்கத்தினை கணிப்பது பொருளாதாரக் கொள்கை வகுப்பில் பயன் தரக்கூடியதாகும். ஆனால் தற்போது உணவுப் பொருட்களினதும் பெற்றோலியப் பொருட்களினதும் விலை அதிகரிப்பு ஒரு குறுகிய காலத்திற்கு மட்டும் நீடிப்பதொன்றாகத் தெரியவில்லை. மாறாக அவை உறுதியாக நீண்ட காலத்திற்கு அதிகரிக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. இந்நிலையில் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் மிக முக்கியமான பொருட்களின் விலையதிகரிப்பைக் கவனத்திற் கொள்ளாமல் மையப்பணவீக்கத்தினைக் கணிப்பது நடைமுறையில் பொருத்தமற்றது எனப் பொருளியலாளர்கள் வாதிடுகின்றனர்.

பணவீக்கம் என்பது வெறுமனே உள்நாட்டு விலைகளை அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் பாதிப்பதுடன் மட்டும் நின்றுவிடப் போவதில்லை. அது உற்பத்தித் திறனையும் பாதித்து ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளையும் அதிகரிக்கச் செய்வதால் இலங்கை ஏற்றுமதியாளர்களின் போட்டித்திறன் உலக சந்தையில் பாதிப்படைந்து நாட்டின் ஏற்றுமதி வருமானத்தினையும் பாதிப்படையச் செய்யக்கூடும். ஆகவே பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கும் அதேவேளை அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை கட்டுப்படுத்த வேண்டியது பொருளாதார நோக்கில் மிகவும் இன்றியமையாததாகும். இதற்கு வினைத்திறனான இறைக்கொள்கையினதும் பணக்கொள்கையினதும் அமுலாக்கம் என்பது மிகப்பிரதானமானதாகக் காணப்படுகின்றது

**கோபாலபிள்ளை அமிர்தலிங்கம்**
**BA Hons.(Jaffna); DED (Colombo),MA(Colombo),M.Phil (JNU)**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**பொருளியல் துறை**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**************************************************************************************

கல்வி ஒரு மலை அதில் ஏறுவது கடினமல்ல ஆனால் பயிற்சி தேவை

நல்ல காலம் நமது காலடியில் வந்து விழாது அதை நோக்கி நாம்தான் கால்கடுக்க நடக்க வேண்டும்

சில சமயத்தில் உனக்குத் தோல்வி நேரலாம் அதற்காக மனம் உடைந்து முயற்சியைக் கைவிடாதே
முடியாது என்பது மூடர்களின் வார்த்தையாகும்.

பாடசாலை உனக்கு என்ன செய்கிறது என்று கேட்காதே
நீ பாடசாலைக்கு என்ன செய்தாய் என்று உன்னிடம் நீ கேட்டுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நாடக தேடலுக்கு சிறு அறிதல்

சிறுவர் நாடகம் பற்றி எனது தேடல், கற்கை ஆக்கச் செயல்ப்பாட்டு அனுபவம் என்பன ஊடாக ஓர் அறிதலை இங்கு முன்வைக்க முனைகின்றேன். இவ் அறிதல் வெளிப்பாடு வாசகர்களை தேடலுக்குள் உட்படுத்தும், ஆய்வுகளை முன்னெடுக்க வைக்கும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் சிறுவர் நாடகம் பற்றிய தனி அறிதலுக்கு முன் நாடகம் பற்றிய பார்வைத் தெளிவு அனைவர்க்கும் அடிப்படையாகும். பல ஆய்வாளர்கள், அறிஞர்கள், நாடகவியலாளர்கள் வெளிப்படுத்திய முடிவுகளையும் ஆய்வு தெறிப்புகளையும் அறிதல் அவசியம்.

மேற்குறிப்பிட்ட துறை சார்ந்தோர் சடங்குகளில் இருந்தே நாடகம் தோற்றம் பெற்றது என்கின்றனர். சடங்குகளின் மதக் கூறுகளை தவிர்ந்து விடும் போது அது கலை யாகின்றது என்கின்றனர். ஆகவே நாடகம் என்பது ஆற்றுகைகுள்ளானதாகும். ஆற்றுகையின் மூலம் ஒன்றினை அல்லது ஒரு விடயத்தினை நிகழ்த்திக் காட்டுவது நாடக மாகின்றது. நாடகமும் அரங்கியலும் என்ற கற்கை நெறி இரு உள்ளிருப்பைக் கொண்டது என்பர்.

முதலாவது நாடகம் எனும் கலை வடிவமூலமாக மனிதனை விளங்கிக் கொள்ளும் புலமை முயற்சியாகும். இரண்டாவது நிகழ்திக் காட்டுதல் ஆற்றுதல் மூலமும் அதற்கேற்ற சூழலை உண்டாக்குவது மூலமும் மாணவர் சிறுவர் படைப்பாற்றலை வளர்க்கும் கலையாகும்.

ஈழத்து நாடக வரலாற்றை உலக நாடக வரலாற்றோடு ஒப்பிட்டு ஆய்வுகளை முன்னெடுத்து ஈழத்து பேராசிரியர்கள் இந்திய நாடக வியலாளர்கள் நாடகம் பற்றி அறிதலுக்கான அற்புதப் படைப்புகளை முன்வைத்துள்ளளர். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் சி. மௌனகுரு அவர்கள் விரிவுரையாளர் பாலசுகுமார் திரு குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் இன்னும் பலர் செய்த ஆய்வு நூல்கள் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பாடப் புத்தகங்களாகவும் உள்ளன. இவ் உயர் கல்விமான்களின் ஆக்கங்களில் சிறுவர் நாடகம் பற்றிய விரிவான அறிதல் விளக்கப்பட்டுள்ளது.

இன்று கல்வியில் நாடகம் அரங்கியல் ஓர் பாடமாக உள்வாங்கப்பட்டுள்ளது அவற்றில் மாணவர்கள் வளர்ச்சி நிலைக்கு நாடக ஈடு பாடு ஊக்குவிக்கப்படுகின்றது. சிறுவர் நாடக ஆக்கம் ஆற்றுகை முதன்மைப்படுத்தப்படுகின்றது. ஆகவே சிறுவர் நாடக அறிதல், ஈடுபாடு செயலாக்கம் என்பனவற்றை ஆசிரியர் மாணவர்கள் மத்தியில் கற்கும் வாய்பை உருவாக்குவது பெரும் மத்தியில் கற்கும் வாய்பை உருவாக்குவது பெரும் பணியாகும்.

ஆதலால் சிறுவர் நாடகம்பற்றி அறிதலும், ஆற்றுகையும், முழுமையாக பார்வைக்கு உட்படுத்துவதும் மிக மிக கற்கை நெறிக்கு உரியதாகும்.

மேலைய நாடுகளில் மிகச்சிறு வயதிலேயே அரங்குக்கும் அரங்க விளையாட்டுக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள். இவ் அரங்குகள் சிறுவர்களுக்கு அறிவூட்டும் செயல்களையே முன்னிலைப் படுத்துகின்றது சிறுவர்களின், அழகியல் உணர்வு, இரசிப்புத்தன்மை, உருவாக்கும் திறன், உளவியல் ஆற்றல் அவதானம், நிதானம், கற்பனை, பகுத்தறிதல், தன்னம்பிக்கை , சுறுசுறுப்பு, குரல்வளம் பேச்சுத்திறன், பொதுநோக்கு, கூட்டுமுயற்சி என்பனவற்றைப் பேணுகின்றது இவற்றை இத்துறை சார்ந்த அறிவு, ஆற்றல், பயிற்சி தேர்ச்சி பெற்றவர்கள் சிறுவர்களுக்கான அரங்கச் செயற்பாட்டையும் நாடகத்தையும் தயாரிக்கின்றனர். நாடகத்தயாரிப்பு என்பது மிகுந்த கவனத்துடனனான பொறுப்பு மிக்கதானதாகும்.

தமிழ் கலை இலக்கியப்படைப்புகளில் சிறுவர் நாடக தயாரிப்பு மட்டுமல்ல ஏனையவையும் அரிதாகவே உள்ளது என்பதுடன் அவைகள் விமர்சனங்களுக்குள்ளும் உள்வாங்கப் படுகின்றன. ஆயினும் தமிழ்நாட்டில் திரு இராமானுஜம் அவர்களும் ஈழத்தில் திரு குழந்தை ம. சண்முகலிங்கம் திரு.சி.மௌனகுரு ஆகியோரின் சிறுவர் நாடகங்கள் முக்கியமாக் கருதப்படுகின்றன. இன்று பாடசாலைமட்டத்தில் சிறுவர் நாடகம் பற்றிய தேடல், அறிதல் செயல்படுத்தல் என்பன மாணவர்களின் உளவள ஆற்றல், ஆழுமை விருத்தி கல்வி கலை இலக்கிய மேலான மனித நேய மேம்பாட்டுக்கும் இவ் அறிதல் அதிமுக்கியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே சிறுவர் நாடகம் பற்றிய தெளிதல் அனைவர்க்குமானதாகின்றது. சிறுவர் நாடகம் என்பது சிறுவர்க்கானது என்பதில் இறுக்கப்பார்வை அவசியம். சிறுவரின் நாடகங்கள் சிறுவாக்கானாது என்பதை சிந்திப்பது பொருத்தமானமாகும். சிறுவர் நாடகமானது சிறுவர்கள் நடிக்கும் நாடகம், சிறுவர்களும்பெரியோரும் சேர்ந்து நடிக்கும் நாடகம், சிறுவர்களுக்காக பெரியோர்கள் நடிக்கும் நாடகம். என மூன்று முறைமைகள் கொண்டிருக்கும் ஆயினும் சிறுவர்களின்' ஆழுமைவிருத்தியைக் கொண்டவையாகவே அவை அமைந்ததாக இருக்கவேண்டும்.

உளவள ஆற்றுப்படுத்தல் கல்வி கலை இலக்கிய ஆர்வ மூட்டல் என்ற உள் நோக்கில் மாணவர்களின் ஆழுமை விருத்திக்கான பட்டறைகளை பாடசாலைகளில் நிகழ்த்துதலில் ஈடுபட்டு வருகின்ற எனது அனுபவம் இதனை நன்குணர வைப்பதை அறிய வாய்ப்பாகின்றது.

இன்றைய சூழலிலும் கல்வியில் மாற்றச் செயல் நடவடிக்கைகளினாலும் நவீனப் போக்குகள் உள்வாங்கப்படுதலினாலும் மாணவர் சிறவர்களின் மனபோக்கையும் மனத்தாக்கங்களை ஏற்படுத்தும் காரண காரியங்களை அறிதலுக்கு உட்படுத்த முடிகின்றது. சிறுவர் நாடகங்கள் எமது சூழலில் ஆக்கம் செய்யப்படுவது அரிது என்பர் ஆயினும் பேசப்படும் ஆக்கங்களும் உள எனினும் விஞ்ஞான நவீன அறிவியல் சார்ந்த ஆளுமை விருத்திக்கான படைப்புகளை வெகுவாகவும் விரைவாகவும் எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இதுதுறை சார்ந்தோர்களின் முன் பெரிதாகவும் உள்ளது.

ஆதலால் சிறுவர் நாடகம் பற்றிய அறிதலையும் ஏன் நாடகம் ஏனைய கலைகள் பற்றியும் பாடசாலை மட்டங்களில் இருந்தே கற்பித்தல், பயிற்றுவித்தலை உறுதி மிக்கதானதாக அமைத்துக் கொள்ள வேண்டியது அதி முக்கியமான தொன்றாகும்.

சிறுவர்கள் எப்போதும் மிகுந்த ரசனையும் அதனூடாக மகிழ்வினையும் அடைவதையே நினைப்பாகக் கொண்டவர்கள் என்பதால் புனைவுகள், அதீத கற்பனைகள், பிரமிப்புகள் இசை கவிதை ஆடல், பாடல், விளையாட்டு கூடிக்குதூகலித்தல் என்பவற்றில் இருந்து பிரிக்க முடியாத மனதாராவார். ஆகவே சிறுவர்களுக்கான அனைத்துப் படைப்புகளம் இவற்றைக் தவிர்த்தன வையாக அமைய முடியாது.

இளம் பார்வையாளருக்கான லெனின் கிராட் அரங்கத்தின் ஆரம்பகர்த்தாகவும் சிறுவர் அரங்கத்தில் பாண்டித்தியம் பெற்றவருமான அலெக்சாண்டர் பிரயென் சேவ் சிறுவர் அரங்கு பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

"அரங்குக் கலைஞர்களைப் போன்ற உணர்திறனுடைய ஆசிரியர் களாகவும் ஆசிரியர்களைப் போன்று சிந்திக்கக்கூடிய கலைஞர்களாகவும் சிறுவர்கள் உருவாக வேண்டும் என்கின்றார்.

சிறுவர் அரங்கு கற்றலும் கற்பித்தலுமான இருதிறன் வெளிப்பாடாக அமைவதையே நாம் நோக்குகின்றோம் ஒரு சிறுவர் நாடகத்தயாரிப்பாளர் அவர்களின் வயது சூழல் வளர்புப்பாங்கு உளவியல் பண்பு போன்றவையை கற்பிற்போர் அறிந்திருப்பது அவசியமோ அதே போன்று சிறுவர் நாடகத் தயாரிப்பாளர்களும் அறிந்திருப்பது அவசியம் சிறுவர்களின் இயல்பான திறன்களே சிறுவர் நாடகங்களில் அடிப்படையாக அமைவது முக்கியமாகின்றது. இதில் முதியோர்களின் பங்களிப்பானது அவர்களின் குணஇயல்பு பருவ வளர்ச்சி விருப்பு ஆகியவற்றைக் கொண்டே இடம் பெறுகின்றமை கவனத்துக்குரியதாகின்றது.

சிறுவர் நாடகத்துக்குரிய ஆய்வும், முடிவுகளும் வெளிபாடுகளும் அறிதல்களும் விரிவான நூலாக அமைகின்ற பெரும் விடயங்கள் உள்ளடங்கியதாகும். கட்டுரை வடிவங்களிலும் சிறு பெரும் நூல்களாகவும் எழுத்தாக்கமாக இருந்த போதும் அவை பார்வைக்கு உட்படுத்துவது போதுமானதாக உளதா என்பது கேள்வியாக எழுகின்றது. ஆகையால் இத்துறை வளர்ச்சிக்கும். ஈடுபடுவதற்கான ஆர்வத்தூண்டலுக்கும் சிறுவர் நாடக சம்மந்தமான பட்டறைகள், கருத்தரங்குகள், செயல் அமர்வுகள் உரையாடல் நிரந்தரமான நிகழ்வாக்கப்பட வேண்டியது அதிமுக்கிமாகும் பாடசாலைகளில் இச் செயற்பாடுகள் நிரந்தரச் செயலாக்கப்படுவது மேலான பயன்பாடாகும்.

**கலைஞர். தம்பி தில்லைமுகிலன்**
**திருக்கோணமலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது அங்குசம் செய்வோம்.

ஓ விஞ்ஞானமே!
உன்
சாகசங்களைக் கண்டு
புளகாங்கிதம் கொண்டவர்களை
விரைவில்
தரையில் அடிக்கப் போகிறாய்
நேற்றுவரை
நீ செய்ததும்
இன்று நீ
செய்து கொண்டிருப்பதும்
மானிடத்தின்
புன்னகைக்காகவா?
இல்லை
கண்ணீருக்காகவா?
பூமித்தாய்க்கு
பொன்னாடை போர்த்தி
கௌரவிக்க வந்தனவாய்
இறுமாப்புக் கொண்டது மானிடம்
ஆனால் நீ
துகிலுரிய வந்த
துரியோதனனாய் அல்லவா மாறிவிட்டாய்.
ஒத்துக்கொள்
நீ
பூமியைக் குடைந்தது
குற்றமல்ல.
அதை
அண்டவெளியில் பரவியது
குற்றம்.
அணுவைப் பிளந்தது
குற்றமல்ல
அதை
அணுகுண்டாய்
செலுத்தியது
குற்றம்.
ஓசோன் சுவரில்
உன்னால் போடப்பட்ட
ஓட்டைகளால்
புற ஊதா தாக்கங்கள்
அல்லவா
புறப்பட்டு வருகிறது
விஞ்ஞான யானைக்கு
மதம் பிடித்து விட்டது.
எதிர்கால
கனவெல்லாம்
பாழாகப் போகுது.
வாருங்கள் மாணவ சமூதாயமே!
புது அங்குசம்
செய்வோம்.
சூரியனைப்பிடித்து
வங்கியில் வைத்து
இரவிற்கு செலவளிப்போம்.

**ஆக்கம்:-**
**செல்வி. சௌந்தரராஜன் பேரர்ச்சவி**
**தரம்:-8B**

## இன்று திருமலை இந்து கலாசார திணைக்களத்தின் பொங்கல் விழா

இந்து சமய கலாசார திணைக்களம் சாம்பல்தீவு தமிழ்மகா வித்தியாலயத்துடன் இணைந்து நடத்தும் 2008 தைபொங்கல் விழா இன்று சனிக்கிழமை காலை சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் க. யோகானந்தம் தலைமையில் நடைபெறும்.

இலங்கை இந்துசமய அபிவிருத்திச்சபையின் ஸ்தாபகத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜ் முன்னிலையில் நடைபெறும். இந்நிகழ்வில் திருமலை பிரதேச செயலாளர் திருமதி. சசிதேவி ஜலதீபன் முதன்மை அதிதியாகவும் கலாசார உத்தியோகத்தர் எஸ். மகேந்திரராஜா கௌரவ அதிதியாகவும், ஏ. சோதிலிங்கம், சைவப்புலவர், சு. பரசுராமன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் பங்கு பற்றுவர். வரவேற்புரையினை உப அதிபர் விஜயராஜேந்திரன் நிகழ்த்துவார்.

**"தினக்குரல்"** 2008-01-26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## School Development Society - 2008



**Left to Right (Seated)**
Mr.S.Sathiyanathan, Mr.S.Krishnamoorthy(Secretary), Mr.K.Yogananthan(Principal), Mr.T.Vijayarajendran, Mr.T.Sivarasa,
**Left to Right (Standing)**
Mr.S.Rasalingam, Mrs.C.Prabaharan, Mrs.S.Kulashangar, Mrs.K.Mathavarasa, Mrs.S.Soundararajan, Mr.S.Somasundaram, Mr.S.Venuthas.

## Non-Acadamic Staff -2008





## Prefect -2008



## Winners of Grade 5 Scholarship Examination 2005-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Village.

My village is sampalthivu. It is an ancient village situated 9km away from Trincomalee Town. surrounded by paddy fields. The majourity of people are Tamils who live in the village. They belong to Christianity Saivasm. Most of them are farmers but there are a lot of educated Doctors, Engineers and Teachers. About five Hundred families live in the village.

Our neighboring village is 'Salli'. There is a famous temple called "Salli Ambal". Trincomalee campus is situated near our village. There are many public places such as general hospital, school, library, church, temple and post office.

Our school is T/Sampalthivu Tamil Maha Vidyalayam. It was established in 1880. Our principal is Mr. K. Yogananthan. There are classes from grade 01 to grade 13. It is a mixed and '1'C school. About six hundred students study here. Number of Students pass Gr.05 Scholarship exam every year.

There is a pond in our village. It is very greenish. We keep our village clean, to maintain pollution free environment.

**S.Kobiraj.**
**Grade - 06**

# Mother Theresa.

She was one of the famous women in the world. She was an unforgettable woman. She did many services in her life she devoted. her whole life in doing services to the poor and helpless people and orphans she was a kind woman.

She was with her parents till the age of 18 years. After that she was sent to Calcutta at the age of 18 years. She was a geography teacher in Calcutta. She taught very well. She was kind and good with her students. She was an ordinary woman.

One day when she was traveling on the train. She heard a pitiful cry of the poor, helpless and orphans. She visited them and did many services to those people. In her life she won many prizes for her deeds and services. In 1979 she won the Nobel peace prize she died in Calcutta in the year of 1997 at the age of 87.

**T.Mathurshana.**
**Grade – 08A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் தொலைநோக்கும், பணிக்கூற்றும்
## Vision, Mission அமைத்தல்

ஒவ்வொரு நிறுவன செயற்பாட்டிற்கும் அந்நிறுவனத்தின் தொலைநோக்கும் (Vision) அதை நோக்கிய பணிக்கூற்றும் பணிபுரிகின்ற, பயன்பெறுகின்ற அனைவருக்கும் தெளிவாக விளங்கியிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

எந்த ஒரு பணிக்கும் இலக்கு இருக்க வேண்டும். அனைத்து பணிகளும் இலக்கு நோக்கியதாக அமைவதோடு ஒவ்வொரு செயற்பாட்டின் இலக்கை அண்மித்ததான நகர்வு மிகவும் அவசியமானது.

நோக்கமும் - செயற்பாடுகளும் ஒன்றிக்கும் போதே எடுத்துக் கொண்ட கருமம் வெற்றிபெறும். இதை பின்வரும் கூற்றுக்கள் தெளிவுபடுத்துகின்றன.

- VISION WITHOUT ACTION IS ONLY A DREAM
- ACTION WITHOUT A VISION IS PASSING THE TIME
- VISION WITH ACTION CAN CHANGE THE WORLD

அதாவது ,

- செயற்பாடுகளற்ற ஒரு நோக்கம் வெறும் கனவாகவே இருக்கும்
- நோக்கமில்லாத ஒரு செயற்பாடு வெறும் நேர விரயத்தையே கொடுக்கும்
- நோக்கங்களைக் கொண்டிருக்கும் செயற்பாடுகள் உலகை மாற்றியமைக்கக்கூடிய வல்லமை படைத்தவை.

குறிப்பாக பாடசாலைகளில் தொலைநோக்கு (Vision) அமைக்கப்பட்டு அதற்கேற்ப பணிக்கூற்றும் (mission) அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஒவ்வொரு பாடசாலையும் தமது ஊட்டப்பிரதேசத்தில் (CATCHMENT AREA) அதாவது தமது பாடசாலைக்கு வரும் மாணவர் வாழும் பிரதேசங்களின் நிலைக்கேற்ப, சமூகத்தின் நிலைக்கேற்ப தொலைநோக்கு (Vision) அமைக்கப்பட வேண்டும்.

பொதுவாக இன்று உலக மயமாக்கத்தில் உலகம் கிராமமாக தொழில்நுட்பசாதனங்களால் மாற்றமடைந்த நிலையிலும் பாடசாலைகளுக்கு பல தனித்துவமான தொலைநோக்கு அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடுகளும் உள்ளதால் பாடசாலைக்கு பாடசாலை இவை வெவ்வேறுபட்ட வடிவத்தில் அமைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

ஒரு நாட்டின் எல்லாப் பாடசாலைகட்கும் எல்லா விடயங்களிலும் ஒருமைப்பாடு காணப்படுவதில்லை பாடசாலைகளின் உள்ளீடுகளைப் பொறுத்த வகையில் முக்கிய வளத் தேவைகளான,

மனிதவளம் பௌதிகவளம் என்பவற்றில் பற்பல வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக மனிதவளத்தில் ஆசிரியர் வளப் பகிர்வு, ஆசிரிர் அதிபர்களின் தகமைத்திறன்கள், மனப்பாங்குகள் போன்றவைகளில் வேறுபாடுகள் உள்ளன. அத்துடன் மாணவர், பெற்றோர் நிலைகளிலும் சமூக, பொருளாதார, கல்வி, தொழில்நுட்ப, தொடர்புசாதன, போக்குவரத்து, பிரதேச நிலை முதலான பல விடங்களின் தாக்கங்களைப் பொறுத்தவரையிலும் கட்டடம், தளபாடங்கள், மைதானம், தொழில்நுட்பசாதனங்கள், கற்பித்தல் தொழில் நுட்பசாதனங்கள் போன்றவைகளில் பாடசாலைகளுக்கிடையில் வேறுபாடுகள் உள்ளன. இதனால் பாடசாலைகள் தமது தொலை நோக்கை தமது பாடசாலை அடைய வேண்டிய தேவைக்கேற்ப அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

தொலை நோக்கை (Vision) அமைக்கும் போது பாடசாலை எத்தகைய குழுக்களுக்கு உதவ வேண்டும்? சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டிய ஊட்டற் பிரதேசம் எது? பாடசாலை எதிர்நோக்கும் சவால்கள் எவை? எதிர்காலத்தில் கட்டி எழுப்ப விரும்பும் நிறுவன இயல்புகள் யாவை? தங்கள் பாடசாலை எத்தகைய கல்வியை வழங்க வேண்டும்? போன்ற வினாக்களுக்கு விடை காணக் கூடியதாக அமைக்கப்பட வேண்டும்.

பாடசாலையின் நிலையை நன்கு அறிந்து அங்கு என்ன தேவை முதலில் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென பகுப்பாய்விற்குட்படுத்தி - உணர்ந்து தொலை நோக்கை அமைப்பதற்கான குழுவை தீர்மானித்தல் வேண்டும். குழுவில் பாடசாலை முகாமைத்துவக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கக் குழு, மாணவ தலைவர்கள், கல்விப் புலத்திலுள்ளோர், நலன் விரும்பிகள், அறிஞர்கள் போன்றோரின் ஆலோசனைக்கமையவும் அமைக்கப்படல் வேண்டும். அவை பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு பொதுவான உடன்பாட்டுத் தீர்வுக்கு வந்து பாடசாலைச் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அமைக்கப்பட்ட தொலைநோக்கு, பணிக்கூற்றுக்கள் பாடசாலைச் சமூகம் ஏற்று செயற்படக் கூடியதாகவும் அனைவருக்கும் இலகுவாக விளங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அனைத்து மாணவர்களுக்கும். பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பொதுவாக பாடசாலைச் சமூகத்திற்கு தெளிவுடையதாக இருக்க வேண்டும். அப்போதுதான் இதை இலகுவாக நடைமுறைப்படுத்தவும் வெற்றி பெறவும் முடியும்.

குறிப்பிட்ட காலத்தில் அமைக்கப்பட்ட தொலைநோக்கு நிறைவுக்கு வந்தால் பின்னர் கால தேவைக்கு ஏற்பவும், சமூக தேவைக்கு ஏற்பவும் புதிய தொலை நோக்கை மாற்றி அமைக்கலாம்.

இலக்கை அடைந்து விட்டால் புதிய இலக்கை தீர்மானித்து செயற்பட வேண்டியது அவசியமானதாகும். அமைக்கப்பட்ட தொலைநோக்கை பின்வருமாறு மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட வேண்டும்.

01. சகலருக்கும் தெளிவாகவும் விளங்கக் கூடியதாகவும் உள்ளதா?
02. ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு சுருக்கமாக உள்ளதா?
03. நிறுவனத்தின் நோக்கம் என்ன என்பதைக் கூறுகின்றதா? என்ன? யாருக்கு? எப்படி? ஏன்?
04. முதன்மையான இலக்கு என்ன என்பதைக் கூறுகின்றதா?
05. நிறுவனத்தின் மையத் தேர்ச்சிகளை வெளிக்காட்டுகின்றதா?
06. நோக்கக்கூற்று எந்தளவிற்கு பரந்தது?
07. அது தங்களது நிறுவனத்தில் தீர்மானம் மேற்கொள்வதற்கு ஒரு தளமாகப் பயன்படுகிறதா?
08. நிறுவனத்தின் கலாசாரத்தை பிரதிபலிக்கின்றதா?
09. அடையக்கூடிய தராதரங்களைக் காட்டுகின்றதா?
10. ஒரு சக்தி மையமாக விளங்கும் வகையில் சொல்லாட்சி கொண்டுள்ளதா?

அமைக்கப்படும் தொலைநோக்கு அல்லது தூர நோக்கு அல்லது இலட்சிய நோக்கினை (Vision) மேற்கூறப்பட்டவாறு வினாக்களூடாக மதிப்பீடு செய்த பின்பே வெளியிட வேண்டும்.

பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள பின்வரும் தொலைநோக்கு, பணிக்கூற்றுகளை மாதிரிக்காக கவனத்தில் கொள்ளலாம்.

01.

i. Vision - தனியாள் விருத்தியூடாக சமூக விருத்தி
Individual development as well as social development

i Mission - சிறந்த ஆளுமைப்பண்புடையவர்களாக ஒவ்வொரு மாணவரையும் உருவாக்கும் பணியின் வினைத்திறனான கலைத்திட்ட செயற்பாடுகளூடாக சிறந்த சமுதாயத்தை தோற்றுவித்தல்.
Personality development of every student through effective curricular activities to make a good society.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.

i. Vision - நவீன தொழில் நுட்ப உத்திகளுக்கு முகம் கொடுக்கக் கூடிய அறிவும், திறனும், சிறந்த பண்பும் கொண்ட சமூகம்

i Mission - நவீன கல்வி உத்திகள் மூலம் எதிர்காலத்தின் சவால்களுக்கு ஏற்ப மேம்பாடடைந்த ஓர் சமூகத்தை அர்ப்பணிப்புடன் உருவாக்குதல்.

03.

i. Vision - மாறும் உலகுக்கு ஏற்ப தேர்ச்சி பொருந்திய தரமான கல்விச் சமூகம்
To build a skilled educational society to the trend of the changeable globe.

i Mission - வினைத்திறனும் விளைத்திறனும் மிக்க தரமான கல்வியைப் பெறுவதன் மூலம் செயல் துடிப்புள்ள மாணவரை உருவாக்குதல்
To produce an active and energetic student through an efficient, effective and qualitative education.

04.

i. Vision - அறிவு மிகுந்த உலகிற்கு ஈடு கொடுக்கத்தக்க தேர்ச்சி மிக்க பிரசைகள்
Competent citizens who cope with the erudit world.

i Mission - கடந்தகால, நிகழ்கால அனுபவங்களுடன் வருங்காலத்தின் சவால்களை ஆராய்ந்தறிந்து மேம்பட்ட கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும், திறனும், ஒழுக்கமும் உள்ள மாணவர்களை உருவாக்கிக் கொடுத்தல்.

இவைகள் பாடசாலைகளுக்கானவை. இதேபோல கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம், மாகாண கல்வி அமைச்சு, மாகாண கல்வி திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள் தங்களது இலக்குகளை - Vision, mision களை அமைத்துள்ளன.

பொதுவாக பாடசாலைகள் உலக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் UNESCO வினுடைய
Learn to know
Learn to do
Learn together
Learn to be போன்ற கருத்துக்களோடு எமது நாட்டினுடைய கல்வி அமைச்சின் தேசிய கல்விக் குறிக்கோள்கள் (08), மாணவர் அடைய வேண்டிய தேர்ச்சிகள் முதலானவையையும் உள்ளடக்கியதாக பாடசாலை கலைத்திட்ட முகாமைத்துவம் அமைய வேண்டும்.

பாடசாலைகள் சிறந்த ஆளுமை பண்புடையதாக எதிர்கால சமூகத்தை அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சியூடாக (KASP - Knowledge, Attitude, Skill, Practice) உருவாக்கி எதிர்காலத்தில் ஓம்பக்கூடிய வாழ்க்கைப்பாங்கை அமைக்கக்கூடிய தரமான நற்பிரசைகளாக உருவாக்குவதற்கு பாடசாலைகளின் தொலைநோக்கு (Vision) பணிக்கூற்று (mission) மிகப் பொருத்தமாக அமைக்கப்பட்டு அதன்படி செயற்பட்டால் பாடசாலைகள் வெற்றிபெறும். எதிர்கால தரமான சமூக உருவாக்கம் சிறந்தோங்கும்.

ஆ.செல்வநாயகம்
(Sp.Trd.Agri, BA, PGDE, PGDEM, M.Ed.SLPS-1.)
அதிபர்
தி/விபுலானந்தா கல்லூரி
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T/ Sampalthivu Tamil Maha Vidyalayam

## Staff - 2008

| Name | | Qualification |
|---|---|---|
| 01. | Mr.K. Yogananthan | B.A Dip.in.Edu |
| 02. | Mrs.S. Sounthararajan | B.A |
| 03. | Miss.A.J.O. Joy | Music Trained |
| 04. | Mrs. C. Theivendren | Primary Trained |
| 05. | Mrs. C. Prabaharan | Primary Trained |
| 06. | Mrs. S. Thiruchchiloganantha | B.A Dip.in.Edu |
| 07. | Mrs. S. Sivarajah | B.A |
| 08. | Mrs. T.T. Benjamine | Home Sci. Trained |
| 09. | Miss.R.Sherinchandrakumari | B.A |
| 10. | Mr. T. Vijayarajendran | Agriculture Trained |
| 11. | Mrs. R. Thiruchchelvam | Science Trained |
| 12. | Mrs. R. Lavakumar | Primary Trained |
| 13. | Mr. S. Vincent | English Trained, Dip.in ELT |
| 14. | Mrs.V. Uthayakumar | Maths Trained |
| 15. | Mrs.M. Sivakaran | Primary Trained |
| 16. | Mrs.P. Maithily | A/L |
| 17. | Miss.K.Vikneswary | Hinduism Trained |
| 18. | Miss.R.Uthayasganthi | National Diploma |
| 19. | Miss.J.S.Nilusha Antonina | National Diploma |
| 20. | Miss.K.Thavachchelvi | National Diploma |
| 21 | Mr.I.Jayakanth | National Diploma |
| 22. | Miss.R.Yogoskthiyamma | National Diploma |
| 23. | Mr.M.Kurukulasingam | B.A Dip.in.Edu |
| 24. | Mrs.V.Selvarajah | Primary Trained |
| 25. | Mr.N.Thayalasingam | B.A Dip.in.Edu |
| 26. | Mr.T.Parthiban | Primary Trained |
| 27. | Mr.K.Sivakalithas | B.A |
| 28. | Mr.N.Kirubanantham | B.A |
| 29. | Mrs.S.Kanimozhi | H.N.D.A , B.Com |
| 30. | Mrs.S.Kalaimahal | B.A |

**கல்விசாரா ஊழியர்கள் [தற்காலிக]**

**பா. விஜெயகுமார்** – (அலுவலக உதவியாளர்)

**இ. நகுலேஸ்வரன்** – (காவலாளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YEAR 5 SCHOLASHIP EXAMS WINNERS

## ( 2005 - 2008 )

2005

| | | | |
|---|---|---|---|
| 1) | THIRUCHELVAM ABIKESHAN | - | 140 |
| 2) | SIVARASA SAJEETHA | - | 132 |
| 3) | THIRUCHCHILOGANANTHA MATHURSHANA | - | 131 |
| 4) | THEVARASA TUSHANTH | - | 121 |
| 5) | SIVAKUMAR HEMAMANOJ | - | 119 |

2006

| | | | |
|---|---|---|---|
| 1) | THAVARASA KUGESHAN | - | 158 |
| 2) | NAKULESWARAN VITHUSHANA | - | 157 |
| 3) | NAKULESWARAN VINUSITHA | - | 155 |
| 4) | PIRABAHARAN SAPTHAVI | - | 152 |
| 5) | KANESAPILLAI LAVENJA | - | 141 |
| 6) | SETHUPANDI SUKITHA | - | 131 |

2007

| | | | |
|---|---|---|---|
| 1) | SIVAYOGANAYAHAM PRATHIYA | - | 159 |
| 2) | SIVARASA KOBIRAJ | - | 150 |
| 3) | JAYAKUMAR HESHIKA | - | 145 |

2008

| | | | |
|---|---|---|---|
| 1. | SIVARASA NILANUSHA | - | 143 |
| 2. | SOUNTHARARARAJAN APSHANA | - | 143 |
| 3. | THIRUCHCHELVAM AKSHAYAN | - | 137 |
| 4. | RAULPH MANMATHAN SINTHUJAN | - | 131 |
| 5. | PAVANANTHAMURUGAN ARJUN | - | 122 |
| 6. | PARANSOTHY PREMA | - | 122 |
| 7. | THANIKASALAM ANOSHAN PEDRAM | - | 118 |
| 8. | JEYAKANTHAN MITHURI | - | 117 |
| 9. | SUNTHARALINGAM NMI NIROSALINI | - | 116 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ தலைவர்கள் - 2008

1) செல்வன் - அமிர்தராஜாசிங்கம் நிரூஷன்
2) செல்வன் - மாணிக்கராசா தேவதர்சன்
3) செல்வன் - சிவஞானசுந்தரம் சுதாகரன்
4) செல்வன் - சிறீபவன் வசீகரன்
5) செல்வன் - சிவக்குமார் கேமசிவேஸ்
6) செல்வன் - மோகனதாஸ் அனுவாசன்
7) செல்வன் - திருச்செல்வம் அபிகேசன்
8) செல்வன் - தியாகராசா சசிகரன்
9) செல்வி - நிறோசலா ராஜ்
10) செல்வி - ஜனனப்பிரியா கௌரிதாஸ்
11) செல்வி - அகல்யா ஜோன் அமலதாஸ்
12) செல்வி - ராகினி நவரெட்ணம்
13) செல்வி - சத்தியரூபி ஜெயராசா
14) செல்வி - லோஜவிதா சௌந்தரராஜன்
15) செல்வி - லக்ஷகா சௌந்தரராஜன்
16) செல்வி - அக்ஷா தணிகாசலம்

## பெரியோர் வாக்கு

➢ தூசியைக் கண்டதும் இமைகள் மூடுவது போல்
தீமையைக் கண்டதும் விலகி விடவேண்டும்.
-புலவர் கீரன்-

➢ தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே
தோல்வியில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.
-லெனின்-

➢ பலர் தங்களிடமுள்ள திறமைகளை தட்டி எழுப்பாமலே – வாழ்க்கை
வீணையை மீட்டாமலே – வாழ்கையை முடித்துக்கொள்கின்றனர்.
-டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி-

➢ யார் அணுவளவு நன்மை செய்கின்றாரோ அவர் அதன் பலனைக் கொள்வார்
யார் அணுவளவு தீமை செய்கிறாரோ அவர் அதன் பலனை கண்டுகொள்வார்.
-அஸ்ஸில்ஸால்-

➢ ஒருவர் தன் தாய் தந்தையரை அவர்களுடைய வயோதிப காலத்தில்
பாதுகாக்கத் தவறினால் அதுவே அவன் வீழ்ச்சிக்கு காரணமாகலாம்.
-புத்தர் பெருமான்-

செல்வி.யோ.கம்ஷாயினி
தரம்-10B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரமுகாமைத்துவம்

**அறிமுகம் :**

ஒவ்வொரு மனிதனும் இயற்கையாக அருமையாக கிடைக்கும் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதன் மூலம் சிறந்த பயனை அடைந்து வாழ்க்கையில் முன்னேற்றமடைகின்றான். அந்த இயற்கையான வளங்களில் மிகவும் முக்கிமானதும் சேமிக்க முடியாததும் இழந்ததை மீண்டும் பெறமுடியாததுமான நேரம் / காலத்தினை நாம் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் எமது வாழ்வில் உயர்வான இடத்தினை அடையலாம்.

நேரமானது எல்லோருக்கும் பொதுவானதே. ஒரு நாள் 24 மணித்தியாலத்தினாலும், ஒரு வாரம் 7 நாட்களினாலும், ஒரு வருடம் 365 நாட்களினாலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது ஆசிரியர், மாணவர், ஏழை, பணக்காரன், முதலாளி, தொளிலாளி என்று வேறுபாடின்றி எல்லோருக்கும் சமனானதாகும். நேரம் பொன்னானது என எமது முன்னோர்கள் வர்ணித்ததன் மூலம் நேரத்தின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்தியுள்ளனர்.

நேர முகாமைத்துவம் எல்லோருக்கும் இன்றியமையாதது, நேர முகாமைத்துவம் தொடர்பான சிலமுக்கிய விடயங்களையும் நேர விரயத்தினை தடுப்பதற்கான வழிமுறைகளையும் இக் கூட்டுரையில் பார்ப்போம்.

நேர முகாமைக்கு பல்வேறுபட்ட நுட்பங்களும் அணுகுமுறைகளும் காணப்பட்ட போதும் அவற்றில் சிலவற்றை நாம் இங்கு காணாலாம். ஆனால் ஒரு சிறந்த நேர முகாமைக்கான அத்தியாவசிய தேவைகளாக நாம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- தெளிவான குறிக்கோள் – எதற்காக நேரத்தினை பயன்படுத்துவது.
- முன்னோக்கிய திட்டமிடல் – நேரப்பயன்பாட்டினை முன் கூட்டியே தீர்மானித்தல்
- எதிர்கால நடவடிக்கைகள் எதிர்வு கூறக்கூடியதும், முன்னுரிமைப்படுத்தக் கூடியதுமான ஆற்றல்.

**நேர விரயம்**

நாம் நாளாந்தம் எமது நேரத்தினை பல்வேறு வழிகளில் எங்களால் தெரிந்தோ தெரியாமலோ வீண் விரயம் செய்கின்றோம். பாடசாலைகளில், வகுப்பறைகளில், அலுவலகங்களில் நாங்கள் நேர வீண்விரயம் செய்வதைக் காணலாம்.

நேர விரயம் என்பதனை எங்கள் எல்லோரிலும் காணலாம். பொருத்தமில்லாமல் நேரத்தைப் பயன்படுத்துவது அல்லது ஒரு நடவடிக்கைக்காக தேவையில்லாமல் நேரத்தைப் பயன்படுத்துவது இதுவாக்கும்.

**பொதுவான நேர விரயங்கள் சில**

| | நேர விரயம் | உதாரணம் |
|---|---|---|
| 1. | கூட்டங்கள் | பொருத்தமில்லாத கூட்டங்களும், விடயம் (Agenda) இல்லாத கூட்டங்களும், முடிவில்லாத கூட்டங்களும். |
| 2. | இல்லை என்று சொல்ல முடியாமை | உயரதிகாரியை அல்லது மற்றவரை வெறுக்கக் கூடாது என்பதற்காக இல்லை அல்லது முடியாது என்று கூறமுடியாமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 3. | தொடர்பாடலின்மை | சிறந்த சரியான தொடர்பாடல் ஊக்கத்தினை தெரிவு செய்யாமை, தேவையற்ற நீண்ட உரையாடல் |
| 4. | தொலைபேசி அழைப்புகள் | அதிகாரப் பங்கிடுதலுள்ள வினைத்திறனின்மை |
| 5. | குறைவான அதிகாரப் பங்கீடு | உயர் அதிகாரிகள் தங்கள் பணிகளை உடன் முடித்துத் தரும்படி கூறும் பொழுது. |
| 6. | உயர் அதிகாரிகள் | செயற்படும் பணி தொடர்பாக தெளிவற்ற நிலை காணப்படுதல். |
| 7. | தெளிவற்ற இலக்கு | எதை முன்னுரிமைப்படுத்துவது என்பதிலுள்ள முரண்பாடு |
| 8. | முரண்பாடான/ முன்னுரிமைகள் அல்லது அதிகமான பணி | குழுவாகச் செயற்படும் பொழுது மற்றவர்களின் பணியில் தங்கியிருத்தல் |
| 9. | மற்றவர்களின் வேலைக்காக காத்திருத்தல் | குழுவாகச் செயற்படும் பொழுது மேல் / கீழ் உத்தியோகத்தர்களின் உடன்படாத தன்மை. |
| 10. | தகுதியற்ற உத்தியோகத்தர் | உத்தியோகத்தர்களின் உடன்படாத தன்மை |
| 11. | காலம் கடத்தல் / தாமதம் | தாமதப்படுத்தல் அல்லது பிற்போடல் |
| 12. | பொருட்களை / காகிதத்தை | தொழில் தளங்களில் அல்லது வீடுகளில் காகிதங்களை, பொருட்களை வேறுஇடத்தில் வைத்தலும், தேடலும் |
| 13. | மற்றவர்களின் தலையீடு | உயரதிகாரிகளின் தலையீடு |
| 14. | E-Mails | தேவையற்ற வருகையும், அதனைப்பார்வையிடலும். |
| 15. | கூடுதலான காகிதவேலை | அளவுக்கு அதிகமான காகித வேலையில் ஒரே நேரத்தில் ஈடுபடல் |

இவ்வாறு நேர வீண்விரயம் செய்யப்படுவதை நாம் கட்டுப்படுத்தலாம் வீண்நேர விரயத்தினை கட்டுப்படுத்தல் நாம் பழகிக் கொண்டால், அந் நேரத்தினை திட்டமிட்டால் வேறு பயனுள்ள தேவைக்கு பயன்படுத்தலாம்.

நேரத்தை மிகவும் வினைத்திறனாக முகாமை செய்வதற்கான சில ஆலோசனைகள்

1. மிகவும் பெறுமதியான வளங்களாக நேரத்தைக் கருதுதல்
2. உங்கள் சொந்தக் குறிக்கோள்களை இனங்கண்டு நேரப்பயன்பாட்டினை மீளாய்வு செய்தல்.
3. தற்போதைய நேரப்பயன்பாட்டினை ஆராய்ச்சி செய்தல்.
4. முக்கியத்துவத்திற்கேற்ப நேர ஒதுக்கீடு செய்வதற்கு பழகிக் கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சாதகமான பணிகள்
- மீண்டும் செய்யப்பட வேண்டிய பணிகள்

5. தொழிலின் அவசரத்தினை, அவசியத்தினையும் முக்கியப்படுத்தி அட்டவணைப்படுத்துதல்.
6. முதலில் செய்யப்பட வேண்டிய பணிகளைப் பட்டியல்படுத்துதல்.
7. ஒவ்வொரு நாளையும் கவனமாகத் திட்டமிடுதல்
8. திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு ஏற்ப கவனமாக நடவடிக்கைகளைத் முன்னேடுத்தல்
9. ஒவ்வொரு நாளும் ஒரு பகுதி நேரத்தினை ஒதுக்குதல்.
10. மற்றவர்களால் உங்கள் நேரம் வீண்விரயம் செய்வதிலிருந்து துணிகரத்தைப் பயன்படுத்திப் பாதுகாத்தல்.
11. நேரத்திட்டமிடல் கருவியைப் பயன்படுத்துதல், உதாரணமான தினக்குறிப்பேடு.
12. நேரப்பயன்பாடுகள் பற்றி சாதகமான மனநிலையினைக் கொண்டிருத்தல்.

ஒரு முகாமையாளரின் பிரதான கடமைகளில் ஒன்று தனது பணிகளின் அவசியத்தினையும், அவசரத்தினையும் அடிப்படையாகக் கொண்டு சாதாரணமாக (Rountine) நிகழும் திடீரென (Non routine)நிகழும் விடயங்களை முன்னுரிமைப்படுத்தல் அவசியமாகும். அதன் பின்னரே முன்னுரிமையின் அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் இதனைப் பின்வரும் வரைபடம் மூலமாக இலகுவாக மேற்கொள்ளலாம்.

**பணியின் அவசியம்**

| | | |
|---|---|---|
| உயர் | 1. அவசியம் அவசரமும் (முதல் முன்னுரிமை) மு.ப 8.00 மணி முதல் மு.ப 10.30 மணி வரை மேற்கொள்ளலாம். | 2. அவசரம் ஆனால் அவசியமில்லை மு.ப 10.30 மணி முதல் பி.ப 12.30 மணிவரை மேற்கொள்ளலாம். |
| பணியின் அவசரம் | 3. அவசியம் அவசரமும் (முதல் முன்னுரிமை) மு.ப 8.00 மணி முதல் மு.ப 10.30 மணி வரை மேற்கொள்ளலாம். | 4. அவசியமற்றதும் அவசரமில்லை (இறுதி முன்னுரிமை) பி.ப 2.30 பின்னர் மேற்கொள்ளலாம். |

நாம் நாளந்த பணிகளை அலுவலகங்களில் இவ்வாறு மேற் கொள்வதன் மூலம் எமது நாளாந்த நேரப்பயன்பாட்டினை சிறந்த முறையில் மேற் கொள்ளலாம்.

எனவே அவசியமானதும், அவசரமானதுமான விடயத்திற்கு முன்னுரிமை கொடுப்பதுபோல் அவசியமற்றதும் அவசரம் இல்லாததுமான விடயத்திற்கு அவ்வாறன முன்னுரிமை கொடுக்கத் தேவையில்லை.

எவ்வாறாயினும் மற்றைய இரு வகைகளும் உங்களின் தேவையையும் தன்மையும் பொறுத்தே அமையும்.
நிறுவனங்கள் சிறப்பான நேர முகாமைத்துவத்தினை அறிமுகப்படுத்துவதன் ஊடாக பின்வரும் நன்மைகளை மேலதிகமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. நேரம் தொடர்பான உணர்வு ஏற்படுத்தப்படுவதுடன் நிறுவன கலாசாரத்தையும் ஒழுங்குபடுத்தக் கூடியதாக அமையும்.
2. உற்பத்தித்திறனில் அதிகரிப்பு ஏற்படும்.
3. நேரத்துடனான பொருட்கள், சேவைகளை வழங்கும் தன்மையில் உன்னிப்பான பற்றுதல் காணப்படும்.
4. ஒழுக்கமும் நம்பகத்தன்மையும் ஊழியர்களிடம் அதிகரிக்கும்.
5. அழுத்தம் அகன்று போகும். அதாவது உடல், மனநிலை, ஆரோக்கியமாகக் காணப்படுவதுடன் வரவின்மை குறைவாகவும் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளகூடியதாக இருக்கும்.

7. எந்த விடயத்தினையும் நாம் kiss தத்துவத்தினூடாக மேற் கொண்டால் இலகுவாக மேற்கொள்ளலாம்.

kiss<br>
It<br>
Short &<br>
Sweet } kiss

08. இலகுவாகவும் சுருக்கமாகவும் எதையும் கடைப்பிடித்தல் காகிதம் அல்லது வேணம் கிடைத்தவுடன் அவற்றினைப் பற்றி தீர்மானித்தல் 4 விடயங்களை கருத்தில் கொள்ளலாம். (Raft Techniqne)

- Refer it – வாசித்தல்
- Act on it – செயற்படுத்தல்
- File it or – கோவையிடல் அல்லது
- Throw it away – வீசி விடல்

09. " எனக்கு நேரமே இல்லை ", " நான் எந்நேரமும் வேலையுடன் இருக்கின்றேன் " என்னும் மனப் பாங்குகளுக்கு இடமில்லாது போய்விடும்.

10. "என்னால் செய்ய முடியும்", "என்னால் இதை நிறைவேற்ற முடியும்" எனும் மனப்பாங்கில் அபிவிருத்தி ஏற்படும்.

11. நிறுவன வளங்களை உச்சளவில் பயன்படுத்தக் கூடியதாகக் காணப்படும்.

12. வேலையில் நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தக் கூடியதாகக் காணப்படும்.

13. குறைந்தளவான காகிதாதிகள் வேலைக்காக பயன் படுத்தப்படும் நிலை காணப்படும்.

14. அனைத்து விடயங்களிலும், நடவடிக்கைகளிலும் திறமையான அதிகாரக் கையளிப்பும், ஊழியர்களின் உணர்வுபூர்வமான ஈடுபாடும் காணப்படும்.

15. அனைத்து ஊழியர்களின் நேரமுகாமைத்துவத்தில் முன்னேற்றம் காணப்படும்.

16. ஒட்டுமொத்த ஒழுக்கத்தில் முன்னேற்றம் காணப்படும்.

**முடிவுரை**

நேர முகாமைத்துவத்தில் மிகவும் முக்கியமான விடயங்களான நேர விரயத்தினை கருத்தில் கொண்டு உங்களுடைய நேர வீண்விரயத்தினை தவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதுடன் மற்றவர்களின் நேரத்தினை நீங்கள் வீண்விரயம் செய்யாமல் பாதுகாப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

**வல்லிபுரம் கனகசிங்கம்**<br>
**சிரேஷ்ட விரிவுரையாளர்.**<br>
**முகாமைத்துறை**<br>
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

செயலில் தான் உனது திறமை வெளிப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்மிக்க சின்னவர்கள்

(சிறுகதை) - கேணிப்பித்தன் ச. அருளானந்தம் -

சாம்பல்தீவு அழகிய கிராமம் நீர்வளம் மிக்கது. நிலவளம் கொண்டது. உயர்ந்த உள்ளங்களைக் கொண்ட மாந்தர்கள் வாழுமிடம். தொல்பொருள் என்பது பழங்காலத்துப் பொருட்கள். அவற்றையிட்டு ஆராய்வதை ஆய்வு என்பார்கள். அந்த ஆய்வில் நாட்டங் கொண்டவர்தான் சேமன் தம்பிராசா. அவர் பிறந்து வாழ்ந்த கிராமும் சாம்பல்தீவுதான். உப்புநீர்ச் சிற்றாறு ஒர்பக்கம் ஊரும். கிழக்கே கடல் அலைவீசித் தென்றலை அனுப்பும் தென்னம்பாளைகள் வெடித்துச் சிரிக்கும். தென்னோலைகளைப் பிரித்துச் சூரிய ஒளி எட்டிப் பார்க்கும். கிளி, மைனாக்கள் சீட்டியடித்துக் குதூகலிக்கும். வீடுகளின் முற்றங்களில் றோசாச் செடிகள் பூத்துக் குலுங்கும். கனிகளைச் சுமந்து பலாமரங்கள் காற்றில் அசையும், காய்கறித் தோட்டம் சிரித்துப் படுத்திருக்கும் கிராமத்துக்குப் பெருமை தேடித்தருவது பாடசாலையும் அதிலே கற்கும் மாணவர்களும் தான். சாம்பல்தீவு மகாவித்தியாலயம் அதனை நிறைவு செய்வதாகவே நிமிர்ந்து நிற்கிறது.

எத்தனை அதிபர்களும், ஆசிரியர்களும் வந்தார்கள். தமது கடமையை முடித்துச் சென்றார்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் தங்களது சேவையைச் செய்துவிட்டுத்தான் போனார்கள். ஆனால் அதிபர் ஆனந்தர் இவர்களைவிடவும் சற்று வித்தியாசமானவர். சாதனையாளர்கள் மற்றவர்கள் செய்வதையே சற்று வித்தியாசமாகச் செய்வார்கள். ஆனந்தர் அப்படிப் பட்டவர்தான். அவரும் சாதனை படைக்கப் புறப்பட்டவர்தான். ஆனால் அந்தச் சாதனையை மாணவர்கள் ஊடாகக்காண ஆசைப்பட்டார். பாடசாலையைப் பொறுப்பெடுத்து ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. பாடசாலை சோம்பலை விடுத்து விழித்துக் கொண்டது. இருபத்திநான்கு மணித்தியாலங்களைக் கொண்டது ஒருநாள் பாடசாலை எந்நேரமும் திறந்திருக்க வேண்டும் என்பது அவருடைய கொள்கை. பாடசாலை அனைவரையும் அணைத்துக் கொள்ளும் இடமாக அமையவேண்டும். பாடசாலையில் அக்கறையற்ற பெற்றோரையும், மற்றோரையும், ஈர்த்தெடுக்கும் இடமாக விளங்கவேண்டும். பழைய மாணவர்களையும் இணைத்து அவர்களது ஆற்றல்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். பாடசாலையே தஞ்சம் எனக்கிடந்தார். பாடசாலை புதுப்பொலிவோடு நிமிர்ந்து நிற்கிறது. அதிபரில் சிறார்கள் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். அவர் கூறுவதும், செய்வதும் தங்களுக்காகத்தான். தங்கள் உயர்வுக்காகத்தான் என்பதை ஏற்றுக் கொண்டார்கள். அதிபரின் அறிவுரையும் செயற்பாடுகளும் மாணவர்களைக் கவர்ந்து விட்டது. ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கவர்ந்து விட்டனர். சாம்பல்தீவு மகாவித்தியாலயம் எந்த நாளும் இயங்கிக் கொண்டு தானிருக்கும். பாடசாலைகள் மூன்றாந்தவணை விடுமுறைக்காக மூடியிருந்தன.

தலைமைத்துவம் என்றால் என்ன? தானாகக் கடமைகளை உணர்ந்து செய்வது தலைமைத்துவப் பண்பு. நல்லனவற்றைப் பிறர் செய்யத்தூண்டுவதும் தலைமைத்துவம்தான். சாம்பல்தீவு மகாவித்தியாலய மாணவர்கள் இதனை உணர்ந்திருந்தார்கள். அவர்களும் தலைமைத்துவம் கொண்ட தொண்டர்களாக மாறிவிட்டார்கள் விடுமுறை நாட்களிலும் பாடசாலை இயக்கிக்கொண்டிருந்தது. மாணவர்கள் தாங்களே கற்றலில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள். பாடசாலைச் சுற்றுப்புறம் தூய்மை கண்டது. பூந்தோட்டம் அழகூட்டியது. பூங்கன்றுகளுக்கிடையில் கத்தரி மிளகாய், வெண்டி காய்த்துக் கொண்டிருந்தன. கொஞ்சநேரப் படிப்பு பின்னர் விளையாட்டு என வழக்கப்படுத்திக் கொண்டார்கள். விளையாட்டில் விதிமுறைகள் உண்டு அவற்றுக்குத் தாங்களாகவே கட்டுப்பட்டு விளையாடினார்கள். கற்றல் என்பதும் தவம் தான் இவைகளும் ஒருவகைத் தவம் தான் சந்தோசம் கூத்திட்டது. குப்பை கூளங்கள் குழிகளில் நிறைந்து பசளையாகின மாணவர்கள் பாடசாலைக்கு விருப்பத்தோடு வந்தார்கள்.

மாதங்களில் மார்கழி மாதம் மகத்தானது. மழையும் பனியும் கலந்து பொழியும் மழைத்தூறலும் பனியும் கலந்து குளிரைத் தடவிக் கொண்டிருந்தது. கோயில்களில் திருவெம்பாவை முடிந்து மக்கள் வீடுகளுக்குத் திரும்பியிருந்தார்கள். அரவிந்தனும், ஸ்ரீவனும் அஸ்வரும் பத்தாம் வகுப்பில் படிக்கிறார்கள். அடுத்த வருடம் பதினோரம் வகுப்பு. அவர்கள் வகுப்பறைச் சுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள் பல மாணவர்கள் பூந்தோட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றிருந்தார்கள் வழமைக்கு மாறாகக் கடல் இரைந்து கொண்டிருந்தது. " கடல் பொங்கி வருது ஓடுங்கள் ". என்ற சத்தத்திற்கு கால் போன போக்கில் மக்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். சாம்பல்தீவிலிருந்து ஓடி ஆத்திமோட்டைச்சந்தியைத் தாண்டி பெரியகுளம் மேட்டுப்பகுதியில் மக்கள் குவிந்திருந்தார்கள். "உயிர்த்தப்பினால் உப்பும் வறுத்து சீவிக்கலாம். " சொல்லியபடி சனங்கள் ஓடினார்கள்.

" என்னடா செய்யிறியள் கடல் பொங்கி வருது. உயரமான பகுதிக்கு ஓடுங்க " யாரோ ஒரு பெரியவர் கரிசனையோடு சத்தமிட்டு விரைந்தார். அரவிந்தனும், ஸ்ரீவனும் அஸ்வரும் மாணவர்களை உசார்ப் படுத்தினார்கள். அவர்களை ஒன்று கூட்டினார்கள். மக்களுக்குப் பின்னால் ஓடவைத்தார்கள். பாடசாலை வெளிக்கதவை மூடினார்கள் அவர்களும் சைக்கிளில் விரைந்தார்கள். சனங்கள் உயரமான இடங்களில் குவிந்தார்கள். நேரம் பதினொரு மணியைத் தாண்டியிருந்தது. வெயில் சுட்டெரித்தது. தெருவெங்கும் மக்கள் கூட்டம் கடற்கரைப் பக்கம் போகமுடியாது அரவிந்தனும், ஸ்ரீவனும் அஸ்வரும் சைக்கிளைத் திருப்பினார்கள். திருகோணமலை நகரை நோக்கி மிதித்தார்கள்.. விரைந்து செல்லமுடியாதிருந்தது. வீதிகளில் மக்கள் திரண்டிருந்தார்கள் பலரின் கண்களில் கண்ணீர் வெள்ளம். ஓலமிட்டு அழுதார்கள். உப்புவெளியைத்தாண்டி மட்டிக்களிக்கு வந்தார்கள். மட்டிக்களிப் பரவைக் கடல் வெறிச்சோடிக் கிடந்தது. கடல்நீரைக் காணவில்லை. மக்கள் கூட்டம் கடற்பரப்பினுள் பாய்ந்து செல்வதை அவதானித்தார்கள். பலர் கைகளில் மீன், நண்டு என நிறைந்து காணப்பட்டன. கடலுள் நீரில்லாததைப் பார்த்தார்கள். சற்று நேரத்தில் கடல் சீறியெழுந்து விரைந்து வந்தது. மக்கள் கூட்டம் முண்டியடித்து கரையேறி ஓடினார்கள் பலர் விழுந்து புரண்டார்கள்.

பயமறியாச் சிறுவர்கள் பாய்ந்து ஓடினார்கள். கடல்நீர் வேகமாகப் பின்வாங்கியது கடலை நோக்கி மக்கள் மீண்டும் ஓடினார்கள். அரவிந்தனும், ஸரீவனும் அஸ்வரும் எச்சரித்தார்கள். " கடலுள் போகவேண்டாம் " எனக் கத்தினார்கள். அதனை மக்கள் காதுகளில் வாங்கிக் கொள்ளவில்லை போனவேகத்தில் கடல் வாரிச்சுருட்டித் திரும்பியது மக்கள் காதுகளில் வாங்கிக் கொள்ளவில்லை. மக்கள் பாய்ந்து கரைக்கு வந்தார்கள். வெகுவேகமாக வந்து அலை கரைகளில் மோதியது. பலர் விழுந்து சுருண்டார்கள். அவர்களைச் சுருட்டி முட்டி மோதியது. ' மக்களின் அறியாமையினாலும் பயத்தினாலும் அனர்த்தங்கள் அதிகரிக்கின்றன ' ஆசிரியர் வகுப்பில் கூறியதை நினைவு கூர்ந்தார்கள். மக்கள் ஓடிய வேகத்தில் முதியவர் இடறி வீழ்ந்து கிடந்தார். முதியவரை நோக்கி அரவிந்தனும், ஸ்ரீவனும் அஸ்வரும் ஓடினார்கள். அவரைத் தூக்கி ஓரமாக விட்டார்கள். இரண்டு மூன்று வயதுச் சிறுவர்களும் அனாதரவாக ஓலமிட்டார்கள் அவர்களைத் தூக்கி மக்கள் நின்ற இடங்களில் விட்டார்கள். கடல்நீர் நிறம் மாறியிருந்தது. நிலத்தின் தாழ்வான பகுதிக்குள் ஊடுருவிய நீர் வேகமாகக் கடலுள் இழுக்கப்பட்டது அந்த வேகம் வீடுகளின் மதில் சுவர்களையும் பெயர்த்து வீழ்த்தியது. அவர்களது வாழ்க்கையில் இது ஒரு புது அனுபவம்.

"ஸ்ரீவன்! நம்மூர் சனங்களைக் கவனிக்க வேண்டும். விரைந்து போவம். எங்கே அஸ்வர்" ? அரவிந்தன் சத்தமிட்டான். " அதோ அஸ்வர் " காட்டினான். அஸ்வர் அந்த முதியவருக்கு உதவி செய்து கொண்டிருந்தான். கடல்நீர் கடலுக்குள் வடிந்தோடிக் கொண்டிருந்தது. வானொலிச் சாதனங்கள் நேரடி ஒலிபரப்புச் செய்து கொண்டிருந்தன. அவர்களது காதுகளில் ' சுனாமி ' என்ற யப்பானியச் சொல் பதிந்து கொண்டது. அனைவரது வாய்களிலும் சுனாமி உலாவந்தது. யப்பானிய மொழிச் சொல்லுக்குச் சர்வதேச அந்தஸ்த்துக் கிடைத்து விட்டது. சைக்கிள்கள் சாம்பல்தீவை நோக்கிப் பறந்தன. கடற்கரையை அண்மித்த பகுதி மக்கள் பாடசாலையில் நிறைந்திருந்தனர். அப்படியே சல்லியம்பாள் கோயிலடிக்குச் சென்றார்கள். அவர்கள் திடுக்கிட்டார்கள். என்ன கொடுமை. அவர்களால் அக்காட்சியைப் பார்க்கமுடியவில்லை.

அலைவாரி கரையில் மோதியவண்ணம் இருந்தது. கடற்கரையோரம் சின்னாபின்னமாகிக் காணப்பட்டது. எங்கும் கடல் சீற்றத்தின் எச்சங்கள் தெரிந்தன. தென்னைகள் சரிந்து கிடந்தன. வீடுகள் சிதைந்து குவிந்து கிடந்தன. தென்னஞ்சோலையாக விரிந்து கிடந்த கடற்கரை பாலைவனமாகப் படர்ந்திருந்தது. கடற்கரையில் மக்கள் கூட்டம் தங்கள் உறவுகளைத் தேடிக் கொண்டிருந்தார்கள். பல உடலங்கள் கரையொதுங்கின. கடற்கரையோரமாக இருந்த வீடுகளை கடலலை அள்ளிக் கொண்டு போய்விட்டது. கோயில் முன்மண்டபம் அழிவுற்றிருந்தது. மூலஸ்தானம் அழிபடவில்லை அம்பாள் சிலைமட்டும் அசையாமல் இருக்கிறது. அவர்களுக்கு அதிசயம். கையெடுத்துக் கும்பிட்டார்கள். " ஏனம்மா இந்தக் கொடுமை" ? அரவிந்தன் இரந்தான். " ஸ்ரீவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அம்மன் பேராற்றல் வாய்ந்தசக்தி கொண்டவள். இராம இராவண யுத்தம் பற்றி நமது அதிபரும் ஆசிரியர்களும் கற்பித்ததை மறந்து விட்டாயா? நினைத்துப் பார். இராமரது வீரர்கள் சாம்பல்தீவில் அதாவது நமது ஊரில் முகாமிட்டிருந்தனர். விடியும் போது போர் நிகழவிருந்தது. அன்று இரவு இராமன் இந்த அம்மனைப் பிரதிஸ்டை செய்தான். இந்த இடத்தில் இருத்திக் களப்பலி கொடுத்தான். அந்த அம்மன்தான் இவள் இவளது பேராற்றல் அளப்பெரியது. அதிகம் உக்கிரமுடையது. இவனது உக்கிரத்தைக் குறைப்பதற்காகத்தான் பாலம் போட்டாற்று அம்மனை நிறுவினார்கள். இது நமது மூதாதையர் வாய்வழி வந்த உண்மை. வருடாவருடம் வைகாசிமாதத்தில் உற்சவம் நடக்கும் அந்தக் களப்பலியை நினைவு கூரத்தான் இந்தக் கோயிலில் சேவலைக் கழுவில் ஏற்றுவார்கள். " அரவிந்தன் இந்தச் சோகத்தின் போதும் தனக்குத் தெரிந்ததைக் கூறினான். ஸ்ரீவனுக்கு ஒரே ஆச்சரியம். அவனுக்குப்பயமாகவும் இருந்தது. கோணேசர் கோயில் நேரே தெரிந்தது. கடற்கரை ஓரங்களில் உயிரற்ற உடல்கள் புதையுண்டு கிடந்தன. தூரத்தே சிலர் மீட்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். "தம்பிமார் அங்கால ஓடுங்கள். பயந்து போவிங்கள்." பெரியவர்கள் எச்சரித்தார்கள். "ஐயா நாங்கள் சல்லியம்மனின் பிள்ளைகள். எங்களுக்குப் பயமாவது, நாங்கள் பயப்படுவதாவது. நமது மக்கள் செத்துக்கிடக்கிறார்கள் அவர்களுக்கு ஏதாவது செய்யவேண்டும். எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" சிறார்களது பேச்சுப் பெரியவர்களது வாய்களுக்குப் பூட்டுப் போட்டது. "உங்க இஸ்டம். வாங்க." அவர்களுடன் சேர்ந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டார்கள். கூடவே நண்பர்களும் உதவிக்கு வந்தார்கள். சில ஆசிரியர்களும், அதிபரும் வந்தார்கள். கடற்கரையைப் பார்த்தார்கள். அவர்களது கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. மீட்புப் பணியில் அவர்களும் பங்கு கொண்டார்கள் தனது மாணவர்களைக் கண்டதும் அதிபர் நெகிழ்ந்து போனார். இராணுவத்தினரும் பல்வேறு இளைஞர்களும் பங்கு கொண்டு உழைத்தார்கள்.

அனைவருக்கும் களைப்பு. தாகம் தலைக்கேறியது. கிணறுகளை எட்டிப் பார்த்தார்கள். பளிங்கு போன்ற தண்ணீர் கருமையடைந்தது தெரிந்தது. பார்க்கப் பயங்கரமாக இருந்தது உப்பாகக் கரித்தது. வீடுகள் உருக்குலைந்து கூரையற்றுக் கிடந்தன. கிடுகுக்கூரை சிதைந்து அப்பால் சரிந்த மரங்களில் சிக்கியிருந்தது. தென்னை மரங்கள் சரிந்து கிடந்தன. இளநீர் குலைகளைக் கண்டார்கள். சிதைந்த வீட்டினுள் எட்டிப் பார்த்தார்கள் இரண்டு மூன்று கத்திகள் தெரிந்தன. எடுத்துக் கொண்டார்கள் இளநீரை வெட்டினார்கள். காப்பாற்றப் பட்டவர்கள் களைத்திருந்தார்கள். அனைவருக்கும் இளநீரைக் கொடுத்தார்கள். தாங்களும் உட்கொண்டார்கள் தொண்டு நிறுவனங்கள் வந்து சேர்ந்து கொண்டன. கரையோரக் கிராமங்கள் சோகத்தில் ஆழ்ந்து விட்டன. அரவிந்தன் மற்றவர்களுக்குச் சைகை காட்டினான். மூவரும் பாடசாலையை நோக்கி விரைந்தார்கள். மக்கள் வெள்ளம் பாடசாலையை நிறைந்திருந்தது. கரையோர மக்கள் பாடசாலையில் தஞ்சமாகினார்கள். அவர்களைப் பார்ப்பதற்குப்பரிதாபமாக இருந்தது.

சாம்பல் தீவு மகாவித்தியாலயம் சுனாமியினால் பாதிக்கப் படவில்லை பயத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் வீடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள். அரவிந்தன் சுற்றிப்பாத்தான். "அஸ்வர்! எங்கே ஸ்ரீவன்"? நமது வகுப்பு மாணவர்களைக் கூப்பிடு. வகுப்பறைகளில் தஞ்சமடைந்த மக்களைக் குடும்பவாரியாகப் பதிவு செய்வோம். விரைவாகச் செய்வோம். சரியா ? மாணவர்களைப் பாடசாலைக்கு வரும்படி செய்தி அனுப்பியாகி விட்டது. பல மாணவர்கள் வந்துவிட்டார்கள். சாரணர்கள்தங்கள் சீருடையுடன் வந்தனர். மாணவிகள் பதிவுகளை மேற்கொண்டார்கள். "இயற்கையினால் நமது மக்கள் அகதிகளாக்கப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கு உதவுவோம். புறப்படுவோம்..." பாடசாலையில் இருந்த மண்வெட்டிகள் வெளியில் வந்தன. பொருத்தமான இடங்களில் கழிவுகள் போடுவதற்கான குழிகள் அமைந்தன. தொட்டிகளில் தண்ணீர் நிரம்பியது கழிவறைகள் சுத்தமாக்கப்பட்டன. பல மாணவர்கள் கிராமத்தின் வீதிகளில் வலம் வந்தார்கள் மக்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கினார்கள். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் உணவுப் பார்சல்கள் தயாராகின.

மேற்குவான் சோகத்தால் சிவந்திருந்தது. மக்கள் துயரில் பங்குகொண்டது போல் சூரியன் அழுது வடித்து கீழிறங்கியது. இருள் சூழ்ந்து கொண்டது. அரவிந்தன் தலைமையில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டன. மின்வெளிச்சம் பரவியது மாணவிகளுக்கு உதவியாக மாதர்சங்க உறுப்பினர்களும் தேநீர் தயாரித்தார்கள். அஸ்வர் பெருங்கூட்டம் புடைசூழ உணவுப் பார்சல்களோடு வந்தான். ஸ்ரீவன் உடுதுணிகளை அள்ளியவாறு இளைஞர் கழகத்துடன் வந்தான். பாய்களும் போர்வைகளும் வந்தன. பதிவுகளைப் பரிசீலித்தார்கள் ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தைந்து குடும்பங்கள் அகதிகளாகி இருந்தனர். பதிவுகளுக்கு ஏற்பப் பகிர்ந்தளித்தார்கள். போற்றினர். உணவுப்பொதிகளைப் பகிர்ந்தார்கள். வாளிகளில் தண்ணீர் நிறைத்துக் கொடுத்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோர்களை ஆதரித்து உபசரித்தார்கள். தாய்மார்களை அன்புடன் அதிபர் அப்போதுதான் களைத்து வந்து சேர்ந்தார். அனைத்தையும் உற்று நோக்கினார். அவருக்குப் பெருவியப்பாக இருந்தது. சந்தோசம் அவரது களைப்பைப் போக்கியது. "இவற்றைவிட எனக்கென்ன வேண்டும்." மாணவர்களது சேவை அவரது உள்ளத்தைத் தொட்டது. அவரை அறியாமலேயே கண்கள் பனித்தன.

- யாவும் கற்பனை -

# சமநிலைக் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

## கிழக்குப் பல்கலைக்கழக - திருமலை வளாக முதல்வர் என். நாகேந்திரகுமார்

2007ம் ஆண்டின் பல்கலைக்கழக அனுமதியின்படி திருகோணமலை மாவட்டத்தைச்சேர்ந்த மாணவர் விஞ்ஞானக்கல்வியில் பின்னடைவைக் கண்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது. கலைத்துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர் அனைவரும் சிறப்புச்சித்தி பெற்றிருக்க, விஞ்ஞானத்துறைக்கான மாணவர் சாதாரண சித்தியையே பெற்றிருக்கின்றனர். எமது சமூகம் கல்வியில் உயர்நிலை அடைவதற்கு இரு துறைகளிலும் சிறந்து விளங்கும் சமநிலைக்கல்வி செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு ஆசிரியர் சமூகம் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வெண்டும். இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழகத் திருகோணமலை வளாகத்தின் முதல்வர் என். நாகேந்திரகுமார் தெவித்தார். சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தின் தமிழ் மொழித்தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

வித்தியாலய அதிபர் க. யோகானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு அதிதிகளாக பிரதிக்கல்விப்பணிப்பாளர் என். விஜேந்திரன், ஹற்றன் நஷனல் வங்கியின் திருகோணமலைக் கிளையின் முகாமையாளர் எஸ்.ஏ.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். திருகோணமலை வளாக முதல்வர் நாகேந்திரகுமார் தொடர்ந்தும் அங்கு உரையாற்றுகையில்;

பாடசாலையில் கற்பது தான் கல்வி என்ற ஒரு மாயையில் இன்றைய பெற்றோர் வாழ்கின்றனர். சிறந்த ஆசான் குழந்தைகளின் பெற்றோரே ஆவர். கல்வி என்ற விதையைச் சரியாக பாடசாலையில் விதைத்தால் 50 சதவீத பெறுபேறையே பெறமுடியும். மாணவனின் எஞ்சிய 50 சதவீத பெறுபேறுக்கும் அவனின் பெற்றோரே பொறுப்புக்கூறவேண்டும். 2007ம் ஆண்டில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 233 மாணவரே பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். இவர்களில் கலைத்துறைக்கு அனுமதி பெற்றவர்களில் கலைத்துறைக்கு அனுமதி பெற்றவர்கள் 70 பேர். அனைவரும்சிறப்புச் சித்தி பெற்றவர்கள். சாதாரண சித்தி ஒருவர் கூட பெறவில்லை. ஆனால் பிரயோக விஞ்ஞானத்துறையில் 24 பேரும் உயிரியல் விஞ்ஞானத்துறையில் 15 பேரும் சாதாரண சித்தியே பெற்றுள்ளனர். இவர்களில் ஒருவர் கூட சிறப்புச் சித்தி பெறவில்லை. இந்த ஒப்பீடு திருகோணமலை மாவட்டம் உயர்கல்வித்துறையில் சமநிலையை பெறவில்லை என்பதையே காட்டுகிறது.

கல்வியில் சமநிலையைப் பெண வேண்டும். விஞ்ஞானத்துறை சார்ந்த கல்வியில் திருகோமணலை மாவட்டம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது என்பதைக் கட்டுகிறது. இன்றைய சூழலில் தொழில்நுட்பக்கல்வி, ஆங்கிலக்கல்வி ஆகியன இணைந்து செல்ல வேண்டும். எமது சமூகம் அகதிகளாக ஓடும்போது சமூகத்துடன் சேர்ந்து ஓடப்போவது சமூகத்தின் கல்விச் சொத்து மட்டுமே என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருமலை வளாகம் நிரந்தரமாக சாம்பல்தீவுக்கிராமத்திற்கு அருகில் கோணேசபுரியில் அமையவிருக்கிறது. இது இப்பிரதேச கல்வி வளர்ச்சிக்கு இன்னும் உரமூட்டும் என்றார்.

பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ் விஜேந்திரன் பேசுகையில்;

அறிவாற்றல் பொருந்திய சமூகம் ஒன்றை உருவாக்கும் பொறுப்பு பாடசாலைக்கு மாத்திரமல்ல பெற்றோருக்கும் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார். ஹற்றன் நஷனல் வங்கியின் திருகோணமலைக் கிளையின் முகாமையாளர் எஸ்.ஏ. ஆறுமுகம் பேசும்போது, தமிழில் உரையாடும் போது ஆங்கிலச் சொற்களைக் கலப்பது தவிர்க்கப்படவேண்டும். பிறமொழிகளிலும் தேர்ச்சி பெறவேண்டும். அதுவும் ஆங்கில மொழியில் இளம் தலைமுறையினர் பாண்டித்தியம் பெற வேண்டும். வெளி உலகத் தொடர்புகளுக்கும் உலக வேலைவாய்ப்புச் சந்தையைப் பயன்படுத்துவதற்கும் ஆங்கிலமொழி அறிவு அத்தியாவசிய மானதாகும். என்று குறிப்பிட்டார்.

அதிபர் க. யோகானந்தன் தலை உரை நிகழ்த்தினார். ஆசிரியர் த. விஜயராஜேந்திரன் நன்றி கூறினார். மூத்த கலைஞர் தம்பி தில்லைமுகிலனின் சேவைகளைப்பாராட்டி அதிபர் யோகானந்தன் அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். கலை, நடன, நாடக நிகழ்வுகளும் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த மேகம்

அது ஒரு சித்திரை மாத கோடைக்காலம். நேரமோ காலை பதினொரு மணி இருக்கும். அவ்வூரின் கிழக்குப் பகுதியிலே ஓர் அழகான குளம் எவ்வாறான வரட்சி இருந்தாலும் வற்றாத பொய்கைதான். இதை நம்பி எத்தனை ஜீவராசிகள் வாழ்கின்றன. நீரிலே வட்ட வட்டமான இலைகளும் அதனிடையே சூரியனைப் போன்று மலர்ந்த வெண்ணிற தாமரை மலர்களும் இவைகளின் இடையே சிறிய சிறிய பல நிற பூக்களும் காற்றினால் அடித்து வருகின்ற சிறிய அலைகளிலே நடனம் ஆடவும் இந் நடனத்தினை கண்ட மீன் இனங்கள் துள்ளிக்குதிக்கவும் ஆகா......! காணும் போதே மனதுக்குள் எத்தனை இன்பம். குளத்தின் கரையிலே ஒரு பக்கம் முள்ளு மரங்கள் அதன் நுனிக்கிளைகளிலே தூக்கணாங் குருவிகளின் கூடுகள் பல காற்றிலே அசைந்த வண்ணமாக இருக்க அதனுள் குடியிருக்கும் அந்தச்சிறிய பறவைகள் கீச் கீச் என தமக்குள் தாம் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தன. இன்னும் சில குருவிகள் எங்கேயோ தூரத்தில் இருந்து தனது சிறிய வாயினால் புற்களை கவ்வி வந்து என்ன அற்புதமாய் கூடுகளை அமைத்துக் கொண்டிருந்தன. இதில் என்ன சிறபென்றால் மழை நீரும் உட்புகாது எதிரிகளிடம் இருந்து பாதுகாக்க நீரின் மேலுள்ள முற்செடியின் நுனியில் அமைத்தது தான் இதன் அறிவையும் சுறுசுறுப்பினையும் கண்டபோது நான் சிறிய வயதில் படித்த "சின்ன மகளின் சின்ன கைகள்" என்ற பாடம் நினைவுக்கு வந்தது. அப்போது நான் புரிந்து கொண்டேன். இந்த சின்னஞ் சிறிய பறவைகள் எவ்வாறு மனிதர்களை போல் சண்டை இடாது ஒற்றுமையாக வாழ்கிறது. இவை பாடசாலை செல்கிறதா? அல்லது பெரியோர்கள் தான் வழிநடத்துகின்றனரா? இதனுடைய வாழ்க்கையை பார்த்து மனிதர்கள் எவ்வளவு தான் கற்க வேண்டும்.

மறு புறத்திலே இக்காலம் இளவேனிற்காலம் என்பதால் ஏனைய மரங்கள் கொடிகள் என்பன இலைகளை சொரித்து பல நிறப்பூக்களும் மொட்டுக்களும் பூத்துக்குலுங்கியதால் வண்டுகளும் தேனீக்களும் ரிங் என்ற ஓசையை எழுப்பி அதிலுள்ள தேனினை உறிஞ்சிக் குடித்த மயக்கத்தில் பறந்து திரிவதையும் காணும் போது கண்களுக்கு இதமாகவே இருந்தன.

வெண்ணிறக் கொக்குகளும் கால்நீண்ட நாரைகளும் மிகவும் பொறுமையாக நிதானமாக அசையாது நின்று தமது உணவான மீன் வரும் வரை கால்வலிக்க காத்திருக்கின்றன. அது மட்டும் அல்லாது நீரிக்குள் மூச்சின் சுவாசத்தை அடக்கி தாண்டும் வெளிப்பட்டுமாக நீர்க்காகம் பல மீன்வேட்டையில் ஈடுபட இவைகளுக்கு கோபத்தினை வரவழைக்கவென மீன்கள் நீரின் மேல் துள்ளி விளையாடின.

சுற்றுமுள்ள வயல்வெளிகளில் அறுவடை முடிந்தமையால் எங்கும்மஞ்சள் நிறமாகவே காட்சியளித்தது. வெள்ளை கறுப்பு நிறத்திலான பல மாடுகள் புற்களைத்தேடி மேய்ந்துகொண்டிருக்க அதன் கன்றுகள் சில தாயின் மடியிலே பால் அருந்திய வண்ணம் இருந்தன. ஏனைய சில மாடுகள் வெப்பம் தாங்கமுடியாது களைப்புற்று மரநிழல்களில் வாயினை அசைத்து இரையை மென்றுகொண்டிருக்க அதன் வால் அதனில் உள்ள ஈக்களை விரட்டிக்கொண்டிருந்தன. தூரத்தே இன்னுமோர் குளம் காணப்படுவது போல் கானல் நீரும் காட்சியளித்து என்னை ஏமாற்றிக்கொண்டிருந்தது.

தெளிவான நீலவானம் ஆங்காங்கே வெண்ணிற மேகக்கூட்டங்கள் அதனை உற்று நோக்கினேன் அவைகளில் பல மிருகங்கள் பாய்வது ஓடுவது உறங்குவது போல் காணப்பட்டன. அத்துடன் பருந்துகள் சிறகினை விரித்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன. இதனைதொடர்ந்து பார்த்துக்கொண்டிருந்த போது கண் கூசியது. ஆகவே குளத்தின் மேலே எனது பார்வையை செலுத்தினேன். பல நிற மீன்கொத்திகளும் புள்களும் இடைவிடாது பறந்து நீரின் மேல் வரும் மீனினை கால்களினால் பிடித்ததும் பின் தோற்றுப்போவதும் ஏமாற்றுவதுமாக காணப்பட்டதனை கண்டு நான் துன்பம் அடைந்தேன். பாவம் தனது பசியினைப்போக்க எவ்வளவு கஷ்டபடுகின்றன என எண்ணினேன். குளத்து நீரின் அலையினால் மண்ணரிப்புக்குள்ளான அந்த வயதான மாமரத்தின் வேர்கள் நண்டினுடைய கால்கள் போல் பாதிநிலத்துள் மறைந்தும் மீதி நீரினுள்ளும் காணப்பட்டன. அவ்வேரின் மேல் நான் உட்கார்ந்து இக்காட்சியை அனுபவித்துக்கொண்டிருக்கும் போது வெப்பமும் அதிகரித்துக்கொண்டிருக்கையில் குளத்தின் மேற்பகுதி நீர் ஆவியாகிச் செல்லும் போது நீரித்திவலைகளை வாரிவந்த காற்று என் மீது தென்றலாக மாறி பட ஆ......கா..... எத்தனை இன்பம் அப்போது நினைவுக்கு வந்தது. "சுவர்க்க இன்பம்" என்று பெரியோர்கள் சொல்வது இப்படித்தான் இருக்குமென உணர்ந்தேன்.இவ்வாறு என் கண் மனம் உடல் ஆகிய ஐம் புலன்களும் இன்பத்தில் லயித்துக்கொண்டிருக்கும் போது திடீரென குளத்து நீரிக்குள் விழுந்து விட்டேன். இதன் பின் தான் தெரியும் நான் என்னையும் அறியாது தூங்கி விட்டேன். என்பதை பின்னர் எனக்கு வெட்கம் வந்து விட்டது கற்பனை கலைந்து விட்டது.

**"இது யாவும் கற்பனையே"**

**செல்வன். நிருஷன் - சு**

**13 கலை (2009)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# English Language.

English is the world's most widespread language its history is one of almost continues expansion – from being the language of a few thousand Anglo-Saxon immigrants to Britain in the fifth century AD, to being now the first or second language of at lease750 million people around the world. On all continents there are nation states for which is either the national language or one of them.

English in national language, in;

- Australia
- Bahamas
- Barbados
- Canada
- Falk land
- Guyana
- reland
- Jamaica
- New Zealand
- South Africa
- Trinidad and Tobago
- United Kingdom
- United States of America.

English as auxiliary national language, in

- Brunei
- Fiji
- Gambia
- Ghana
- Kenya
- Liberia
- Nigeria
- Papua – New Guinea
- Sierra Leone
- Singapore
- Uganda
- Zambia
- Zimbabwe

In several other countries, English was until recently an auxiliary national language and remains a lingua franca for strategic purposes (e.g. tourism intentional affairs):

- Bangladesh
- India
- Malaya
- Pakistan
- Philippines
- Sri Lank
- Tanzania

English is the second language of choice in Russia, China, Japan and parts of the EU.

The volume of international communication in English is enormous. Estimates (or guesstimates) have it that 75% of the world' mail, cables and telexes and 80% of the information of computers is in English. It is the language of science and technology and the official medium of communication for ships and aircraft. International organizations mostly use English. Whether associated with the United Nations or with sports management. So do the major financial institutions, media networks and travel organizations. Other domains of English are international law, tertiary education and in to show that English is destined to become the universal medium of communication. But once you begin to look at the details of English in any of the countries just named, their divergences are so conspicuous as their convergences. English in responds to its surroundings wherever it's used. Even in countries where there have always been native speakers (as in the first group above),English still tends to develop new regional characteristics. And to reflect the local culture, society ant environment.

English is the world's most widely used language. It is useful to distinguish three primary categories of use: as a native language as asecond language, and as a foreign language. English is spoken as a native language by nearly a three hyndred million peopke: in the united states, Britain,Ireland,Australia,Newzelands,Canada and carribean and South Africa, without mentioning smaller countries or smaller pockets of native English speakers (for example in Rhodesia and Kenya ). In several of those countries,English is not the sole language: the quebec provinces is french – speaking much of south Africa is Afrikaans speaking,and for many Irish and Welsh speaking people, English is



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

not the native language.But for these Welsh,Irish.quebecois and Afrikaners "English will even so be a second language: that is a language necessary for certain official, social, commercial,educationan activities within their own country.

Pidgins and creoles New languages for old! A pidgin is an adhoc system of communication. Put together from existing languages under special circumstances. It typically happens when groups of people who have no language in common try to communicate with each other using whatever words they hear being used around them. Pidgins often develop for the purpose of trade. As did "Bazaar malay" and the "Bamboo-english" did in korea: but they are also associated with colonial plantations which employed workers (or slaves ) from diverse other places.American "Black English" and new guinea pidgin are both thought to have originated this way.

Creoles

Creoles operate as fully – fiedged languages in bilingual and multilingual communities.The Caribbean is the home of several, including Haitian creole based on French,and Jamaican creole based on English the creole maintains a mix of elements from local languages, but over the course of time tents to add in lexical and grammatical features of the standard language on which it's based (English French etc) The word Pidgin is arguably a reduced form of the word "business" as spoken by those whose languages had fewer consonants sounds than English and no "s" sound (rare in languages of the pacific region) the connection with "Business is eminently likely,seeingthe Pidgins are of associated with trading. The word creole is borrowed from French though ultimately it's a Spanish and Portuguese word meaning "native to the locality." Is sometimes spelled "pigeon"thought eh word is more likely to be derived from business than birds.

Nowadays wherever people go they find English as a safe global means of communication.English has made a tremendous global change and has also been contributing to words all academic fields and especially towords English itself and the English has become global language and it has various branches of study :sociolinguistics,phonetics,semantics,morphology and discourse analysis to mention a few.the vaieties of languages have grown up creolization;acrolect and basilect English language spread rapidly all over the word.owning to the colonization most of the British.As we all are aware.that most of the colonial rule of British.slave trade played a vital role in this process when people of different Communication and culture background put together they were in need of a commen language so the dominators had the chance to impose their own language to the dominated groups.

Although the growth of English has its bitter scaren it had caught up as a marvelous and stylish language surfacing all the other language.sometimes known as the "linguafranca"where the language is originated from the "land of augur"means English although ninety percent of the words borrowed its elegance*is remarkable.Even in the native land the standard of English differ arconding to the class culture economic and more higher up the ladder comes the mesolect and the standard is Acrolect,this is an intrigue issue among scholars of language but by and large it is something that people understandwhether they like it or not.

The rich language has a long history that came into existence around1350 for 250 years until 1600english was spoken only in England but then between 1600-1750 were sown the seeds of todays global spread of English.As mentioned earlier explores,merchants,and settlers did their part in globalizing this language.

Because of the colonization,we the sri lankan have the influence of (R.P) Received pronunciation.We were under the British for nearly 200years and the effect cannot be changed.and when analyzing the web of life;English is one of the strands of it.Without English its rather difficult to enter the outside word.

**By S.Vincent**
**Teacher**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய தினங்கள்

**ஜனவரி**

11 லால்பகதூர் சாஸ்திரி நினைவு தினம்
12 விவேகானந்தர் பிறந்த தினம், தேசிய இளைஞர் தினம்
14 சென்னை மாகாணம் தமிழ்நாடு என்று புதுப்பிறவி பெற்ற தினம்
15 இராணுவ தினம்
17 எம்.ஜி.ஆர் பிறந்த தினம்
23 நேதாஜி பிறந்த தினம்
26 இந்திய குடியரசு தினம், சர்வதேச கஸ்டம்ஜஸ் தினம்
30 காந்தி நினைவு தினம்-தியாகிகள் தினம்
இராமலிங்க சுவாமிகள் நினைவு தினம்

**பெப்ரவரி**

03 அறிஞர் அண்ணா நினைவு தினம்
28 தேசிய அறிவியல் தினம்

**மார்ச்**

03 பங்காரு அடிகள் பிறந்த தினம்
08 உலக மகளிர் தினம்
15 உலக ஊனமுற்றோர் தினம்
21 உலக வன தினம்

**ஏப்ரல்**

07 ஜி.டி.நாயுடு நினைவு தினம்
உலக ஆரோக்கிய தினம்
14 டாக்டர் அம்பேத்கார் பிறந்த தினம்
21 பாரதிதாசன் நினைவு தினம்
22 பூமி தினம்
29 பாரதிதாசன் பிறந்த தினம்

**மே**

01 தொழிலாளர் தினம்
03 பத்திரிகை சுதந்திர தினம்
(இரண்டாம் ஞாயிறு)தாய் தினம்
08 உலக செஞ்சிலுவை தினம்
15 சர்வதேச குடும்ப தினம்
17 உலக தகவல் தொடர்பு தினம்
21 ராஜீவ் காந்தி நினைவு தினம்
24 காமன்வெல்த் தினம், ஆதித்தனார் நினைவு தினம்
27 பண்டிட் ஜவஹர்லால் நேரு நினைவு தினம்
31 புகையிலை எதிர்ப்பு தினம்

**ஜூன்**

03 மு.கருணாநிதி பிறந்த தினம்
05 உலக சுற்றுச் சூழல் தினம்
20 தந்தையர் தினம்

**ஜூலை**

04 விவேகானந்தர் நினைவு தினம்
11 உலக மக்கள் தொகை தினம்
15 காமராஜர் பிறந்த தினம்

**ஆகஸ்டு**

06 ஹிரோஷிமா தினம்
09 வெள்ளையனே வெளியேறு தினம், நாகஸாகி தினம்
15 சுதந்திர தினம்
18 நேதாஜி நினைவு தினம்
29 தேசிய விளையாட்டு தினம்
30 கலைவாணர் என்.எஸ்.கே. நினைவு தினம்

**செப்டம்பர்**

05 வ.உ.சி. பிறந்த தினம், ஆசிரியர் தினம்
08 உலக எழுத்தறிவு தினம்
11 பாரதியார் நினைவு தினம்
15 அறிஞர் அண்ணா பிறந்த தினம்
16 உலக ஓசோன் தினம்
17 பெரியார் பிறந்த தினம்
26 காது கேளாதோர் தினம்
27 உலக சுற்றுலா தினம், ஆதித்தனார் பிறந்த தினம்

**அக்டோபர்**

01 உலக முதியோர் தினம்
02 காந்தி ஜெயந்தி, காமராஜர் நினைவு தினம்,
03 உலக குடியிருப்பு தினம்
04 உலக விலங்கு நல தினம்
05 வள்ளலார் பிறந்த தினம்
08 இந்திய விமானப்படை தினம்
09 உலக தபால் தினம்
10 தேசிய தபால் தினம்
14 உலக தர தினம்
16 உலக உணவு தினம்
24 ஐக்கிய நாடுகள் தினம்
30 பசும்பொன் தேவர் ஜெயந்தி
31 இந்திரா காந்தி நினைவு தினம்

**நவம்பர்**

09 வீரமாமுனிவர் பிறந்த தினம்
14 நேரு பிறந்த தினம், குழந்தைகள் தினம்
18 வ.உ.சி நினைவு தினம்
19 இந்திரா காந்தி பிறந்த தினம்
23 ஸ்ரீ சாயிபாபா பிறந்த தினம்
30 ஜெகதீஷ் சந்திரபோஸ் பிறந்த தினம்

**டிசம்பர்**

01 உலக எய்ட்ஸ் தினம்
04 கடற்படை தினம்
06 அம்பேத்கார் நினைவு தினம்
09 இராஜாஜி பிறந்த தினம்
10 மனித உரிமை தினம்
11 பாரதியார் பிறந்த தினம்
23 விவசாயிகள் தினம்
24 எம்.ஜி.ஆர் நினைவு தினம், பெரியார் நினைவு தினம்
25 இராஜாஜி நினைவு தினம், வாஜ்பாய் பிறந்த தினம்

**தொகுப்பு:- செல்வி. தேவசங்கீதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கல்வியில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் பங்களிப்பும் அவசியமும்

பாடசாலைக் கல்வியில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. அந்த வகையில் விளையாட்டுப்போட்டி, சாரணியம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், மாணவர்சுற்றாடற்படைஅணி மாணவர்மன்றங்கள், மாணவர் சுகாதாரக்குழு, சிரமதானம், பாண்டுவாத்தியக்குழு, ஆங்கிலதினம், தமிழ்தினம், கலைவிழா, சமயவிழா, மற்றும் பரிசளிப்புவிழா என்பன முதன்மை நிலையில் விளங்குகின்றன.

மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்துவமான உள்ளார்ந்த திறன்கள் காணப்படுகின்றன. இத்திறன்களை வெளிக்கொணர்வதில் மேற்கூறிய செயற்பாடுகள் பெரும் பங்காற்றுகின்றன. ஒரு பாடசாலையில் கற்றல் செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் நிகழும் போதே ஒரு மாணவன் முழுமையான சம கல்வியை அங்கே பெற முடியும் என கல்வியியலாளர் வலியுறுத்துகின்றனர்.

நற்பண்புகளையும், மனித விழுமியங்களையும், நல்லொழுக்கத்தையும் பேணிக் காப்பதற்கு அறிவு திறன் மனப்பாங்கு தேவை. இவற்றை இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலமே மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். இவை ஒவ்வொரு செயற்பாடுகளையும் எடுத்து நோக்குவோமாயின், விளையாட்டுபோட்டி, சாரணியம் செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் செயற்பாடுகள் மாணவர் மத்தியில் தலைமைத்துவம், வெற்றி தோல்வியை சமமாக மதித்தல், விட்டு கொடுக்கும் மனப்பாங்கு தலைமைக்கு கீழ்படிதல் குழுவாக செயற்படுதல், சகிப்புத் தன்மை, பிறருக்கு உதவும்பண்பு பிறரை நேசித்தல், மற்றவர்கருத்துகளிற்கு மதிப்பளித்தல் போன்ற ஆளுமைப்பண்புகளை விருத்திசெய்வதில் பெரும் பங்காற்றுகின்றன.

இவற்றுடன் பாடசாலைச்சூழல் அயற்சூழலுடன் தொடர்புள்ள செயற்பாடுகளான சிரமதானம் சுற்றாடல் படையணி சுகாதாரக்குழு மூலமாக மாணவரிடையே குழுவாக செயற்படல், தலைமைத்துவத்திற்கு கீழ்ப்படிதல், இவற்றோடு தானும் தான் வாழும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருத்தல், இயற்கைச்சூழலை நேசித்தல், சுற்றாடலை மாசுபடாது பேணல், சுற்றாடலை அழகுபடுத்தல் பயன்தரு மரம் நடல் ஆரோக்கியமான மனிதனாக வாழுதல், சமூகத்திற்கு உதவுதல். போன்ற தனக்கும் தான்வாழும் சமூகத்திற்கும் நன்மை பயக்கும் செயற்றிறன்கள் மனப்பாங்குகள் விருத்தியாவதில் துணை நிற்கின்றன.

மேலும் பாடசாலையில் நிகழும் அழகியல் சார்ந்த செயற்பாடுகளான இயல், இசை நாடகம், சித்திரம் என்பன மாணவர்கள் இரசனைத்திறன், கற்பனைத்திறன், ஆக்கத்திறன், செயற்றிறன், வெளியீட்டுத்திறன், விமர்சனத்திறன், நல்மனப்பாங்குத்திறன், போன்ற திறன் விருத்தியை மாணவர்களிடத்தே ஏற்படுத்துகின்றது. அதாவது "தனி மனிதனின் பரிபூரண ஆளுமையை தட்டி எழுப்பும் சிந்தனை சக்திகள் வெளிப்படுத்தும் ஓர் ஊடகமே அழகியற்கலை"என கல்வியில் அறிஞர்கள் கூறுகின்றனர்.

சமயம் சார்ந்த செயற்பாடுகள் பணிவு, உண்மை பேசுதல் அன்புடமை, கருணை, நேர்மை, இன்சொல் கூறல், நற்கருமம் அற்றல், பாவச்செயல்களை வெறுத்தல், தானதர்மம் புரிதல் போன்ற நல்ல வாழ்க்கைக்கு உதவும் விழுமியப்பண்புகளையும் மாணவரிடையே வளர்க்க பெரிதும் துணை நிற்கும். இவையே காலத்தின் தேவையுமாகும்.

இணைப்பாடவிதான செயற்பாடுகள் மாணவ சமூகத்தில் பலம் பொருந்தியவர்களை மேலும் பலசாலி ஆக்குவதுடன் பலம் குறைந்தவர்களை பலம் பொருந்தியவர்கள் ஆக்கும். அத்துடன் பூகோளம் கிராமம் ஆகிவிட்ட இன்றைய நிலையில் எற்பட்ட சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி பெற்று அவர்கள் வாழ்க்கையில் வீறுநடை போடுவதற்கு பெரிதும் பங்காற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலையில் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்கள் முழு ஆளுமை வளர்ச்சி அடைந்தவர்களாக திகழ்வதற்கு ஏட்டுக் கல்வி மாத்திரம் அன்றி அதனுடன் இணைந்த இணைப்பாடவிதான சொயற்பாடுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே ஆசிரியர்களாகிய நாம் எமது பாடசாலையில் உள்ள பௌதீக ஆளணி வளங்களை முழுமையாக பயன்படுத்தி மாணவர்களை கற்கும் சொயற்பாட்டுடன் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் அவரவர் உள்ளார்ந்த திறன்களை இனம் கண்டு ஈடுபடுத்துவதில் பெரும் அர்ப்பணிப்பு தியாக சிந்தையை வெளிப்படுத்த வேண்டும்.

தற்போது கூடுதலான பெற்றோர்களும் தமது பிள்ளைகள் கற்றலில் மாத்திரம் பங்கெடுத்து படித்து சமூகத்தில் சிறந்ததாக மதிக்கப்படும் ஒரு வைத்தியராகவோ பொறியியலாளராகவோ அன்றேல் ஒரு கணக்காளராகவோ முகாமையாளாராகவோ பதவி நிலைகளை அடையவேண்டும். என்றே எதிர்ப்பார்க்கின்றனர். இந்நிலை மாறவேண்டும்.

உண்மையில் ஒரு மாணவன் சிறந்த அறிவு திறன் மனப்பாங்கு விருத்தியைப் பெறவேண்டுமாயின் கற்றலுடன் மேலே குறிப்பிட்ட இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் தன் திறனுக்கு ஏற்ப ஈடுபடவேண்டும்.

தற்போது தேசிய மட்டத்தில் தமிழ் ஆங்கிலதினப் போட்டிகளில் முதலிடம் சாரணியம் சுற்றாடப்படையணி ஜனாதிபதி பதக்கம் என்பவற்றிக்கு 10 புள்ளிகள் வழங்கப்படுகிறது. இப்புள்ளி பல்கலைக்கழக பிரவேசத்தில் வெட்டுப்புள்ளி மட்டத்தை சில புள்ளிகளால் அடையாத மாணவர்களிற்கு இப்புள்ளி சேர்க்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

எனவே பெற்றோர்கள் தம் பிள்ளைகளை ஊக்கம் கொடுத்து இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபட அக்கறை செலுத்த வேண்டும். அப்போது தான் அவர்கள் தான் சார்ந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன்பெறும் பிரஜைகளாக திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும்மில்லை.

**தம்பிராஜா விஜயராஜேந்திரன்**
**உபஅதிபர்**

## இலங்கை

- இந்து சமுத்திரத்தின் முத்து, இந்து சமுத்திரத்தின் நித்திலம் ஆகிய சிறப்பும் பெயர்களால் அழைக்கப்படுவது இலங்கை ஸ்ரீலங்கா என்ற சொல்லின் கருத்து ஒளிமயமான பூமி.
- இலங்கை 1948ம் ஆண்டு பெப்ரவரி 04ம் திகதி பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரமடைந்தது.
- 1950ம் ஆண்டில் வாளேந்திய சிங்கக் கொடி இலங்கை தேசிய கொடி ஆக்கப்பட்டது.
- சுதந்திர இலங்கையின் முதற்பிரதமர் D.S. சேனநாயக்காவாவார்.
- இலங்கையில் சர்வஜன வாக்குரிமை 1931ல் இயற்றப்பட்ட டொனமூர் யாப்பின் மூலம் நடைமுறைக்கு வந்தது.
- இலங்கையிலுள்ள தீவுகளில் பெரியவை ஊர்காவற்துறை, நெடுந்தீவு
- இலங்கையின் திருகோணமலைத் துறைமுகம் இயற்கையானது.
- இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரக்கோன்
- இலங்கையின் தேசிய மரம் நாகமரம்
- இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலம்
- இலங்கையின் தேசிய பறவை காட்டுக்கோழி.
- இலங்கையின் புகழ் பெற்ற ஓவியம் சிகரியா
- பிரதமரின் உத்தியோகபூர்வ வதிவிடம் அலரிமாளிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது மொழியைக் கற்றுக்கொள்வதற்கான சில உதவிக் குறிப்புகள்

உங்கள் தாய்மொழியின் அரிச்சுவடி எவ்வாறு நீங்கள் கற்கும் மொழியின் அரிச்சுவடியிலிருந்து வேறுபடுகிறது, அல்லது எவ்வாறான ஒத்த இயல்புகளைக் கொண்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள். சொல்லாக்கம் என்பது எழுத்துக்களை, ஒரு பொருளை அல்லது கருத்தை வெளிப்படும் விதத்தில் ஒழுங்குபடுத்துவதாகும். சொல்லாக்கம் ஒரு மொழிக்கும் இன்னொரு மொழிக்கும் இடையில் மிகவும் வித்தியாசமான முறைகளில் இடம்பெறுகிறது. ஊதாரணமாக தமிழ்மொழியையும் ஆங்கிலத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது பின்வரும் விடயங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கள் அவற்றின் ஒலி குறித்த விடயத்தில் ஒரு ஒழுங்கைக்கொண்டுள்ளன. மெய், உயிர், உயிர்மெய் எழுத்துக்கள் ஒரு சீரான முறையில் பாவிக்கப்படுகின்றன. உயிர்மெய்+மெய்+உயிர்மெய் என்ற ஒழுங்கில் எழுதப்படுகின்றன. எழுத்துக்களின் ஒலி பெரிதும் வேறுபடுவதில்லை. கத்தி என்ற சொல் க்+அ+த்+த்+இ என்ற எழுத்துக்களைக் கொண்டு எழுதப்படும் பொழுது விசிறி என்கின்ற குறி இ என்ற உயிர்எழுத்தைப் பிரதியீடு செய்கிறது. இது போன்றே நெட்டுயிர்க்கு வீ சுழியுடன் கூடிய விசிறி பயன்படுத்தப்படுகின்றன. கொம்புகள்,அரவுகள் என்பவை ஏனைய உயிர்எழுத்துக்களைப் பிரதிலிக்கின்றன. உதாரணம் கொம்பு கோயில் ராசா என்ற சொற்களைச் சொல்லலாம். மெய்எழுத்தை . (புள்ளி) குறிக்கின்ற அதேவேளை புள்ளியிடப்படாத மெய்எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்களைக் குறிக்கின்றன. உதாரணம் : பப்படம்

தமிழைப் போன்றல்லாது ஆங்கில மொழியின் எழுத்துக்கள் குறிகளின் உதவியோடு ஒலியை வெளிப்படுத்துவதில்லை. பதிலாக உயிர்எழுத்துக்களையும் மெய்எழுத்துக்களையும் கொண்டே சொற்கள் அமைக்கப்படுகின்றன. Rat, Ruk, Rate . மேலும் ஆங்கிலத்தில் எழுத்துக்கள் இரண்டு வகையாக எழுதப்படுகின்றன. TRINCOMALEE Trincomalee (upper case + lower case ) என்று எழுதப்படுகின்றது. மேலும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தும் தமிழைப் போலல்லாது மெய்எழுத்துக்கள் உயிர்எழுத்துக்கள் அருகருகாக எழுதப்படுவதைக்காணலாம்.

உதாரணம்: Street, school, playground. மேலாக ஆங்கில எழுத்துக்களிற் பல ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளைக் குறிப்பனவாக இருப்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். எனவே ஆங்கில அரிச்சுவடி 26 எழுத்துக்களைக் கொண்டதாக இருந்தும் 45 ஒலிகளை ஏற்படுத்துகின்றன. Cat, Car, Care.

ஒரு மொழியைக் கற்கும் போது கேட்டல் திறன் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. ஒரு மொழியின் உச்சரிப்பு கேட்பதால் மட்டுமே பெறப்படுகிறது. அதே போன்று இரண்டாம் மொழியைக் கற்கும் போது சரியான உச்சரிப்பு தொடர்பாடலுக்கு அவசியமாகின்றது. என்ன மொழியைப் பேசுகிறோம் என்பதைக் கேட்பவர் புரிந்து கொள்ள உச்சரிப்பே ஆதாரமாக அமைகிறது. எனவே செவிமடுத்தல் ஒரு மொழியை நன்கு கற்கவும் அதனை உரிய முறையில் பயன்படுத்தவும் மூலகாரணமாக அமைகிறது.

அடுத்து கவனத்திற் கொள்ள வேண்டியது சொற்பிரயோகம். சரியாக நீங்கள் வெளிப்படுத்த விழையும் கருத்துகள் கொண்ட சொற்களைத் தெரிந்தெடுத்துப் பாவிக்க வேண்டும். உச்சரிப்பு, சொல்லாக்கம் போன்றவற்றில் மிகக் கூடிய கவனம் செலுத்துதல் அவசியம். ஆங்கிலத்திலும் தமிழ்மொழியைப் போலவே ஒரு சொல் பல பொருளையும் பல சொல் ஒரு பொருளையும் வெளிப்படுத்துகின்றன. உதாரணம்:- Fear(பயம்), Fright(அச்சம்), Panick(திகில்) மேலும் ஆங்கிலத்தில் ஒரே எழுத்துக்களைக் கொண்ட பல சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட உச்சரிப்புக்களைக் கொண்டுள்ளன. உதாரணம்:- Wind.

ஒரே மாதிரியாக உச்சரிக்கப்படும் சொற்களும் வெவ்வேறு கருத்துக்கள் கொண்டவையாக இருக்கின்றன. உதாரணம்:- Book தமிழ்மொழியைப் போலவே ஆங்கில மொழியிலும் சொற்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பெயர், வினை, அடைமொழி, வேற்றுமைஉருபுகள், இடைச்சொற்கள், வியங்கோள், பிரதிப்பெயர்ச்சொற்கள் என்பன உள்ளன. எனினும் ஆங்கில மொழியில் வாக்கியங்கள் கூற்றுவாக்கியம், ஏவல்வாக்கியம், வினாவாக்கியம், வியங்கோள்வாக்கியம் என காணப்படுகின்ற போதிலும் சொற்களின் ஒழுங்கமைப்பு வேறுபடுகின்றது என்பதைக் கவனத்திற் கொள்ளல் அவசியம். தமிழின் வாக்கிய அமைப்பு எழுவாய், செயற்படுபொருள், வினை என்ற ஒழுங்கில் அமைகிறது. ஆங்கிலத்தில் எழுவாய், வினை, செயற்படுபொருள் என்ற ஒழுங்கில் அமைகிறது. ஊதாரணம்:- நான் சோறு சாப்பிடுகிறேன். I eat rice. எனவே இது குறித்துக் கவனம் செலுத்துவது அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தும் பேச்சும் :- ஒரு மொழியானது அது பேசப்படுவது போல் எழுதப்படுவதில்லை. எனினும் கதைகள் நாடகங்கள் போன்றவற்றில் பாத்திரங்கள் பேசும் விதத்திலேயே எழுதப்படுவது கவனிக்க வேண்டியது. சரியான நிறுத்தற் குறிகளைப் பாவித்துப் பேச்சின் தொனி உணர்த்தப்படுகிறது. ஆனால் பேச்சில் குரலின் ஏற்ற இறக்கங்கள், தொனி ஆகியவற்றைக் கொண்டு வாக்கியத்தின் செயற்பாடு வெளிப்படுத்தப்படுகின்றது.

காரியாலயத் தொடர்பாடல் மற்றும் கல்வி விஞ்ஞானம் போன்ற துறைகள் குறித்த இலக்கியங்களில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட எழுத்து முறையே பயன்படுத்தப்படுகின்றது. பேச விரும்பும் ஒருவர் நிறைய வாசிக்க வேண்டும். காது கேட்காத ஒருவர் பேச முடியாதவராக இருப்பது போலவே வாசிக்காத ஒருவர் எழுத முடியாதவராக இருக்கிறார்.ஒரு மொழி கற்கப்படுவதை விடவும் பெறப்படுவதே அதிகமாக உணரப்பட்டுள்ளது. ஒரு மொழியைப் பாடமாகக் கற்பது என்பது சாத்தியமாகாது. அது திறன்களை வளர்ப்பதன் மூலமே ஒருவரால் பெறப்படுகிறது.

ஒரு மொழி பேசப்படும் சூழலில் வாழும் பிற மொழி பேசுபவர் அந்த மொழியை இலகுவில் தொடர்பாடலுக்குப் பாவிக்கும் திறனைப் பெற்றுவிடுவது இங்கு அவதானிக்கப்பட வேண்டும். ஒரு மொழி தொடர்பாடலுக்கான ஊடகம். காரியங்கள் வெற்றிகரமாக நடக்க வேண்டுமானால் சிறந்த தொடர்பாடல் மூலமே அது சாத்தியமாகும். மொழியைக் கற்றல் ஏறத்தாழ ஒரு டென்னிஸ் விளையாட்டைப் போன்றது. பந்து விழுவதைப் பொறுத்தே துடுப்பைப் பாவிக்க வேண்டும். உரிய இடத்திற்குப் பறந்து சென்று தான் பந்தை அடிக்க வேண்டும். அதற்குத் தொடர்ந்த அபரிமிதமான பயிற்சி அவசியம்.

மேலும் மொழியைக் கற்கும் போது அந்த மொழியைக் கொண்டு என்ன செய்யப் போகிறோம் என்பது குறித்துத் தெளிவாக இருப்பதன் மூலம் மொழியை இலகுவாகவும் விருப்புடனும் கற்க முடியும். மேலும் எங்கே, எப்பொழுது, எவருடன், எது குறித்துத் தொடர்படுகிறோம் என்பதும் பேசப்படும் விடயம் குறித்த நமது மனப்பாங்கும் (விருப்பு வெறுப்புகள்) நாம் பேசும் மொழியை உரிய விதத்தில் பாவிக்க உதவும். கடைசியாக உங்களைச் சுற்றியுள்ள ஆங்கிலத்தை மிகவும் உன்னிப்பாக அவதானியுங்கள்.

Bus stand ற்குப் போய் Bus ஐப் பிடித்துக் Conductor இடம் Ticket வாங்க முன்னால் போனால் Driver பின்னால் போ என்று சொல்ல நான் Bell ஐ அடித்து அடுத்த Halt இல் இறங்கி Road இல் வந்த Friend இன் Bicycle இல் ஏறி Market க்குக் கிட்ட இறங்கினால் பின்னால் வந்த Auto Cycle லில் மோத நாங்கள் Hospital க்குப் போக வேண்டியதாயிற்று.

மேற்படி பந்தியில் உள்ளதைப்போல பல இடங்களில் நாங்கள் தமிழ்ச் சொற்களுக்குச் சமனான ஆங்கிலச் சொற்களைப் பாவிக்கிறோம் அல்லது பாவிப்பதைக் கேட்கிறோம். அவ்வாங்கிலச் சொற்களைச் சரியாக உச்சரியுங்கள், எழுத்துக் கூட்டுங்கள், சிறிய சிறிய வாக்கியங்களில் பயன்படுத்துங்கள். உங்கள் சொல்லறிவு கூடும், பேசுவதற்கு நம்பிக்கை வரும். உங்களுக்குப் பிடித்த துறையில் உள்ள புத்தகங்களை ஆங்கில மொழியில் வாசியுங்கள், ஒரு நல்ல ஆங்கில அகராதியை எப்போதும் படிப்பறையில் வைத்திருங்கள், பாவியுங்கள்.

மொழியைக் கற்பது ஒரு சுகானுபவம். ஒன்றுக்கு மேற்பட்ட மொழி தெரிந்தவன் ஒரு உடலில் இருக்கும் இரு மனிதர்கள்.

**வாழ்த்துக்கள், கற்றலை இப்பொழுதே ஆரம்பியுங்கள்**

**அ.யூ.புஸ்பராஜா,**
*போதனாசிரியர் - ஆங்கிலம்,*
*திருகோணமலை வளாகம்,*
*கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்,*
*கோணேசபுரி,*
*நிலாவெளி.*

**கெட்டிக்காரனை நதியில் தள்ளினாலும் அவன் வாயில் ஒரு மீனோடு தான் வருவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்திய உள்ளம் வேண்டும்

ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பறையில் உசாவும் ரவினாவும் கல்வி கற்று வந்தனர். ஊசாவின் தந்தையோ ஒரு தொழிலதிபர். அதனால் ஆணவம் குடியிருந்தது. ரவினாவோ ஏழைக்குடும்பத்தில் பிறந்தவள். அவளிடம் பொறுமை அதிகம் காணப்பட்டது.

உசா ரவினா இருவரும் நன்றாகக் கல்வி கற்பவர்கள் வகுப்பில் முதலிடத்திற்கு இருவருமே போட்டி போடுவார்கள். எப்போதும் உசாதான் முதலிடம் எடுப்பாள். ஒன்று இரண்டு புள்ளிகளால் சில வேளை ரவினா இரண்டாம் இடத்தையும் பெறுவாள். என்றாலும் அவளிடம் முதலிடம் எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்த போதும் அவள் உசா மீது பொறாமை கொள்ளவே இல்லை.

ஒருநாள் பாடசாலை இடைவேளையின் போது ரவினா படித்துக் கொண்டிருந்தாள். சகவகுப்பு நண்பிகள் கூடி கும்மாளம் இட்டு கொண்டிருந்த போது உசா ரவினாவைப் பார்த்து "அவள் என்ன பெரிதாய் படிக்கிறாள்? முதலிடம் பெறவேண்டும் என்ற நினைப்போ? என்னை விட உனக்கு படிப்புமில்லை பணமும் இல்லை" என அவளை கேலி செய்யவும் இதைக் கேட்ட அவள் நண்பிகளெல்லாம் சிரித்தார்கள் தன்னை ஏழை என்று சுட்டிக் காட்டியதால் ரவினாவின் மனம் மிகவும் வேதனைப்பட்டது. இதை சவாலாகக் கொண்டு படித்தாள்.

அடுத்த தவணைப் பரீட்சையில் அவள் சிறந்த புள்ளிகளுடன் வகுப்பில் முதலிடத்தை பிடித்தாள். உசாவோ அதிர்ச்சியடைந்தாள். காரணம் அவள் வகுப்பில் நான்காம் இடத்தைப் பெற்றிருந்தாள். அன்றிலிருந்து அவள் ரவினாவுடன் பேசவேயில்லை. எப்போதும் ரவினாவைத் திட்டுவாள். தரம்- 09 இல் மாகாணப் பரீட்சையில் ரவினாவே சிறந்த புள்ளிகளைப் பெற்றிருந்தாள். ரவினாவிற்கு உயர்தரப் பாடசாலை ஒன்றில் இலவசமாகக் கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இன்று அவள் பிரியாவிடை கொடுக்கும் நாள் ரவினா அனைத்த ஆசிரியைகளிடமும் விடைப்பெற்று வகுப்பிற்கு வந்தாள். அவளை நோக்கி ஓடி வந்து உசா "என்னை மன்னித்துவிடு ரவினா என் பொறாமையினாலும் அகங்காரத்தினாலும்தான் எனக்கு படிக்கமுடியவில்லை. நான் கூறிய வார்த்தைகளால் உன் மனம் புண்பட்டிருக்கும் என்னை மன்னித்துவிடு." என அழ ஆரம்பித்தாள்.

"இங்கே பார் உசா ஆழாதே என ஆறுதல் வார்த்தைகள் பல கூறி நீ திருந்தியதே மகிழ்ச்சி. திருக்குறளில் திருவள்ளுவர் "தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" எனத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். சரி இனியாவது அடுத்தவர் மனம் புண்படாமல் நடந்துகொள்" எனக் கூறி தன்னுடைய இலட்சிய பாதையிலே மேற்படிப்பிற்காக பறந்து சென்றாள்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"
(திருவள்ளுவர்)

சுவேந்தினி தம்பாப்பிள்ளை
தரம்-08B

இரகசியத்தை காப்பாற்றினால் அது உன் அடிமை
வெளியிட்டால் அதுவே உன் எஜமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1. அதிகமாக தங்கம் உற்பத்தி செய்யும் நாடு எது?
**தென்னாபிரிக்கா**

2. நோர்வே நாட்டு தேசிய விளையாட்டு எது?
**பனிச்சறுக்குதல்**

3. ஐக்கிய நாடுகள் சபை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
**1945ம் ஆண்டு**

4. உலகின் மிகப் பெரிய கடல் எது?
**தென்சீனக்கடல்**

5. உலகிலேயே சனத்தொகை கூடிய நாடு எது?
**சீனா**

6. ஐக்கிய நாடுகள் செயலகம் எங்குள்ளது?
**அமெரிக்கா நியூயோர்க் நகரம்**

7. உலகின் மிக நீளமான சுரங்கப்பாதை எங்குள்ளது?
**ஜப்பான்**

8. நேரடி சனநாயகம் முதலில் பிறந்த நாடு எது?
**கிரேக்க நாடு**

9. மனிதனின் நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?
**46 ஆகும்**

10. உலகின் கூரை என அழைக்கப்படுவது?
**தீபெத்**

செல்வி.ரு.ஹரிதர்சினி
தரம்:-06

# வாழ்த்துகிறேன்.

சாம்பலூரின் மடியினிலே
தாய் போல் வந்துதித்து
கையினிலே அறிவென்னும் ஏடேந்தி
தத்தும் கடல் மீது முத்துப் போல் தோன்றியவளே.
விண்மீன்கள் கண் மலர ஆசி நல்க
வெண்முகில்கள் வாசமிகு மலர்கள் தூவ
தாயைத் தேடி வரும் பிள்ளை – போல
உன்னை நாடி வரும் மாணாக்கர்
கல்வியென்னும் கரையை அடைய
தோணி போல் இருப்பவளே
தன்னம்பிக்கையுடன் வீறுநடை போடுபவளே
எல்லா நாளும் உன் புகழ் கூற
எல்லா சிறப்பும் உன் வண்ணம் வந்தடைய
வாழ்த்துகிறேன்.

செல்வி.மா.சரணியா
தரம்-13 கலை (2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழித் தினம் - சாதனையாளர்கள்
## 2005

| நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | பெயர் |
|---|---|---|---|
| தனி நடனம் பிரிவு - 01 | 03 | - | செல்வி.கங்கேஸ்வரன் கிறிஸ்ரிகா |
| தனி நடனம் பிரிவு - 02 | 03 | - | செல்வி.தனராஜ் சகாயமேரி |
| தனி நடனம் பிரிவு - 03 | 02 | - | செல்வன்.ரவீந்திரன் பிரேமானந் |
| தனி நடனம் பிரிவு - 05 | 02 | - | செல்வி.மன்மதன் ஓக்கஸ் கிறிஸ்ரினா ஜெனிபர் |
| குழு நடனம் திறந்த போட்டி | 03 | - | செல்வி.சௌந்தராஜன் வினோதலட்சுமி<br>செல்வி சண்முகத்தாசன் சதாஜினி<br>செல்வி.சிவராசா துஷாந்தினி<br>செல்வி. றொபின்றொக்சின்<br>செல்வி.சிவராசா சசிரேக்கா<br>செல்வி.பவானந்தமுருகன் தனு |
| இசைதனி பிரிவு - 03 | 02 | - | செல்வன்.குமாரவேல் நிலான் |

## தமிழ்மொழித்தினம் - சாதனையாளர்கள்
## 2007

| நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | பெயர் |
|---|---|---|---|---|
| தனி நடனம் பிரிவு - 01 | 03 | - | - | செல்வி.விஜயமோகன் தனுஜா |
| குழு நடனம் திறந்த போட்டி | 01 | 01 | 03 | செல்வி. நகுலேஸ்வரன் வினுசிதா<br>செல்வி.கங்கேஸ்வரன் கிருஸ்திகா<br>செல்வி.சுரேஸ்குமார் பிரவீனா<br>செல்வி.வில்வராசா கஸ்தூரி<br>செல்வி.ரவீந்திரன் பவித்திரா<br>செல்வி.யோகராசா கம்ஷாயினி<br>செல்வி.ரவிசேகரன் யசியா<br>செல்வி.சபாநாதப்பிள்ளை கீர்த்தனா<br>செல்வி.தங்கேஸ்வரன் மௌனிக்கா<br>செல்வி.சௌக்காத்தலி நதியா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

School Band Team -2008



School Cricket Team -2008



School Net Ball Team -2008



School Foot Ball Team -2008



School Environment Team -2008



A/L Union -2008



Agriculture Union -2008



English Union -2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழித்தினம் - சாதனையாளர்கள்

## 2008

| நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | பெயர் |
|---|---|---|---|---|
| தனி நடனம் பிரிவு -01 | 3 | - | - | செல்வி.லுவட்சேவியர் ஒக்கஸ் சலோமியா |
| தனி நடனம் பிரிவு -02 | 3 | - | - | செல்வி.விஜயமோகன் தனுஜா |
| குழு நடனம் திறந்த போட்டி | 2 | - | - | செல்வி. செல்வி.கங்கேஸ்வரன் கிருஸ்திகா<br>செல்வி.விஜயமோகன் தனுஜா<br>செல்வி.சௌக்காத்தலி நதியா<br>செல்வி.நகுலேஸ்வரன் விதுசனா<br>செல்வி.நகுலேஸ்வரன் வினுசிதா<br>செல்வி.மாதவராசா துளசிகா<br>செல்வி.சபாநாதப்பிள்ளை கீரத்தனா<br>செல்வி.ரவீந்திரன் பவித்திரா<br>செல்வி.ரவிசேகரன் லக்சி<br>செல்வி.ரமேஸ்குமார் விதுஷா |
| நாடகம் | 2 | - | - | செல்வன்.அமிர்தராஜசிங்கம் நிருஷன்<br>செல்வன்.சிவகுமார் லிங்கேஸ்வரன்<br>செல்வன்.விஜயராஜா காந்தருபன்<br>செல்வன்.சரவணன் ரவிநாதன்<br>செல்வன்.முருகேஸ் பேரின்பநாதன்<br>செல்வன.ராஜா சிவனேஸ்<br>செல்வி.சிவசுந்தரம் பிரவீனா<br>செல்வி.சௌந்தராஜன் லக்ஷிகா<br>செல்வி.துரைசங்கம் சண்முகப்பிரியா<br>செல்வி.மரியராஜா ஜொஸ்லின்<br>செல்வி.சுரேஸ்குமார் சுவேதா<br>செல்வன்.இராசலிங்கம் ததுஷின் |
| வில்லுப்பாட்டு | 1 | 1 | 3 | செல்வன்.நாராயணமூர்த்தி லஜிதன்<br>செல்வன்.செல்வராசா டினேஸ்<br>செல்வன்.திருச்செல்வம் அபிகேஷன்<br>செல்வன்.ஆறுமுகம் கணேஸ்<br>செல்வன்.சிவராசா ஹேமமனோஜ்<br>செல்வன்.ஸ்ரீபவன் வசிகரன்<br>செல்வன்.சரவணபவன் திருச்செந்தூரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

1. சத்தியம் தனியாகச் செல்லும் பொய்க்குத்தான் துணை வேண்டும்.
2. எத்தனை தவறையும் மன்னிக்கும் நீதிமன்றம் ஒன்று உண்டு என்றால் அது தாயின் இதயமே.
2. அறிவாளியின் கையிலுள்ள எழுதுகோலானது போர் வீரனின் வீர வாளை விட கூர்மையானது.
4. கல்வியின் ஆரம்பம் கசப்பானது அதன் முடிவோ தேனை விட இனிப்பானது.
5. எதிர்ப்பு எங்கு இல்லையோ அங்கு வெற்றி இல்லை.
6. நீ எதை நினைக்கிறாயோ அதுவே நீ ஆகிறாய்
7. சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும்.
8. உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதன் பொருட்டும் உண்மையை துறக்கக் கூடாது.
9. தன்னம்பிக்கை கொண்ட சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும்.
10. உடல் பலவீனத்தையோ மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் நீ அனுகாதே.
11. உண்மையின் தன்மையை உணர்ந்தவன் உலகில் விலை மதிக்க முடியாத உயர்ந்த மனிதனாவான்.
12. உண்மையான அறிவு, அடக்கமுள்ள மனிதனாக அவனை மாற்றும். உண்மையான தியாக மனப்பான்மை, அவனை வலிமைமிக்க மனிதனாக மாற்றும்.
13. துன்பத்தில் தாக்குண்ட போது உயர்வு மேலும் உயரும் என்ற உண்மையை அறிந்தேன். இதுவே துன்பமாக எனக்கிழைத்த நன்மை.
14. தன்னை வென்று விடுவான் என்று அஞ்சுபவன் நிச்சயமாகத் தோல்வியுறுவான்.
15. பயத்தை வெளிக்காட்டினால் அபாயத்தை எதிர்கொண்டு அழைப்பதாகும்.
16. புதிய உலகம் செய்வோம்.
17. மற்றொருவனைப் பற்றி ஒருவன் வாயைத் திறந்தால் நீ உன் செவியை அடைத்துக் கொள்.
18. யாமறிந்த மொழிகளிலேயே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்.

### தெரிந்ததும் தெரியாததும்

**நாற்படை** – தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை

**முப்படை** – கடற்படை, விமானப்படை இராணுவப்படை

**பஞ்சஇலக்கணம்** – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி

**பஞ்ச உலோகம்** – இரும்பு செம்பு ஈயம் பொன் வெள்ளி

**பஞ்சகௌவியம்** – தயிர், நெய், பால், கோமயம், கோசீயம்

**ஐம்புலன்** – கேட்டல், பார்த்தல், நுகர்தல், தொடுதல், சுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட மாணவர் அடைவுகள்

## 2005 – 2007

தரம் - 02

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | குலேஸ்வரன் சதுர்ஷன்<br>ஜெயகாந்தன் தனனி<br>பிரபாகரன் கிருத்திகன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | ஜெயசீலன் சர்வினா<br>ஜெயகாந்தன் தனனி<br>சுதாகரன் சதுர்விதன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சுற்றாடல் | சுதாகரன் சதுர்விதன்<br>குலேஸ்வரன் சதுர்ஷன்<br>இராசலிங்கம் ததுஷன்<br>குலசங்கர் சயூகன் | 1ம் இடம்.<br>1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம் |

## 2005 – 2007

தரம் - 03

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | சித்திரவேல் தாமிரன்<br>திருச்செல்வம் அர்ஜிதன்<br>குணசீலநாதன் ஷர்மிக்கா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | சித்திரவேல் தாமிரன்<br>திருச்செல்வம் அர்ஜிதன்<br>திருச்சிலோகானந்தா திவாஷனா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சுற்றாடல் | திருச்செல்வம் அர்ஜிதன்<br>சித்திரவேல் தாமிரன்<br>குணசீலநாதன் ஷர்மிக்கா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2005 – 2007

தரம் - 04

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | குலசங்கர் திலக்ஷனா<br>செல்வகுமார் செந்துஜன்<br>விவேகானந்தன் விதுஷா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | குலசங்கர் திலக்ஷனா<br>செல்வகுமார் செந்துஜன்<br>பரஞ்சோதி பிரியங்கா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சுற்றாடல் | குலசங்கர் திலக்ஷனா<br>செல்வகுமார் செந்துஜன்<br>பரஞ்சோதி பிரியங்கா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | குலசங்கர் திலக்ஷனா<br>செல்வகுமார் செந்துஜன்<br>இராசநாயகம் சஷ்டீபன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |

## 2005 – 2007

தரம் - 05

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | திருச்செல்வம் அக்ஷஜன்<br>சிவராசா நிலானுஷா<br>சௌந்தரராஜன் அபஷனா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | திருச்செல்வம் அக்ஷஜன்<br>சிவராசா நிலானுஷா<br>மன்மதன் சிந்துஜன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சுற்றாடல் | திருச்செல்வம் அக்ஷஜன்<br>சிவராசா நிலானுஷா<br>சௌந்தரராஜன் அபஷனா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | திருச்செல்வம் அக்ஷஜன்<br>சிவராசா நிலானுஷா<br>சௌந்தரராஜன் அபஷனா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2005 – 2007

தரம் - 06

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | சிவராசா கோபிராஜ்<br>கங்கேஸ்வரன் கஜேனா<br>மாதவராசா துளசிகா | 1ம் இடம்.<br>2ம் இடம்<br>3ம் இடம். |
| கணிதம் | சிவராசா கோபிராஜ்<br>சிவகுமார் பாலசாயி<br>கிருஷ்ணதாஸ் தட்சிகா | 1ம் இடம்.<br>2ம் இடம்<br>3ம் இடம். |
| சுற்றாடல் | சிவராசா கோபிராஜ்<br>மாதவராசா துளசிகா<br>கங்கேஸ்வரன் கஜேனா | 1ம் இடம்.<br>2ம் இடம்<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | சிவராசா சஞ்சீவன்<br>சிவராசா கோபிராஜ்<br>இரவிசேகரன் லக்ஷி | 1ம் இடம்.<br>2ம் இடம்<br>3ம் இடம். |

## 2005 – 2007

தரம் - 07

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | பிரபாகரன் சப்தவி<br>நகுலேஸ்வரன் வினுஷிதா<br>நகுலேஸ்வரன் விதுஷனா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | பிரபாகரன் சப்தவி<br>நகுலேஸ்வரன் வினுஷிதா<br>கணேசபிள்ளை லவன்ஜா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சமூகக்கல்வி | பிரபாகரன் சப்தவி<br>கணேசபிள்ளை லவன்ஜா<br>நகுலேஸ்வரன் வினுஷிதா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| விஞ்ஞானம் | நகுலேஸ்வரன் வினுஷிதா<br>பிரபாகரன் சப்தவி<br>கணேசபிள்ளை லவன்ஜா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | பிரபாகரன் சப்தவி<br>கணேசபிள்ளை லவன்ஜா<br>நகுலேஸ்வரன் வினுஷிதா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2005 – 2007

தரம் - 08

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | தேவராசா ருசாந்<br>சிவராசா சஜித்தா<br>சிவகுமார் ஹேமமனோஜ் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | தேவராசா ருசாந்<br>சிவகுமார் ஹேமமனோஜ்<br>சிவராசா கோகிலராஜ் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| விஞ்ஞானம் | சிவகுமார் ஹேமமனோஜ்<br>தேவராசா ருசாந்<br>சிவராசா சஜித்தா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சமூகக்கல்வி | சிவராசா சஜித்தா<br>தேவராசா ருசாந்<br>திருச்சிலோகானந்தா மதுஷனா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | திருச்சிலோகானந்தா மதுஷனா<br>சிவகுமார் ஹேமமனோஜ்<br>சிவராசா சஜித்தா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |

## 2005 – 2007

தரம் - 09

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | கிருஸ்ணமூர்த்தி துர்க்காசினி<br>சேதுபாண்டி ரதிதேவி<br>நகுலேஸ்வரன் டிலுக்சியா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | கிருஸ்ணமூர்த்த துர்க்காசினி<br>அமிர்தராஜசிங்கம் சதுர்ஷன்<br>சேதுபாண்டி ரதிதேவி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம் |
| விஞ்ஞானம் | கிருஸ்ணமூர்த்தி துர்க்காசினி<br>ஜெயராஜன் அருண்ராஜ்<br>சிவராசா ஜதீஸ் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சமூகக்கல்வி | கிருஸ்ணமூர்த்தி துர்க்காசினி<br>சிவராசா ஜதீஸ்<br>சேதுபாண்டி ரதிதேவி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | கிருஸ்ணமூர்த்தி துர்க்காசினி<br>நகுலேஸ்வரன் டிலுக்சியா<br>மாணிக்கராசா புவிதர்சன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2005 – 2007

தரம் - 10

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | சௌந்தராஜன் லோஜவிதா<br>சிவகுமார் ஹேமசிவேஸ்<br>நாகேஸ்வரன் கிஷாமினி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | சிவகுமார் ஹேமசிவேஸ்<br>சௌந்தராஜன் லோஜவலிதா<br>அன்னராசா தனுஷியன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம் |
| விஞ்ஞானம் | சௌந்தராஜன் லோஜவிதா<br>சிவகுமார் ஹேமசிவேஸ்<br>அன்னராசா தனுஷியன்<br>நாகேஸ்வரன் கிஷாமினி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம்.<br>3ம் இடம் |
| சமூகக்கல்வி | சௌந்தராஜன் லோஜவிதா<br>சிவகுமார் ஹேமசிவேஸ்<br>நாகேஸ்வரன் கிஷாமினி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | சௌந்தரராஜன் லோஜவிதா<br>சிவகுமார் ஹேமசிவேஸ்<br>நாகேஸ்வரன் கிஷாமினி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |

## 2005 – 2007

தரம் - 11

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | சிவஞானசுந்தரம் சுதாகரன்<br>பவானந்தமுருகன் தனு<br>மாதவராசா சதுர்ஜா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | சிவஞானசுந்தரம் சுதாகரன்<br>பவானந்தமுருகன் தனு<br>ராஜ் பிறேமதி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம் |
| விஞ்ஞானம் | சிவஞானசுந்தரம் சுதாகரன்<br>பவானந்தமுருகன் தனு<br>மாதவராசா சதுர்ஜா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சமூகக்கல்வி | பவானந்தமுருகன் தனு<br>மாதவராசா சதுர்ஜா<br>சிவஞானசுந்தரம் சுதாகரன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | சிவஞானசுந்தரம் சுதாகரன்<br>பவானந்தமுருகன் தனு<br>மாதவராசா சதுர்ஜா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2005 – 2006

தரம் - 12

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | புலேந்திரன் றொசாலினி<br>ராஜ் நிரோசலா<br>அமிர்தராஜசிங்கம் நிருஷன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | அமிர்தராஜசிங்கம் நிருஷன்<br>ராஜ் நிரோசலா<br>சிவலிங்கம் ஜெயராஜன் | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம் |
| விஞ்ஞானம் | ராஜ் நிரோசலா<br>அமிர்தராஜசிங்கம் நிருஷன்<br>புலேந்திரன் றொசாலினி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சமூகக்கல்வி | புலேந்திரன் றொசாலினி<br>அமிர்தராஜசிங்கம் நிருஷன்<br>ராஜ் நிரோசலா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | சிவலிங்கம் ஜெயராஜன்<br>செல்வநாயகம் மதனா<br>புலேந்திரன் றொசாலினி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |

## 2006 – 2007

தரம் - 12

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | பிரபாகரன் பிரேமிளா<br>மாணிக்கராசா தேவசங்கீதா<br>தங்கவேல் கிருசாந்தி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| கணிதம் | தங்கவேல் கிருசாந்தி<br>பிரபாகரன் பிரேமிளா<br>மாணிக்கராசா தேவசங்கீதா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம் |
| விஞ்ஞானம் | பிரபாகரன் பிரேமிளா<br>தங்கவேல் கிருசாந்தி<br>மாணிக்கராசா தேவசங்கீதா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| சமூகக்கல்வி | தங்கவேல் கிருசாந்தி<br>மாணிக்கராசா தேவசங்கீதா<br>பிரபாகரன் பிரேமிளா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| ஆங்கிலம் | தங்கவேல் கிருசாந்தி<br>பிரபாகரன் பிரேமிளா<br>மாணிக்கராசா தேவசங்கீதா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2006 – 2007

**தரம் - 13**

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | வேக்மன் ஒக்கஸ் ஜெனிற்றா<br>ராஜ் நித்தியா<br>சேதுபாண்டி மேகலட்சுமி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| இந்துநாகரிகம் | ராஜ் நித்தியா<br>சேதுபாண்டி மேகலட்சுமி<br>அன்னராசா தனுஷியா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம் |
| கிறிஸ்தவம் | வேக்மன் ஒக்கஸ் ஜெனிற்றா | 1ம் இடம். |
| புவியியல் | வேக்மன் ஒக்கஸ் ஜெனிற்றா<br>ராஜ் நித்தியா<br>சேதுபாண்டி மேகலட்சுமி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |

## 2006 – 2007

**தரம் - 13R**

| பாடம் | மாணவர் பெயர் | நிலை. |
|---|---|---|
| தமிழ் | கணேசப்பிள்ளை பிரியங்கா<br>வேக்மன் ஒக்கஸ் ஜெனிற்றா றொசாலின்<br>சுப்பிரமணியம் சுஜித்தா | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |
| இந்துநாகரிகம் | கணேசப்பிள்ளை பிரியங்கா<br>பரஞ்சோதி கஸ்தூரி<br>மூர்த்தி காயத்திரி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம் |
| கிறிஸ்தவம் | வேக்மன் ஒக்கஸ் ஜெனிற்றா றொசாலின்<br>சுப்பிரமணியம் சுஜித்தா | 1ம் இடம்.<br>2ம் இடம் |
| புவியியல் | வேக்மன் ஒக்கஸ் ஜெனிற்றா றொசாலின்<br>கணேசப்பிள்ளை பிரியங்கா<br>மூர்த்தி காயத்திரி | 1ம் இடம்.<br>2ம் இடம்.<br>3ம் இடம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித வினாவிடைப் போட்டி முடிவு - 2006

செல்வன் :- சிவராசா கோகிலராஜ் கோட்ட மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விஞ்ஞான வினாவிடை போட்டி முடிவுகள்- 2007

| இல | பெயர் | தரம் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|
| 1. | செல்வி.சிவராசா சஜித்தா | 07 | 01 | 02 |
| 2. | செல்வன்.தேவராசா ருசாந் | 07 | 02 | - |
| 3. | செல்வி.கிருஸ்ணமூர்த்தி.துர்க்காசினி | 08 | 04 | - |

## கணித வினா விடை முடிவு - 2008

செல்வன்.சிவராசா கோபிராஜ் அவர்கள் வலயமட்டப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

## சமூகக்கல்வி வினாவிடை போட்டி முடிவுகள் - 2008

| இல | பெயர் | தரம் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|
| 1. | செல்வன்.சி.கோபிராஜ் | 06 | 01 | 01 |
| 2. | செல்வி.ந.வினுசிதா | 07 | 01 | 01 |
| 3. | செல்வன்.சி.ஹேமமனோஜ் | 08 | 01 | 01 |
| 4. | செல்வன்.சி.ஜதீஸ் | 09 | 02 | 02 |
| 5. | செல்வி.கி.துர்க்காசினி | 09 | 03 | - |
| 6. | செல்வி.சௌ.லோஜவிதா | 10 | 03 | - |
| 7. | செல்வி.ப.தனு | 11 | 03 | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் மன்றங்களும், உறுப்பினர்களும்

## கணித விஞ்ஞான மன்றம்

தலைவர் :- செல்வி. யோ. அகல்யா
உப தலைவர் :- செல்வன். க. விபூசிகன்
செயலாளர் :- செல்வி. ரா. பிறேமதி
உப செயலாளர் :- செல்வி.வ. ஜீவதா
பொருளாளர் :- செல்வி. கி. ஜனார்த்தினி

### உறுப்பினர்கள்

செல்வன் - சி. கோபிராஜ்
செல்வி - ந. விதுசனா
செல்வன் - தி. அபிகேசன்
செல்வி - சி. சஜித்தா
செல்வன் - சி. ஜதீஸ்
செல்வன் - உ. தனுஷாந்
செல்வன் - ஸ்ரீ. வசிகரன்
செல்வி - ர. யசியா
செல்வி - சு. கஜனி

### பொறுப்பாசிரியர்கள்

திரு. ஆர். ஜெயக்காந்
திருமதி. ஆர். திருச்செல்வம்
திருமதி. வி. உதயகுமார்.

## சமூகக்கல்வி மன்றம்

தலைவர் :- செல்வன். சி. வசிகரன்
உப தலைவர் :- செல்வன். செ. ஈழவேந்தன்
செயலாளர் :- செல்வி. இ. குவேந்தினி
உப செயலாளர் :- செல்வி. ந. டிலுச்சிகா
பொருளாளர் :- செல்வி. ச. யதுசிகா

### உறுப்பினர்கள்

செல்வி. ஜெ.கேசிகா
செல்வி. ந. வினுசிதா
செல்வன். சி. கோகிலராஜ்
செல்வி. மா. சதுர்ஜா
செல்வி. ச. நிலோஜிதா
செல்வன். கா. சிவகாந்தன்
செல்வன். மா. திவாகர்
செல்வி. சௌ. லக்சிகா
செல்வி. நா. கிஷாமினி

### பொறுப்பாசிரியர்கள்

திருமதி. சு. சிவராசா
திரு. மா. குருகலசிங்கம்
திரு. ந. கிருபானந்தம்

## விவசாய மன்றம்

தலைவர் :- செல்வன். சி. சுதாகரன்
உப தலைவர் :- செல்வன். சி. வசிகரன்
செயலாளர் :- செல்வி. ப. தனு
உப செயலாளர் :- செல்வி.ஜோ. அகல்யா
பொருளாளர் :- செல்வி. ரா. பிறேமி

### உறுப்பினர்கள்.

செல்வன் :- க. விபூசன்
செல்வன் :- ச. கிசோக்
செல்வன் :- மோ. அனுவாசன்
செல்வன் :- வி. துசிகரன்
செல்வி :- ந. ராகினி
செல்வி :- மா. சதுஜா
செல்வி :- த. சண்முகப்பிரியா
செல்வி :- ஜெ. சத்தியரூபி

### பொறுப்பாசிரியர்

திரு. த. விஜயராஜேந்திரன்

## உயர்தர மாணவர் ஒன்றியம்

தலைவர் :- செல்வன் அமர்தராஜசிங்கம் நிரூஷன்
உப தலைவர் :- செல்வன் . ரவிசேகரன் ரூபதர்சன்
செயலாளர் :- செல்வன். காந்தரூபன் தனுஷன்
உப செயலாளர் :- செல்வி. சௌந்தராஜன் வினோதலட்சுமி
பொருளாளர் :- செல்வி. மாணிக்கராசா தேவசங்கீதா

### உறுப்பினர்கள்

செல்வன் - யோகராசா ஜெயசீலன்
செல்வன் - சிவலிங்கம் ஜெயராஜன்
செல்வன் - மாணிக்கராசா தேவதர்ஷன்
செல்வன் - சிவராசா நிரோசன்
செல்வன் - கதிர்காமத்தம்பி சுரேன்
செல்வி - ராஜ் நிரோசலா
செல்வி - மாதவராசா சரணியா
செல்வி - கௌரிதாஸ் ஜனனப்பிரியா
செல்வி - சௌந்தராஜன் தர்மிக்கா
செல்வி - தங்கவேல் கீர்த்திகா
செல்வி - செல்வநாயகம் மதனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாசிரியர்

திரு. மா. குருகுலசிங்கம்
திரு. T. பார்த்தீபன்
திரு. N. தயாளசிங்கம்
திரு. K. சிவகாளிதாஸ்
திரு. S. வின்சன்ட்
திருமதி. M. பிரபாகரன்
திருமதி. நி. திரிச்சிலோகானந்தா
திரு. ந. கிருபானந்தம்
செல்வி. சு. கனிமொழி

உறுப்பினர்கள்.

செல்வன் :- றொசான் ஒக்கஸ்
செல்வி :- தங்கவேல் சந்திரகலா
செல்வி :- ஜோன் அகல்யா
செல்வி :- தணிகாசலம் அக்சா
செல்வி :- புலேந்திரன் தட்சாயனி
செல்வி :- காளிதாசன் உதயகுமாரி
செல்வி :- சக்திவேல் நந்தினி
செல்வி :- றொபின் றெஜினா
செல்வன் :- முருகேஸ் புஸ்பராஜன்

கிறிஸ்தவ மன்றம்

தலைவர் :- செல்வி. மகேந்திரன் உதயநந்தினி
உப தலைவர் :- செல்வன். சரவணன் ரவிநாதன்
செயலாளர் :- செல்வி. முருகேஸ் கோகிலதர்சினி
உப செயலாளர் :- செல்வன். ஆறுமுகம் கணேஸ்
பொருளாளர் :- செல்வி. குலராஜசேகரம் ஜான்சி

பொறுப்பாசிரியர்

செல்வி :- எ.எஸ். நிலுஷா அன்ரனிற்றா
செல்வி :- எ.ஜோ. ஓ. ஜோய்
செல்வி :- ஆர். செரீன்
திரு. :- ச. வின்சன்ட்
திருமதி :- ரி.ரி. பெஞ்சமின்

# கல்வி பற்றி அறிஞர்கள் முன் மொழிந்தவை

1. "கற்றுக் கொள்வதற்கு மூன்று அஸ்திவாரங்கள் தேவைப்படுகின்றன. நிறையப் பார்க்க வேண்டும். நிறையப் படிக்க வேண்டும். நிறையக்கஷ்டப்பட வேண்டும். ஆகியவை தான் இந் மூன்று அஸ்திவாரங்கள்.

**(Catherall)**

2. "என்று ஒருவன் கல்வி கற்றுக் கொள்வதை நிறுத்திக் கொள்கிறானோ, அன்றே அவனது வாழ்க்கையும் முடிந்து விடுகின்றது.

**(E.A. Filene)**

3. "எனக்கு எடுத்துச் சொல்லுங்கள் அதை நான் மறந்து விடுவேன். எனக்கு காண்பியுங்கள் அதை நான் மறந்து விடக்கூடும். என்னை சம்பந்தப்படுத்துங்கள் (Involve me) எனக்கு நன்றாகப்புரிந்து விடும்."

4. "கல்வியின் நோக்கம் வாழ்ந்து விட ஒருவேலையைத் தேடிக் கொள்வதற்கு அல்ல. ஒருவன் தான் விரும்பும் வாழ்க்கையை உருவாக்கிக் கொள்வது தான்."

**(William Allen White)**

5. "நிறையப்படிப்பதை விட, பயனுள்ளவற்றைப் படிப்பவன் தலைச்சிறந்தவனாக உருவெடுப்பான்"

**(Aristotile)**

6. "கல்வி மனிதனை உருவாக்குகின்றது.

**(James coutham)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை

பத்துத் திங்களாய் சுமந்தாள் என் - அன்னை
பக்குவமாய் பெற்றெடுத்தாய் என்னை
அன்போடு பாலூட்டினாள் என் - அன்னை
பாசத்தோடு அரவணைத்தாள் என்னை

இமைக்காமல் காத்திருந்தாள் என் - அன்னை
கண்போல ஒளிர வைத்தாள் என்னை
சுவையோடு உணவூட்டினாள் என் - அன்னை
சுகமாக வழிகாட்டினாள் என்னை

நான் உறங்க தான் விழித்தாள் என் - அன்னை
நாள்முழுதும் பாராட்டினாள் என்னை
நானழ தானழுவாள் என் - அன்னை
நாளாந்தம் சீராட்டுவாள் என்னை

**செல்வி. நா. ஜீவிதா**
**தரம் - 11**

# Garbage Disposal.

Garbage disposal has become a huge problem for urban dwellers as well as for urban authorities. Our homes, Hotels, Restaurants, Markets, Offices and Factories etc. put out tons of rubbish. The authorities have to find dumping sites for the garbage. Then protests come from the people who live around.

No one likes to live next door to a garbage dump. The authorities have to find new sites. The rotting garbage has to be transported once again and dumped on the new sites. As the garbage compactors are sighted, the public starts their protests and demonstrations. Sometimes the drivers, labourers and officials are attacked. As a result garbage is not collected. People throw their rubbish on road sides. Crows, stray cows and dogs throng to these places looking for food. They tear the bags and scatter the rubbish on the roads. The once beautiful environment becomes an eyesore.

**T. Chandrakala.**
**Grade – 10B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஒளிதீபம்

எட்டுத்திக்கும் எழில் பொழியும் கோணமாமலையிலே
என்றும் அழியாப்புகழுடன்
செம்மையும் செழிப்புடனும் விளங்கும் சாம்பல்தீவிலே
மகாவித்தியாலயமாக கொலிக்கும் பள்ளியிலே

அன்பெனும் ஒளியை ஆற்றாத ஊற்றாக வழங்கி
அர்ப்பணிப்புதனை ஆறாக ஊற்றி
புன்னகையில் ஆயிரம் மொழிகள் பேசி
புகழுடன் எம் பள்ளியை மாற்றிய மாபெரும் மதிப்பிற்குரிய அதிபரே

வானத்தில் ஆயிரம் நட்சத்திரத்துக்கு மத்தியில்
மதியாக விளங்கி எம்மை
விதியாக எம்மிடம் சேர்த்திட்ட உங்கள்
ஒரு பார்வை போதும் பாரினில் நாம் உயர

அறிவென்னும் தேனை தெவிட்டாது வழங்கி
அன்பெனும் விதையை எம்மிடம் விதைத்து
பண்பெனும் பயிரை சிறப்புடன் வளர்த்து
பாசத்துடன் எம்மை பற்றிய எம் ஆசிரியர்களே

கடலை விட்டு அலையும் பூவை விட்டு மணமும்பிரியாததைப்போல
எம் நெஞ்சை விட்டு உம் நினைவுகள் என்றும் பிரியாது
நாம் எங்கு சென்றாலும் நற்சான்று பெற்றாலும்
எம்மை சிறக்க வைத்த நீர் எப்போதும் எம் சிந்தையர்

மனமகிழ்ந்து ஒரு வார்த்தை சொல்லுங்கள்
நாம் ஓராயிரம் சிறப்புப்பெறுவோம்.
மனந்திறந்து கூறுகிறேன் எமக்காகப் பாடுபட்ட நீங்கள்
எக்குறையும் இன்றி என்னாளும் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன்.

நன்றி

T.Kirushanthi


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலக்கல்வியின் அவசியம்

இன்று ஆங்கிலமொழியானது உலகளாவிய மொழியாக விளங்குகின்றது. இதனால் இம்மொழி பொது மொழி என்றும் அழைக்கப்படுகின்றது. தற்போதைய காலகட்டத்தில் ஆங்கிலமொழி பேசப்படாத நாடே இல்லை என்று கூறலாம்.

பல்லின மக்கள், பலமொழி பேசும் மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டிலே அனைத்து மக்களையும் தொடர்புபடுத்தும் மொழியாக ஆங்கிலமொழியே இன்று விளங்குகின்றது. நாம் ஆங்கில மொழியைப் பேசத் தெரிந்துகொண்டோமானால் எமது கருத்துகளை எல்லா இன மக்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிதாக இருக்கும். இதனால் நாட்டிலே தேச ஒருமைப்பாடு ஏற்பட வழிவகுக்கும்.

விவேகானந்தர் சுவாமிகள் இந்துமதம் பற்றிய கருத்துக்களை வெளிநாடுகள் பலவற்றில் பிரச்சாரம் செய்வதற்கு ஆங்கில மொழியே உறுதுணையாக விளங்கியது. மேலும் காந்தியடிகள் தமது தாய்நாட்டில் சுதந்திரத்தின் தேவையை ஏனைய நாடுகளில் எடுத்துரைப்பதற்கு ஆதாரமாக விளங்கியது ஆங்கிலமொழியாகும்.

இலங்கையில் பிரித்தானியர் வருகையினால் ஆங்கிலக்கல்வி புகுத்தப்பட்டது. இன்று பாடசாலைகளில் கட்டாய பாடமாக ஆங்கிலக்கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. உயர்கல்வி பெறுபவர்கள் ஆங்கிலக்கல்வியின் மூலமே தமது கல்வியை தொடர்கின்றதோர் சிறப்பு நிலை இன்று எமது நாட்டில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சட்டத்துறை நூல்கள் வைத்தியத்துறை நூல்கள் விஞ்ஞானத்துறை நூல்கள் போன்ற சகல துறை நூல்களும் ஆங்கிலமொழியிலேயே உள்ளன. இவைப் பற்றிய விளக்கங்களை பெற்றுக்கொள்வதற்கு எமக்கு ஆங்கிலக்கல்வி தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு கல்வி கற்கவோ வேலைவாய்ப்பு பெறவோ செல்லும் போது எமக்கு ஆங்கிலமொழி இன்றியமையாததாக விளங்குகின்றது.

இன்றைய பாடத்திட்டத்திலே கணினியும் ஒரு பாடமாக புகுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கணினியில் பயிற்சி பெறுவதற்கு ஆங்கிலக்கல்வி தெரிந்திருப்பது அவசியமானதாகும். எனவே இவற்றிலிருந்து ஆங்கிலக்கல்வி அவசியம் எனத் தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

எனினும் இலங்கையிலே கிராமப்புறங்களில் ஆங்கிலமொழியின் அவசியம் உணரப்பட்டுள்ளமை மிகக் குறைவாகவே உள்ளது. எனவே கிராமப்புறமக்களிடையே குறிப்பாக மாணவர்களிடையே ஆங்கிலக்கல்வியின் அவசியம் பற்றி எடுத்துரைக்க வேண்டும். கிராமப்புறபாடசாலைகளிலே நாடகம் பாட்டு கட்டுரை போன்றவற்றை ஆங்கிலமொழிகளிலே நடாத்தி மாணவர்களிடையே ஓர் புத்துணர்ச்சியை ஏற்படுத்துதல் அவசியமாகும். அத்துடன் கிராமப்புற மாணவர்களின் பெற்றோர்களுக்கும் ஆங்கிலக்கல்வியின் அவசியம் பற்றி மிகத்தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

எனவே ஆங்கிலக்கல்வியை விருத்தி செய்வதன் மூலம் எமது நாட்டு மக்களிடையே இன ஐக்கியத்தை ஏற்படுத்தி ஒற்றுமைக்கு வழிவகுப்பதோடு எமது நாட்டின் வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவும் முயலுவோம்.

சிவராசா கோகிலராஜ்
தரம்-08A

## சாம்பல்தீவு தமிழ் வித்தியாலய நான்கு மாணவர்கள் சித்தி

திருகோணமலை மாவட்டம் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம் அண்மையில் வெளியான 2007 க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறந்த பெறு பேறுகளைக் கலைப்பிரிவில் பெற்றுள்ளது.

இதன்படி இப்பரீட்சைக்கு முதற் தடவையாகத் தோற்றிய மாணவரில் நான்கு பேர் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களின் பெயர்களும் பெறுபேறுகளைம் வருமாறு;

செல்வி வெக்மன் ஒக்ஸ் ஜெனிற்றா விக்டரின் 1A, 2B செல்வி நித்தியா ராஜ் 2பி, 1சி, செல்வி மகாலட்சுமி சேதுபாண்டி 1பி, 1சி, 1எஸ், செல்வி தனுஷயா அன்னராசா 2சி, 1எஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# E – Waste இலத்திரனியல் கழிவுகள்

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமானது இன்று மிகவேகமாக உலகில் வளர்ச்சியடைந்து வரும் ஒரு துறையாகவுள்ளது. இதன் வளர்ச்சியானது இன்று பல்வேறு துறைகளிலும் ஊடுருவித் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக புதிதாக உலகில் தினமும் இலத்திரனியல் சாதனங்களும், தகவல் தொடர்பாடல் சாதனங்களும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் ஒப்பீட்டளவில் புதிய சாதனங்களின் விலைகளும் உயர்ந்தளவில் இல்லை. இதனால் மக்கள் புதிது புதிதாக சாதனங்கள் சந்தைக்கு வரும் போது அவற்றைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற முதுமொழிக்கமைய புதிய, புதிய பொருட்கள் மக்களின் வீடுகளையும், மற்றும் நிறுவனங்களினையும் இடம்பிடித்துக்கொள்கின்றன. இந்தக் கட்டத்தில் பழைய பொருட்கள் பெரும் சுமையாக அல்லது கழிவுகளாக சேர்ந்த வண்ணம் உள்ளன. இந்த வகையில் இச்சாதனங்களின் பெருக்கம் காரணமாக அதாவது E –waste எனப்படும் இலத்திரனியல் கழிவுகள் ஊடாக 21ம் நூற்றாண்டில் உலகில் சுற்றாடலுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் இக்கட்டுரையானது E –waste எனப்படும் இலத்திரனியல் கழிவுகள் என்றால் என்ன? அவற்றால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கங்கள், அவற்றை எவ்வாறு மீளப்பயன்படுத்துதல் இத்தாக்கங்களில் இருந்து விடுபடுவதற்கு நாடுகள் உள்நாட்டு ரீதியாகவும், வெளிநாட்டு ரீதியாகவும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் என்பனபற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

## e –waste என்றால் என்ன?

e –waste என்பது காலாவதியான அல்லது காலத்திற்குக் காலம் பாவனையிலிருந்து விலக்கப்படும் கணினிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், செல்லிடப்பேசிகள், பிறின்டர்கள், PDAகள், Key board, Mouse, Fax machines, Stereo உபகரணங்கள் என்பனவற்றைக் குறிக்கும். இக்கழிவுகளும் இவற்றில் கலந்துள்ள இரசாயனப் பதார்த்தங்களும் இன்று சுற்றாடலுக்கு புதிய பல பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் மட்டுமல்ல, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் இது இன்று பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் தொழிநுட்ப முன்னேற்றம் காரணமாக அவை புதிது புதிதாக பல பொருட்களை உற்பத்தி செய்கின்றன. இதன் காரணமாக அங்கு e –waste உருவாகின்றது. ஆனால், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இவற்றின் பெருக்கம் அவ்வளவு அச்சுறுத்தலாக இல்லாவிடினும், வேறு வகையான பிரச்சினைகளை அவை எதிர்நோக்குகின்றன. உதாரணமாக Out dated Computers மற்றும் இதர இலத்திரனியல் பொருட்களை இந்நாடுகள் இறக்குமதி செய்கின்றன. இதனால் ஏற்படும் தீங்குகளை இன்று இந் நாடுகள் தாங்கிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக இந்நாடுகளில் காணப்படும் பொருத்தமற்ற அல்லது பாதகமான வேலை நிலைமைகளாலும், பலவீனமான தொழிலாளர் தரங்களாலும் (Weak Labour Standard) e waste காரணமாக பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. இந்நாடுகளில் மேலைநாடுகளால் கைவிடப்பட்ட இப்பொருட்களுக்கு இங்கு புத்துயிர் அளிக்க முற்படுவதோடு, பழைய பொருட்களிலிருந்து பகுதிகளை (Parts) வேறாக்கி விற்பனை செய்வதுடன் வேறு தேவைகட்கும் பயன்படுத்துகின்றனர். உலகில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாவனையில் மிகக்கூடுதல் வரிசையில் பத்தாவதாக உள்ள (Top 10 ) அவுஸ்ரேலியாவில் 9.2 Million கணினிகள் பாவனையிலுள்ளன. 2.1 மில்லியன் கணினிகள் வருடாவருடம் புதிதாக பாவனைக்கு வருகின்றன. 3 மில்லியன் கணினிகள் தமது வாழ்நாளை முடிவுக்குக் கொண்டுவருகின்றன. இந்நிலையில் உலகில் ஒரு நாட்டில் மட்டும் ஏற்படும் இலத்திரனியல் கழிவுகளின் பெருக்கத்தினை கற்பனை செய்து பார்க்க முடியுமா?

## e –waste இன் தாக்கம் என்ன?

இலத்திரனியல் பொருட்களிலுள்ள இரசாயனப் பதார்த்தங்களை அகற்றுதல் மிகவும் கஷ்டமானது என்பதுடன் அதிக காலத்தினை உறிஞ்சும் செயற்பாடுகள் ஆகும். ஆகவே மீள்சுழற்சியில் ஈடுபடும் பல நிறுவனங்கள் இம்முயற்சியினைக் கைவிட்டுள்ளன. மேலும் இவற்றினை கைகளால் செய்ய முற்படும் போது பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியும் உள்ளது. தொழிலாளர்கட்கு ஆபத்தில்லாத recycling செயற்பாடு மிகவும் விலை உயர்ந்ததாகவுள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்த recycling பிரச்சினைக்காக e waste களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். அத்துடன் சிறைக்கைதிகளைப் பயன்படுத்தியும் இதனை மேற்கொள்கின்றனர். எனினும் இலத்திரனியல் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் குறைந்தளவு இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்துமாயின் இவற்றை recycle பண்ணுவது இலகுவானதாக அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Social Union -2008



## Maths & Science Union -2008



## English Union -2008



## Tamil Union -2008



## School Hindu Association -2008



## School Christian Union -2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E waste ஆனது இன்று ஒரு பாரிய பிரச்சினையாக இருப்பதன் காரணத்தினை மிகவும் சுருக்கமாகக் குறிப்பிட்டால்.

1. மிகத் துரிதமான தொழிநுட்ப மாற்றம்
2. இலத்திரனியல் பொருட்களின் மிகக் குறைந்த ஆரம்பச் செலவு (Low level Initial Cost)
3. பொருட்களின் குறைந்தளவிலான பாவனைக் காலம் என்பவற்றினைக் குறிப்பிடலாம்

இக் காரணங்களினாலேயே தான் e waste என்பது உலகிற்கு மாபெரும் அச்சுறுத்தலாகவுள்ளது. உண்மையில் e waste பிரச்சினையைக் கட்டுப்படுத்த நாடுகளில் சட்ட திட்டங்கள் வரைவுகளாகவுள்ளன. ஆனால் அவற்றைப் பிரயோகிக்க முன்னர் உள்ள நிலைமைகள் திருப்தியளிப்பனவாக இல்லை. மீள்சுழற்சியை ஒன்று சேர்க்கும் முறைமை, சட்ட ஒழுங்கமைப்புகள், நிறுவன ரீதியான ஒழுங்கமைப்புகள் என்பன திருப்திகரமாக இல்லை.

சீனாவில் சில கண்ணாடிப் பொருட்களை விவசாயத்திற்குப் பயன்படும் ஆற்றுநீரில் கழுவுகின்றனர். அதுமட்டுமன்றி ஆற்றுக்கு அண்மையில் Acid போன்ற பல்வேறு நச்சு இரசாயனங்கள் நிறைந்த பொருட்களை புதைக்கின்றார்கள். மற்றும் வயர் போன்ற பொருட்களை திறந்த வெளிகளில் எரிக்கின்றார்கள். இவை dioxins, Furans போன்றவற்றை வெளியிடுகின்றன. இலத்திரனியல் பொருட்கள் பலவகையான நச்சுப் பதார்த்தங்கள் அல்லது பொருட்களைக் கொண்டன. அவை சூழலுக்கு மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்தவல்லன.

அபிவிருத்தியடைந்த நாடுகள் வறிய நாடுகட்கு ஏற்றுமதி செய்த பின்னருள்ள e waste கழிவுகளை எரிக்கின்றன அல்லது புதைக்கின்றன. இந்நடவடிக்கைகளின் தாக்கமானது பல்வேறு விளைவுகளைக் கொண்டுள்ளன. Computer Mother Board இலுள்ள (beryllium), மற்றும் cardium எனப்படும் Computer chipset உள்ள இரசாயனச் சேர்வை, Laser printer இலுள்ள Toner இலுள்ள இரசாயனங்கள் என்பன மிகவும் நஞ்சானவை. அத்துடன் இவை Cancer போன்ற கொடிய நோய்களுக்கும் காரணமானவையெனக் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் Floppy Disk இலுள்ள chromium எனப்படும் இரசாயப் பதார்த்தம் Computer Monitor, Battery இலுள்ள Lead என்பன மனித சுகாதாரத்திற்கு மிகவும் தீங்கானவை. ஒரு சராசரி 15" Monitor ஆனது 5 அவுன்ஸ் Lead இனைக் கொண்டுள்ளது. வெளிநாட்டிலுள்ளவர்கள் பாவித்த Laptop Computer களை இங்கு எமக்கு அனுப்புகின்றனர். இது cardium எனப்படும் நச்சு இரசானயச் சேர்வைகளைக் கொண்டது.

## மீள்சுழற்சியும் இலத்திரனியல் கழிவுகளும் (Recycling and e waste)

பல e - waste மீள்சுழற்சிக்குட்படுத்த முடியாதவை. சுமார் 10% க்கும் குறைவான கைவிடப்பட்ட கணினிகளே வளர்ச்சியடைந்த நாடுகளில் மீள் சுழற்சிக்குட்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் இந்நாடுகள் நல்லதொரு தந்திரத்தினைக் கையாள்கின்றன. அதாவது கீழ்க் கட்டுமாண வளர்ச்சிமட்டம் (Low level Infrastructure) குறைந்த மட்டத்தில் இருக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. அவற்றின் மொத்த e -waste களில் 50% - 80% வரையிலான பொருட்கள் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உதாரணமாக சீனா, நைஜீரியா போன்ற ஆபிரிக்க நாடுகட்கு இவை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பொதுவான e-waste பொருட்கள் பல காணப்பட்டாலும் பின்வரும் பொருட்கள் மீள் சுழற்சிக்குட் படுத்தப்படலாம் என குறிப்பிடப்படுகின்றது.

1. Cathode Ray Tube Monitors
2. Televisions
3. Laptop Computer
4. Computer Processor
5. Peripheral equipments (mouse, keyboard)
6. Printers
7. Fax machine
8. Cell phones
9. Stereo equipments
10. Telephones

## Recycling e-waste from the home.

பல்வேறு வகையான இலத்திரனியல் பொருட்களை வீட்டுமட்டத்தில் மீள்சுழற்சியில் பயன்படுத்தப் படமுடியும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்கென மேலை நாடுகளில் சட்டங்கள் அமுலில் உள்ளன. நகரங்களின் e-waste களை இலகுவாக ஒன்று சேர்ப்பதற்கு அவை பல திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதன் கீழ் பாவித்த பல இலத்திரனியல் பொருட்களை சிறிய படிமுறைப்படுத்தலுடன் வீட்டு மட்டத்தில் பயன்படுத்தலாமெனக் குறிப்பிடப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Recycling e-waste from Business

இதற்கும் பல சட்டங்கள் அமுலில் உள்ளன. அதாவது சில பொருட்களை தாமாக அவையே Recycle பண்ணவேண்டும் என அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இவற்றுக்கென புதிய முகாமைத்துவ முறைகளைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன், போக்குவரத்துத் திட்டங்களையும் அவை கொண்டிருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### Option for Reuse

நல்ல நிலையிலுள்ள கணினிகள் மற்றும் Printer, Cell phone கள் என்பவற்றை மற்றயவர்கட்கு அன்பளிப்புச் செய்வதன் மூலம் இக்கழிவுப் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் நிறுவன மட்டத்தில் இப்பொருட்களின் பாவனைக்கான தொழிநுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் e- waste பெருக்கத்தினைக் கட்டுப்படுத்தலாம்.

### Green Peace

என்னும் அமைப்பின் அறிக்கைகளின் படி e –waste recycling அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இன்னமும் முறைமைப் படுத்தப்படா ஒன்றாகக் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் recycle ல் ஈடுபடும் தொழிலாளர்கட்கு ஏற்படும் தாக்கங்கள், சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்கள், மண்ணுக்கு ஏற்படும் தாக்கங்கள் என்பன இன்னமும் உணரப்படாததொன்றாகவே காணப்படுகின்றன. Green Peace அமைப்பின் அறிக்கையானது சீனாவின் Guiyu நகரத்திலும் இந்தியாவின் டெல்லி நகரத்திலும், e waste இரசாயனப் பதார்த்தங்களுடன் வேலை பார்க்கும் இடங்களிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் 1990களில் இருந்தே இவற்றினை நிலத்தினில் போடுவதற்கோ அல்லது புதைப்பதற்கோ தடைவிதித்துள்ளன. ஐரோப்பிய யூனியன் Waste Electrical and Electronic Equipment Directive எனும் கொள்கையை கண்டிப்பாக அமுல்படுத்தி வருகின்றது. இதன் பிரகாரம் பொருட்களை உற்பத்தி செய்த உற்பத்தியாளர்களே அவற்றின் பாவனைக்காலம் முடியும் போது கழிவுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் மீள்சுழற்சி செய்வதில் உள்ள அதிகூடிய செலவு, மற்றும் கஷ்ட நிலைமை, என்பன காரணமாக பாவிக்கப்பட்ட பெருமளவு இலத்திரனியல் பொருட்கள் சீனா, கென்யா, இந்தியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏனெனில் இந்நாடுகளில் காணப்படும் தாழ்ந்த மட்டத்திலுள்ள சுற்றாடல் நிலைமைகள், வேலை நிலைமைகள், காரணமாக அக்கழிவுகள் ஒரு வகையில் இந் நாடுகட்கு இலாபகரமானதாகவும் காணப்படுகிறது. உண்மையில் தரமான முறையில் e waste மீள் சுழற்சிக்குட்படுத்தப்படுமாயின் அது மிகத்தரமான மூலப் பொருட்களாக இருக்கும்.

## Recycling அண்மைக்காலப் போக்கு

### ஐரோப்பிய யூனியன்

1990களில் ஐரோப்பியயூனியன் ஆனது e waste பொருட்களை (Landfill) நிலத்திற்கு அடியில் புதைப்பதற்கு முற்றாகத் தடைசெய்து விட்டது. இதிலிருந்து e waste processing industry ஒன்று இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. சுவிற்சலாந்தில் முதலாவது e waste system 1991ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது குளிர்சாதனப் பெட்டிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் பின்னர் அனைத்து இலத்திரனியல் பொருட்களும் இந்த முறைமையின் கீழ் கொண்டுவரப்பட்டன. 1998ம் அண்டில் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் பிரகாரம் இரண்டு உற்பத்தியாளர் பொறுப்பு அமைப்புகள் இங்கு நிறுவப்பட்டன. SWICO என்பது e waste கழிவுகளுக்கும், SENS என்பது மின்சாதனப் பொருட்களுக்கும் பொறுப்பாக இருந்தது. இந்த ஒழுங்கமைப்புகளின் பிரகாரம் தலாஒருவருக்கு 10kg க்கு மேலான e waste வருடமொன்று மீள் சுழற்சிக்குட்படுத்தப்பட்டது.

இதே போன்ற திட்டங்களை 1996 - 2002 காலப்பகுதியில் ஐரோப்பிய யூனியனும் Waste Electric and Electronic Equipment Directive ( WEEE) என்ற திட்டத்தின் கீழ் அமுல்படுத்தியது. இத்திட்டமானது Extended Producer Responsibility – (EPR) என்ற திட்டத்தின் கீழ் இலத்திரனியல் பொருட்களின் வாழ்நாள் முடிவடையும் போது அவற்றுக்கு அவையே பொறுப்புக்கூறவேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் பிரகாரம் 2006ம் ஆண்டிலும் அதன் பிற்காலத்திலும் ஐரோப்பிய யூனியனில் ஆகக் குறைந்தது தலா ஒருவருக்கு 4kg e –waste வருடமொன்றுக்கு மீள் சுழற்சிக்குட்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐக்கிய அமெரிக்கா

ஐக்கிய அமெரிக்காவிலும் இவை தொடர்பாகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியமாக CRT Monitor இனை நிலத்திற்கடியில் புதைப்பதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அதில் உள்ள கரை உலோகங்கள் நிலத்திற்கடியிலான நீரை பெருமளவில் அசுத்தமாக்கும் என்பதால் ஆகும். இதே போல கணினி Mother Board ஐ அழித்தலும் பிரச்சினைக்குரியதாகக் காணப்படுகின்றது. நிலத்திற்கடியில் புதைத்தால் நிலத்தடி தண்ணீா அசுத்தமடையும். எரிக்கும்போது காற்று மாசடைகிறது. அமெரிக்காவில் e waste மற்றும் recycle தொடர்பாக சட்டங்களும் உடன்படிக்கைகள் பல இருந்தாலும் உண்மையில் அவை அங்கு அமுல்படுத்தப்படுவது மிகவும் குறைவு. இதனால் இங்கு பெருமளவு e waste பொருட்கள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. முக்கியமாகச் சீனா இதில் பிரதான இடம் வகிக்கிறது. சீனாவில் e waste பொருட்களின் மையமெனக் கருதப்படும் Guiyu நகரத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் மிகஉயர்வான தீங்குகளைக் கொண்ட மீள் சுழற்சிக் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏற்கனவே குறிப்பிட்டபடி முறையான சட்டங்கள் மற்றும் உள்ளூர் உடன்படிக்கைகளை அமெரிக்கா பின்பற்றாததால் மீள்சுழற்சிக்கென சிபார்சு செய்யப்பட்ட 80% மான பொருட்கள் அங்கு மீள் சுழற்சிக்குட்படுத்தப்படுவதில்லை.

2004ம் ஆண்டு தொடக்கம் கலிபோர்ணியா Electronic Waste Recycling Fee எனப்படும் ஒரு கட்டணத்தினை அறிமுகப்படுத்தியது. அதன் பிரகாரம் ஒவ்வொரு புதிய Monitor இன் விற்பனைமீதும் இது விதிக்கப்பட்டது. இக்கட்டணம் Monitor இன் அளவினைப் பொறுத்து தீர்மானிக்கப்பட்டாலும், காலத்திற்குக்காலம் மாற்றியமைக்கப்பட்டது. இதேபோன்ற ஒரு திட்டத்தினை கனடாவும் பின்பற்றிவருகின்றது. 2007 ஆண்டிலிருந்து பிரிட்டிஷ் கொலம்பியா இதேபோன்ற கட்டணத்தினை புதிய தொலைக்காட்சிப் பெட்டிகள், கணினிகள் மற்றும் கணினியின் பாகங்கள்மீது விதித்து வருகின்றது.

### அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் பொறுத்தளவில் நிலைமை வேறாகவுள்ளது. இங்கு முதலில் பொருட்கள் துண்டு துண்டாக கைகளால் பிரிக்கப்படுகிறது. உதாரணமாக உலோக சட்டங்கள் (Metal frame), மின்வழங்கிகள் (Power Supplies), சுற்றுப்பலகைகள் (Circuit Boards) மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் என வேறுபடுத்தப்படுகின்றன. இதிலிருந்து வேறுபடுத்தப்பட்ட பல விலையுயர்ந்த (உதாரணமாக Computer Processor விலையுயர்ந்த உலோகங்களால் ஆக்கப்பட்டது) உலோகங்கள் என்பன வேறு உருக்கு உற்பத்தியாளர்கட்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

### e waste தீர்வு

உண்மையில் பல நாடுகளின் அனுபவங்களைப் பொறுத்தளவில் அதிகரித்துக்கொண்டுவரும் e Waste பிரச்சினையைப் பொறுத்தளவில் சரியான தீர்வாக அமைவது திரும்பப் பயன்படுத்தலே (Reuse) எனப்படுகின்றது. இவ்வுபாயமானது நியாயப்படுத்துவது யாதெனில் மீள் சுழற்சியையே ஆகும். ஏனெனில் இச்செயன்முறையானது அவ்வுபகரணத்தின் ஆயுட்காலத்தினை அதிகரிக்கின்றபடியால் ஆகும். இதனைவிடுத்து அவற்றினை ஏனையவர்களுக்கு விற்பனைசெய்யத் அனுமதித்தலானது அப்பொருட்களில் இருந்து கிடைக்கக் கூடிய உச்சப்பயனை தடைசெய்யும் செயற்பாடாகவும் அமையும். பெறுமதியுடைய இச்செயற்பாட்டுக்கெதிராக உண்மையில் விமர்சனங்களை மேற்கொள்வது அவ்வளவு நல்லதன்று. பல ஆசிய நாடுகளும் இவ்வாறே e Waste பொருட்களை மீள்சுழற்சிக்குப் பயன்படுத்த சட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும்.

- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் முறையான சூழல் தொடர்பான சட்டங்கள், ஒழுங்கு விதிகள் என்பன நடைமுறையில் இல்லை. இதனால் அபிவிருத்தியடைந்த நாடுகள் இவற்றை இந்நாடுகளுக்க இலகுவாக ஏற்றுமதி செய்கின்றன.
- ஐக்கிய அமெரிக்காவில் 50% கணினிகள் நல்ல நிலையிலுள்ளபோதே பாவனையில் இருந்து அகற்றப்படுகின்றன.

- 2010ம் ஆண்டில் அமெரிக்காவில் ஒரு பில்லியன் மேலதிகமான அல்லது கைவிடப்பட்ட கணினிகள் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. கலிபோர்ணியாவில் மட்டும் ஒவ்வொருநாளும் 6000 கணினிகள் மேலதிகமாகக் காணப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இன்று 2 : 1 என்ற விகிதத்தில் அமெரிக்காவில் கணினிகள் பாவனையிலிருந்து விலக்கப்படுகின்றன. இது இன்னமும் ஐந்து வருடங்களில் 1:1 என மாற்றமடையும். 10 மில்லியன் கணினிகள் வருடந்தோறும் விற்பனைக்கு வருகின்றன. இந்நிலையில் **முறையான திட்டங்கள், ஒழுங்குவிதிகள் கடைப்பிடிக்கப்படாவிட்டால் சூழலைத் தூய்மைப்படுத்த பல பில்லியன் பணத்தினைச் செலவிடவேண்டியிருக்குமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை.**

ஆகவே, இன்று உடனடியாக ஒருங்கிணைந்து நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய பல முக்கிய விடயங்கள் உள்ளன. அதாவது கைத்தொழில் துறை, அரச துறை சுற்றாடல் சம்பந்தப்பட்ட அமைப்புகள், மக்கள் ஒன்று சேர்ந்து e waste தொடர்பான பிரச்சினைகட்கு தீர்வு காணவேண்டியுள்ளது. இங்கு முக்கியமாக எடுக்கக் கூடிய தீர்வுகளை அல்லது நடவடிக்கைகளை இரண்டு வகையில் குறிப்பிடலாம்.

**1. Design for the environment**

உற்பத்தி செய்யப்படும் இலத்திரனியல் பொருட்களில் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் உள்ளடக்கப்படாமல் நிறுவனங்கள் தமது உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும்.

**2. Extended Producer responsibility**

உற்பத்தியாளர்கள் புதிய பொருட்களை விற்பனை செய்யமுன் பழைய பொருட்களை முறையான திட்டங்களின் அடிப்படையில் அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, சட்டங்களை மட்டும் அமுல்படுத்துவதுடன் நின்றுவிடாது உற்பத்தியாளர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளும் சேர்ந்துதான் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணல் வேண்டும். மேலும் மீள் சுழற்சிக்கான செலவுகள் ஏற்கெனவே நோக்கியபடி உற்பத்திப் பொருட்களின் ஒரு அங்கமாக இருக்க வேண்டியது முக்கியமானது. இது உற்பத்தியாளர்கட்கு ஒரு ஊக்குவிப்பாக அமைவதுடன் மிகவும் வினைத்திறனுள்ள உற்பத்திமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கோ அல்லது தேர்ந்தெடுப்பதற்கோ ஒரு தூண்டுதலாக இருக்கும்.

ஆகவே, தற்போது கூறுங்கள் உங்களின் பழைய கணினியை என்ன செய்யப்போகின்றீர்கள்?

**மா. பாலசிங்கம்**
**B. A Hons, Dip in Edu. & PGDE in IT**
**பிரதி அதிபர்**
**ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருக்கோணமலை**

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | :- | திரு. க. யோகானந்தன் | (அதிபர்) |
| உபதலைவர் | :- | திரு. த. விஜயராஜேந்திரன் | (உபஅதிபர்) |
| செயலாளர் | :- | திரு. சு. கிஷ்ணமூர்த்தி | |
| உபசெயலாளர் | :- | திருமதி. ச. சௌந்தரராஜன் | (பிரதி அதிபர்) |
| பொருளாளர் | :- | திருமதி. கி. பிரபாகரன் | (ஆசிரியர்) |

**ஏனைய நிர்வாக உறுப்பினர்கள்**

1. திரு. சு. சிவராசா
2. திரு. த. விஷ்னுதாஸ்
3. திரு. சு. இராசலிங்கம்
4. திரு. ச. சத்தியநாதன்
5. திருமதி. சு. குலசங்கர்
6. திரு. ச. சோமசுந்தரம்
7. திரு. தி. ராஜேஸ்வரன்

**கணக்குப் பரிசோதகர்கள்**

1. திரு. வி. திருச்செல்வம்
2. திரு. கௌ. மாதவராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Environmental Pollution.

Environment is the surrounding where we live. Pollution is a serious problem that we face today. There are three of types pollution that are air pollution, water pollution, soil pollution.

Air is polluted with gases and smoke. The gases which are from factories and motors vehicles pollute the air. When people burning the rubbish it also cause air pollution.

Water is polluted with pesticides and other substances. The things which are used to spread pesticides are washed in rivers and pollute the water.

Soil is polluted with pesticides and chemical fertilizer.

Scattering rubbish and litter destroy the natural beauty. Motor vehicles and machines send out poison gas and noises.

It causes global warming and destruction of ozone layer. And also it cause illnesses and kill living beings.

Water pollution cause many diseases and kill fish and other marine life.

We cannot grow foods on pollution land.

Motor vehicles are used to transportation. It transports people and goods. Factories provide employment to people and product goods. Fertilizers and pesticides are use to grow crops, but all those are causing air pollution, water pollution and soil pollution. So the things which we get benefit are the cause for pollution.

We must invent machinery to lesson the amount of pollution caused by motor vehicles and factories. Government enacts laws for it. Lets educate and direct the people to maintain pollution free Environment.

*"If we save the environment*
*The Environment will save us'*

**T.Abikeshan.**
**Grade – 08B**

உலகத்திலே கல்வி மிக முக்கியமானது மட்டுமன்று வியத்தகு மாற்றங்களையும் உண்டு பண்ணவல்லது.

நாம் நீதிபதியை தேடி எங்கும் அலையவேண்டியதில்லை நம் மனச்சாட்சிதான் நமக்குத் தலையாய நீதிபதியாக இருக்கிறது.

நாம் மற்றவரை மூடராகக் கருதக்கூடாது. ஏனெனில் நம்மை இந்த உலகம் மூடராக்கிவிடும்.

நமக்கு பெரும் பலம் நமது புத்திதான் ஏனெனில் விதியைக் கூட வெல்லக்கூடிய சக்தி அதற்குத்தான் இருக்கிறது.

பாமரனிடம் இருக்கின்ற அறிவு சிலவேளை படித்தவனிடம் இல்லாமல் இருக்கிறது. எனவே படித்தவன் என்பதற்காக தன்னை ஒரு பேரறிஞர் என எண்ணுவது தவறானது.

வாழ்க்கை என்பது ஒரு சோதனைக்களம். அங்கே ஒவ்வொரு மனிதனும் சோதிக்கப்படுகின்றான். அச்சோதனை ஒவ்வொன்றிலும் வெற்றி அடைபவன் தான் வாழ்க்கையில் மாமனிதனாகின்றான்.

அறிவுள்ள புத்தகம் உயிருள்ள நண்பன்

**சே. சுகிர்தா, தரம் - 7**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Computer.

A Computer has several essential components. It has a machine with a monitor, a key board, a mouse and a Central Processing Unit (CPU) or systems unit. This is what is referred to as a computer.

The monitor is like the screen on television which displays all visual. It is also called the Visual Display Unit (VDU).

The key board is quite similar to an electronic type writer with additional keys for new functions. It is the main device through which the operator enters the date. It has four main types of keys: data keys used to enter letters, numbers and punctuation marks, shift keys to produce capital letters, control keys to help move the cursor (pointer on the computer screen). Function keys are used to issue common commands.

The mouse got its name when its long tail – like cord was connected to the CPU. It does the services of a pointer called the 'cursor'. The mouse is divided into two segments; the left and the right. A mere press called the 'click' on any of its segments would mean a simple message or a serious command depending on the type of operation. Often the mouse rests on a pad.

The central processing unit or the systems unit is the heart of the computer. It is does the major of the instructions fed by the operator and stores the document for future reference, thus acting as a store house. These four are interdependent and therefore we get the term 'Computer System'. A system is the mechanism of working according to a set order.

The above four main components of a computer appear in various shapes and sizes. The future of computers is hard to predict. Computers of the future will be smaller, faster and more power full. They may be found in every room in your house. They may be size of a wrist watch.

Whatever the future holds, one thing is for sure computer technology will continue to change our lives. Did you know that the first computer was the man? In the good old days, people who would calculate problems in Mathematics were called computers, because the word means to count or figure out.

Computers follow instructions from humans. They can solve only the problems that people tell them to solve.

**P. Thanu.**
**Grade - 11B**

### இவற்றைத் தவிர்ப்போம்

கோபமாய் பேசினால் குணத்தை இழப்பாய்
அதிகமாய் பேசினால் அமைதியை இழப்பாய்
அதிகாரமாய் பேசினால் அன்பை இழப்பாய்
வெட்டியாய் பேசினால் வேலையை இழப்பாய்
வேகமாய் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்
ஆணவமாய் பேசினால் ஆற்றலை இழப்பாய்
அவதூறாய் பேசினால் இறையருளை இழப்பாய்

**தொகுப்பு:- செல்வி. சப்தவி தரம் - 6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரத நாட்டியத்தின் அரங்க நிகழ்வு பற்றிய நோக்கு........

ஆதிகாலத்தில் வெறும் கூத்து வடிவில் நிலவிய பரதக்கலையை 18 ம் நூற்றாண்டில் தஞ்சை பிருஹதீஸ்வர ஆலயத்தின் நாட்டிய பரம்பரையில் வந்தவர்களான பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகிய சகோதரர்கள் புதிய பாணியில் கச்சேரி வடிவமாக முதன் முதலில் உருவாக்கி தந்தவர்களாவர். முத்துசுவாமி தீட்சிதர் அவர்களின் மாணவர்களாகிய இவர்கள் ஒரு பரத நாட்டிய அரங்க நிகழ்வுகள் எவை என்பதை தீர்மானித்ததோடு அவை எந்த ஒழுங்கில் இருக்க வேண்டும் என்பதையும் "தஞ்சை நால்வர்" என்று அழைக்கப்படும் சகோதரர்களே வடிவமைத்துக் கொடுத்தார்கள்.

அரங்க அமைப்பானது சதுரம் நீண்டசதுரம் முக்கோணம் ஆகிய வடிவங்களில் அமைந்திருக்கின்றன. இவற்றில் நீண்ட சதுர அரங்கத்தினையே மிகவும் சிறந்ததாக கருதி நிகழ்வுகளை நடத்துகின்றனர். இதன் அளவு 32X32 அல்லது 28X28 முழுமையாகக் காணப்படும். அரங்கங்கள் அழகிய சிலைகளும் சித்திரங்களும், நுட்பமான கலை எழில் கொண்ட தூண்களும் கொண்டு அமைக்கப்படுகின்றன. மேலும் யானை புலி அரவம் போன்ற வடிவங்களும் சிருங்கார சித்திரங்களும் அழகிய சாளரங்களும் கொண்டு கலையழகுடன் அரங்கம் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வரங்கத்தின் இடது மூலையில் நடனக்கலையின் அதி தெய்வமான நடராஜரின் சிலை வைக்கப்பட்டிருக்கும். அரங்கத்தின் வலப்பக்கத்தில் பக்க வாத்தியக்கலைஞர்கள் இருப்பார்கள்.

இவ்வரங்க அமைப்பில் உள்ள உருப்படிகளின் ஒருங்கமைப்பை உற்று நோக்கின் முறையான கருத்தொன்று தெளிவாக புலப்படுவதை எம்மால் உணரமுடியும். ஒரு மலர்ச் செடியில் உருவாகும் அரும்பு மொட்டாக வளர்ந்து மெல்ல மெல்ல மொட்டு விரிந்து இதழாக விரியும் போது அதற்கேயுரிய நிறமும் மணமும் கொண்டு பரிணமிப்பது போல் இந்த அரங்கமைப்பிலும் ஆடலும் அபிநயமும் மெல்ல தலையெடுத்து கொஞ்சம் கொஞ்சமாக விரிந்து தத்தம் தனிச்சிறப்புடன் முழுமையாக மலர்ந்து மணம் பரப்புவது காணமுடியும். ஒரு அரங்கிலே நடைபெறுகின்ற நிகழ்வுகளாக அலாரிப்பு ஜதீஸ்வரம் சப்தம் வர்ணம் பதம் கீர்த்தனம் ஜாவளி அஸ்ரபதி தில்லானா ஸ்லோகம் ஆகியன காணப்படுகிறது. தோடைய மங்களத்தில் இறைவனை வணங்கி மேளப்பராப்தியில் களைகட்டிவிடும் பரதசதீர நடன நிகழ்ச்சி அலாரிப்பில் மலர்ந்து ஜதீஸ்வரத்தில் சூடு பிடித்து ஸ்தத்தில் அபிநயத்தில் அறிமுகப்படுத்தி வர்ணத்தில் எல்லா அம்சங்களிலும் விரிவடைந்து பின்பு பதங்களிலும் ஜாவளிகளிலும் ரஸானுபாதத்திலும் சஞ்சரித்து தில்லானாவில் விறுவிறுப்பாக சிகரமடைந்து விருத்தத்தில் மீண்டும் தெய்வத்தோடு ஒன்றிவிடும் ஓர் அழகிய சீரான முறையைக் கொண்டு விளங்கி வந்துள்ளது. நிருத்தமும் அபிநயமும் பக்குவமாகக் கலந்த இந்த நிகழ்ச்சி முறை ஆடுவோருக்குச் சோர்வளிக்காமலும் பார்ப்போருக்குச் சலிப்புத் தட்டாமலும் உருவாக்கப்பட்டதாகவும் விளங்குகிறது. அரங்கநிகழ்வுகளை எடுத்து நோக்குமிடத்து அலாரிப்பில் துளிர் விட்டு மெல்ல மலரும் நடனமாக விளங்குகின்றது.

இதனைச் சிலர் அப்பியாச நடனம் என்பர். ஆனால் செய்யப்பட வேண்டிய முறையில் செய்தால் அலாரிப்பு மிகவும் அழகாகவிருக்கும். அங்கப்பிரத்தியாங்க உபாயங்கள் அனைத்துக்கும் இதில் வேலையுண்டு இது தாள கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய தூய நிருத்த உருப்படியாகும். கடவுள் குரு சபை ஆகியோருக்கு வந்தனம் கூறுவதாக அமைந்துள்ளது. ஸ்வரங்களையே தாதுவாகவும் மாதுவாகவும் கொண்டுள்ள உருப்படி ஜதீஸ்வரமாகும். ஸ்வரங்களுக்கு ஏற்றவாறு ஜதீக்கோர்வைகள் அமைக்கப்பெறுவதால் ஜதீஸ்வரம் என்ற பெயர் இடம்பெறுகின்றது.

முதலில் ஸ்வரத்துடன் ஆரம்பித்து பின்னர் சிறு ஜதியும் தீர்மான முகமாக தொடரும். தீர்மானம் என்பது சில அடவுகளாக கொண்டு ஒரு தாளத்தின் கற்பனையுடன் சேர்க்கப்பட்ட கோர்வையாகும். புல இராகங்களிலும் தாளங்களிலும் ஜதீஸ்வரங்கள் கையாளப்பட்டு வருகின்றன. ஒரு நடன நிகழ்ச்சியில் முதலாவதாக பாவம் தோன்றும் உருப்படி சப்தமாகும். சப்தம் என்றால் "சொல்" என்று பொருள். அர்த்தம் நிறைந்த சாகித்தியமும் சிறு ஜதீக்கோர்வைகளும் இணைந்து வரும் சப்தம் சாதாரணமாக மிஸ்ரசாபு தாளத்தில் இராக மாளிகையில் அமைந்திருக்கும். பாடல்களின் கருத்துக்கள் கிருஸ்ண லீலை சிவபெருமான் இராமர் அல்லது முருகனின் ஆற்றல்கள் அரசனின் பெருமையை விளங்குவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கும் பரத நாட்டியத்தில் மிகவும் முக்கியமான உருப்படி வர்ணமாகும். வர்ணம் நாட்டியத்தின் இதயம் போன்றது. இசையில் தானவர்ணமென்றும் நடனத்தில் இதே உருப்படியை பதவர்ணம் என்றும் கூறுவர். இவ்விரண்டிற்கும் ஒருமைப்பாடு நிறைய இருப்பினும் வேறுபாடு உண்டு. இது சௌக்ககாலத்தில் பாடியாடுவதற்கு ஏற்றவாறு அமையப்பெற்றிருக்கும். சஞ்சாரி பாவங்களிற்கு இடமளிக்கக்கூடிய கருத்துக்களை ஊகிக்கும் படியாக பாடல்கள் அமைந்திருக்கும்.

ஓவ்வொரு சாகித்தியத்திற்கும் இடையில் ஜதீக்கோர்வைகள் சேர்க்கப்பட்டு ஆடப்படுகிறது. இது இசை பாவம் நடனம் ஆகிய மூன்று அம்சத்திலும் மிகச் சிறப்பாக விளங்கக் கூடிய உருப்படியாகும். நாத்தகியின் அயராத அப்பியாசத்தை மெருகுபடுத்தி காட்டுவதோடு நாயகா நாயகி பாவங்களில் பொதுவாக அமைந்திருக்கும் கீர்த்தனை என்னும் சொல் இசைப்பாடல் புகழ்ச்சி எனப்படும். இவை பக்தி சுவை நிறைந்ததாக காணப்படுகிறது. பல்லவி அனுபல்லவி சரணம் ஆகிய மூன்று பகுதிகளை கொண்டது. சில கீர்த்தனங்களில் சொற்கட்டு அணிகளிற்கு அடவுகள் செய்யப்படுகின்றன.

அத்துடன் கற்பனாஸ்வரங்கள் பாடப்பட்டு அதற்கும் அடவுக்கோர்வைகள் செய்யப்படுகின்றன. பல உருப்படிகள் வீர உணர்ச்சியை தோற்றுவிப்பதாகும். பெரியோர்களின் குணங்கள் நாட்டுவளம் இனத்தின் பெருமை மொழி கலை கலாச்சாரம் ஆகியவற்றை குறித்து பாடப்பட்டு இருக்கின்றன. பதங்களைப் போன்று பாவத்தை ஆரம்பமாக கொண்ட உருப்படி அஷ்டபதி ஆகும். இதில் பல்லவி சரணம் என இரு பிரிவுகளே ஜெய தேவ சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டவை. இவ் அஷ்டபதிகள் எட்டு சரணங்களைக் கொண்டவை. இக்காரணங்களால் அஷ்டபதி என அழைக்கப்படுகிறது. நாட்டியத்தை அழகுபடுத்தும் ரஸங்களும் பாவங்களும் நாயக நாயகி பேதங்களும் அஷ்டபதியில் வர்ணிக்கின்றன. கண்ணபிரானையே பாட்டுடைத் தலைவனாக கொண்டு விளங்குகின்றன.

வெறும் சிறுங்கார சாகித்தியத்தையுடைய உருப்படி யாவளி ஆகும். சாதாரண வர்ணமெட்டுக்களுடன் ஆதி ரூபக தாளங்களே அமைந்திருக்கின்றன. பல்லவி அனுபல்லவி சரணம் ஒரே தாதுவில் பாடப்படும். கேட்டவுடனே. மனதைக்கவரும் இசையில் அமைந்துள்ளதால் பெரும்பாலும் எல்லோரும் விரும்பக் கூடியதாக உள்ளது. அனேகமான நாயகிகள் பாடும் யாவளிகள் காணப்படுகின்றன. அபூர்வமாகவே நாயகன் பாடும் யாவளிகள் இருக்கின்றன. நிருத்தத்தின் இறுதியில் இடம்றெும் அழகான விரைவான துரிதம் நிறைந்த கடைசி நிகழ்ச்சியாக தில்லானா காணப்படுகின்றன. பொதுவாக இது சிறுபாட்டாக இரு வரிகளுடன் இருக்கும். இங்கு அபிநயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. கருத்தற்ற சொற்கட்டுகள் அழகான இராகத்தில் கடைசிவரை பாடப்படுகின்றன. இதன் முடிவில் இறைவன் பெயரில் அல்லது நாயகன் பெயரில் புகழ்ச்சியாக பாடப்படுகின்றது. எப்பொழுதும் மெய் அடவுடன் ஆரம்பமாகி மூன்று காலங்களிலும் செய்யப்பட்ட பின் சிக்கலான ஜதீ பேதங்களுடைய கோர்வையாக அமையும்.

ஸ்லோகம் தமிழில் விருத்தம் எனப்படும். அரங்க நிகழ்வில் ஈற்றில் இடம்பெறும் சிறிய சமஸ்கிருத செய்யுள் என்பதோடு பக்தி ரசம் ததும்பும் தாளம் பக்க வாத்தியம் இல்லாமல் செய்யக் கூடிதாக உள்ளது. ஸ்லோகங்கள் தெய்வங்களின் பெயரிலே இடம்பெறும் இப் பரத நாட்டிய அரங்க நிகழ்வுகளை அரங்கத்திற்கு கொண்டுவருவதன் மூலம் மாணவரிடையே கலையறிவு நல்லொழுக்க கலாசார பண்பு உள்ளக்கருத்தினை வெளிப்படுத்தும் ஆற்றல் பாத்திரத்தின் சிறப்பான இயல்புகளையும் அறிந்து நயத்தல், நடனத்திற்குத் துணையாக கருவிகள் ஒப்பனைகள் ஆகியவற்றை அறிதல், தெய்வம் குரு சபை ஆகியோருக்கு மரியாதை செலுத்துதல் ஆகியவற்றை வளர்க்க முடியும்.

இதன் மூலம் நடன ஆசானின் திறமையும் நடனமாதுவின் திறமையும் ஏனையோருக்கு எடுத்துரைக்கப்படுகின்றது. இவ்வாறே அரங்க நிகழ்வுகள் யாவும் ஓர் அமைப்புடன் இன்று நிகழ்த்தப்பட்டு வருவதை காணமுடிகின்றது.

செல்வி:-உதயசாந்தி இராசையா
(நடன ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Late Veteran Deputy Principal

# Mrs. Sarojinidevi Muthusami



- She was born on 18th March 1950
- Her native place is Sampalthivu
- She was a Science trained teacher
- She Serred as the Deputy Principal
- Demise 31.03.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BENEFICIAL LIBRARY

Library is a collection of Books , Magazines , News papers, Booklets and ect. Reading is the secret of success. A person who opposes reading is an unsatisfactory man . If you want a silent place for reading , you come to the library.

A useful book is a best friend of our mind . The book is unrivalled and unquestionable pedagogue of us. We get syllabus items, general messages , medicinal notification and e.c.t.

We have a hectic life in the 21st century. Some time we haven't time to go to the library. But this isn't a problem. The library has lending facility which is a stipulation. So you borrow the book and return after reading it. Some libraries have the internet facility.

What a nice opportunity we have! Alas we don't know about it! Dear hearts please try to build the reading habit. Our life is a journey just womb to tomb. Reading is the best way between the cradle and grave.

**Master s. suthakaran**
**G.C.E (O/L) 2008**

# AN ELEPHANTS LOYALTY

Many years ago Alexander, the king of mace donia, invaded INDIA. At one stage, he was oppsed by the huge army of king porus. Porus was six feet high and rode on the biggest elephant. The elephant bestowed the greatest care on its royal master.

While it was still strong it defended him against his enemy. It repulsed the enemy attacks time after time, porus was severely wounded by the arrows. He was about to faint. Seeing that the royal master might fall off form its back, the elephant lowered itself to the ground. Then it gently extracted the arrows from the body. Of porus with its trunk. It was loyal to its last breath. Its valor and faith fullness deserve to be written in letters of gold.

**K.Janarthany**
**Grade-11B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அடைவுகள்

## தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்

### Year-5 Scholar Ship Examination

தோற்றியோர் தொகை சித்தியடைந்தோர் 100க்கு மேற்பட்ட புள்ளி எடுத்தோர்

| | | | |
|---|---|---|---|
| 2005 | 32 | 05 | 11 |
| 2006 | 26 | 06 | 10 |
| 2007 | 29 | 03 | 10 |
| 2008 | 31 | 09 | |

### க.பொ.த சாதாரண பரீட்சை

**விஞ்ஞானம்**

| | தோற்றியோர் தொகை | சித்தியடைந்தோர் |
|---|---|---|
| 2005 | 27 | 16 |
| 2006 | 23 | 12 |
| 2007 | 30 | 17 |

**கணிதம்**

| | தோற்றியோர் தொகை | சித்தியடைந்தோர் |
|---|---|---|
| 2005 | 27 | 16 |
| 2006 | 23 | 12 |
| 2007 | 30 | 17 |

### தரம்-09 Provincial Level Grade-09

**விஞ்ஞானம்**

| | தோற்றியோர் தொகை | சித்தியடைந்தோர் |
|---|---|---|
| 2005 | 29 | 27 |
| 2006 | 40 | 39 |
| 2007 | 35 | 26 |

**கணிதம்**

| | தோற்றியோர் தொகை | சித்தியடைந்தோர் |
|---|---|---|
| 2005 | 29 | 29 |
| 2006 | 40 | 37 |
| 2007 | 35 | 28 |

**செல்வி. சுப்பிரமணியம் வாமதி - 1994 - (கிழக்குப் பல்கலைக்கழகம்)**

**செல்வி. துரைநாயகம் சிவாஜினி - 1996 - (கிழக்குப் பல்கலைக்கழகம்)**

**செல்வி. சித்திரவேல் சந்திராநிதி - 1995 - (வவுனியா கல்லூரி)**

**செல்வி நடேசபிள்ளை சந்தியானந்தி 1996 - (வவுனியா கல்லூரி)**

**செல்வி. J.V.O. ஜெனிற்றா விக்டரின் - 2007 (கிழக்குப் பல்கலைக்கழகம்)**

**செல்வி. M.O. கிறிஸ்ரினா ஜெனிபர் - 2006 (க. கல்லூரி, மட்டக்களப்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BEST PERFORMANCE IN G.C.E (A/L) EXAMINATION

| YEAR | Best Results | School Rank | Name |
|---|---|---|---|
| 2005 | 2B. 1C | 1 | Miss.S.Jeyanthini |
| 2006 | 1B. 2C | 1 | MISS.M.Christina Jennifer |
| 2007 | 1A. 2B | 1 | Miss.J.Jenitta Victarin |

## BEST PERFORMANCE IN G.C.E (O/L) EXAMINATION

| YEAR | Best Results | School Rank | Name |
|---|---|---|---|
| 2005 | 7A . 2B. 1S<br>6A. 2B. 2C<br>5A. 3B.2C | 1<br>2<br>3 | Miss. P.Kasthuri<br>Miss.T.Tharmayalini<br>Master.T.Thishanth |
| 2006 | 7A.2B.1W<br>6A.3B .1W<br>4A.1B.3C. 2S | 1<br>2<br>3 | Miss.P.Roshalini<br>Miss.R.Nirosala<br>Miss.P.Thivajini |
| 2007 | 5A. 4B. 1S<br>3A.3B. 3C.1S<br>3A. 2B. 4C.1S | 1<br>2<br>3 | Miss.P.Premila<br>Miss.M.Thevasangeetha<br>Miss.T.Kirushanthi |

## 2004 மெய்வல்லுனர் பெறுபேறுகள்

| நிகழ்ச்சி | வலயம் | மாணவர் பெயர் |
|---|---|---|
| U - 19 பெண் உயரம் பாய்தல் | 2 | பத்மநாதன் சுஜித்தா |
| U - 19 பெண் 100M | 2 | பத்மநாதன் சுஜித்தா |
| U - 19 பெண் 200M | 2 | பத்மநாதன் சுஜித்தா |
| U - 19 பெண் 4 X 100M | 2 | பத்மநாதன் சுஜித்தா<br>அன்னராசா அனிதா<br>மன்மதன் மேரிகிறிஸ்ரெலா<br>பாலசிங்கம் நிரோசினி |
| U - 15 பெண் 200M | 2 | சிவஞானசுந்தரம் சிவதர்ஷினி |
| U - 11 பெண் 75M | 2 | நகுலேஸ்வரன் டிலுக்ஷியா |
| U - 11 ஆண் உயரம் பாய்தல் | 2 | தேவராசா கோபிஷன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2005 மெய்வல்லுனர் பெறுபேறுகள்

| நிகழ்ச்சி | வலயம் | மாணவர் பெயர் |
|---|---|---|
| U - 21 ஆண் 400M | 3 | தாமோதரம்பிள்ளை மயூரன் |
| U - 21 ஆண் 100M | 2 | நடராஜா கீர்த்திராஜ் |
| U - 21 ஆண் 200M | 3 | நடராஜா கீர்த்திராஜ் |
| U - 21 ஆண் 100M | 3 | சித்திரவேல் வசந்தன் |
| U - 21 பெண் 100M | 1 | பத்மநாதன் சுஜித்தா |
| U - 21 பெண் 200M | 2 | பத்மநாதன் சுஜித்தா |
| U - 21 பெண் உயரம் பாய்தல் | 1 | பத்மநாதன் சுஜித்தா |
| U - 21 பெண் 3000M | 1 | மன்மதன் மேரிகிறிஸ்ரெலா |
| U - 21 பெண் 1500M | 1 | மன்மதன் மேரிகிறிஸ்ரெலா |
| U - 21 பெண் குண்டுபோடுதல் | 3 | மன்மதன் மேரிகிறிஸ்ரெலா |
| U - 21 பெண் 3000M | 3 | அன்னராசா அனிதா |
| U - 21 பெண் 1500M | 2 | அன்னராசா அனிதா |
| U - 19 பெண் 3000M | 2 | நவரெட்ணம் வித்தியா |
| U - 19 பெண் 1500M | 3 | நவரெட்ணம் வித்தியா |
| U - 19 பெண் 200M | 3 | பாக்கியராசா கிஷாந்தி |
| U - 19 பெண் 100M | 3 | பாக்கியராசா கிஷாந்தி |
| U - 19 பெண் நீளம்பாய்தல் | 3 | பாக்கியராசா கிஷாந்தி |
| U - 17 பெண் 800M | 2 | சிவஞானசுந்தரம் சிவதர்ஷினி |
| U - 21 ஆண் 4X100M4 X 400M | 2<br>2. | நடராஜா கீர்த்திராஜ்<br>சித்திரவேல் வசந்தன்<br>தாமோதரம்பிள்ளை மயூரன்<br>மஞ்சன் லோகநாதன் |
| U - 21 பெண் 4X 100M4X 400M | 2<br>2 | பத்மநாதன் சுஜித்தா<br>மன்மதன் மேரிகிறிஸ்ரெலா<br>அன்னராசா அனிதா<br>நேசராசா நித்தியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Provincial Level Grade - 9
# Examination Results -2005 - 2007]

| YEAR | Results | Rank | Name |
|---|---|---|---|
| 2005 | 4A 3B 2C<br>3A 3B 3C<br>3A 2B 4C | 1<br>2<br>3 | Miss. P. Shailaya<br>Miss. P. Premila<br>Miss. M. Thevasangeetha |
| 2006 | 3A 6B<br>3A 5B 1C<br>3A 4B 1C 1D | 1<br>2<br>3 | Miss M. Sathurja<br>Miss. B. Thanu<br>Miss. S. Kajani |
| 2007 | 4A 4B<br>2A 4B 3C<br>1A 6B 2C | 1<br>2<br>3 | Miss. S. Lojavitha<br>Master. N. Anojithan<br>Miss. N. Kishamini |

## இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம்

| இடமாற்றம் பெற்ற ஆசிரியர் பெயரும் ஆண்டும் | | |
|---|---|---|
| 2005 | 2006 | 2007 |
| திருமதி.சி.வானதி<br>திருமதி.ஜெ.தியாகேந்திரன்<br>திரு.வே.முரளிதரன்<br>திரு.சா.அரிதரன் | திருமதி.கௌ.முரளியோகேஸ்வரன்<br>திருமதி.சு.சிவராசன்<br>செல்வி.ச.கவிதா<br>திருமதி.றோ.சிவகணேஸ்<br>திருமதி.வி.பாலேந்திரன் | திருமதி.யா.பாலேந்திரன் |

| ஓய்வு பெற்ற ஆசிரியர் பெயரும் ஆண்டும் | | |
|---|---|---|
| 2005 | 2006 | |
| திருமதி.வி.தெய்வநாயகம் | திருமதி.க.நடராஜலிங்கம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.

1. தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தின் "அச்சாணி" பரிசளிப்பு விழா மலருக்கான ஆசிச்செய்திகள் வாழ்த்துச் செய்திகள் வழங்கியவர்களுக்கும்
2. ஆய்வுக்கட்டுரைகள், ஆக்கங்கள், வழங்கியபேராசிரியர்கள் விரிவுரையாளர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர்களுக்கும்
3. பாடசாலை வரலாறு, சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் புகைப்படங்கள் தந்துதவியோருக்கும்
4. இம் மலர் வெளியீட்டுக்கு நன்கொடைகள் தந்துதவிய பெருமக்களுக்கும் உள்நாட்டு வெளிநாடுகளிலிருக்கும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளுக்கும்,
5. மற்றும் எம்மோடு துணை நின்று உழைத்த மலர்க்குழு அங்கத்தவர்கள் அனைவருக்கும்
6. என்றும் எமக்குத் தோள் கொடுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் பழையமாணவர் சங்கத்தினருக்கும் நலன்விரும்பிகள் ஆகியோருக்கும்
7. குறிப்பாக எமது பரிசளிப்பு விழாவும், நூல் வெளியீடும் சிறப்புற நடை பெறவேண்டும் என கருதி எமது பாடசாலை ஒன்று கூடல் மண்டப "திரைச்சேலை" ஒழுங்குக்காக பெருந்தொகைப் பணத்தை தந்துதவிய இலுப்பைக்குளம் "கல்விக் கரிசனை அமைப்பு" பணிப்பாளர் "போதகர் ஜெயகாந்" அவர்களுக்கும்,
8. இவ்விழாவினைச் சிறப்பிப்பதற்காக வருகை தந்த முதன்மை சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் அனைவருக்கும்.
9. மலரை சிறந்த முறையில் மிகக்குறுகிய காலத்தில் அச்சிட்டு வழங்கிய திருகோணமலை "அஸ்ராப் பதிப்பகத்தினருக்கும் நன்றி நவில்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**

**தி/ சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org